விலை: 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

கிளை நூலகம்

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
(C-3180)
Satstech Engineers
28, Stanley Road,
Jaffna. 021 222 8812

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆனி 26 செவ்வாய்க்கிழமை (10.07.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 203

# வடக்கு மக்களின் உள்ளங்களை புண்படுத்தாதீர்

## அலரி மாளிகையில் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு



(கொழும்பு) வடக்கு மக்கள் யுத்தத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகக் குறைந்தது ஒரு குடும்ப உறவினராவது யுத்தத்தில் இறந்துள்ளனர். அங்குள்ள மக்களுக்கு தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி அவர்களின் உள்ளங்களை புண்படுத்த வேண்டாம் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (23-ம் பக்...)

# மோட்டார் வாகனங்கள் தொடர்பான குற்றங்களுக்கு தண்டப்பணம் அதிகரிப்பு

(கொழும்பு) மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான 33 குற்றச்சாட்டுக்களுக்கு ஏற்கெனவே அறவிடப்பட்டு வந்த தண்டப் பணம் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிவில் விமான சேவை மற்றும் போக்குவரத்து அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு ஏற்ப இந்த தண்டப் பண அதிகரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான விசேட வர்த்தமானி அறி 23

# சுவாசக்குழாயினுள் கச்சான் வித்து சிக்கி

## 2 1/2 வயது ஆண் குழந்தை பலி

(யாழ்ப்பாணம்) கச்சான் வித்து சுவாசக் குழாயில் சிக்கியதில் இரண்டரை வயது ஆண் குழந்தை ஒன்று யாழில் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

நாவற்குழி பகுதியைச் சேர்ந்த இரண்டரை வயதுடைய நியூமார் கானகன் என்ற குழந்தையே மேற்படி பரிதாபமாக உயிரிழந்துள்ளது. கடந்த 3-ம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு குறித்த குழந்தைக்கு தந்தையார் கச்சான் கோதினை உடைத்து வித்தை 24

# வடக்கு, கிழக்கு வீடமைப்புக்கு 300கோடி நிதி

(கொழும்பு)

தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்திற்காக இந்த ஆண்டில் அரசாங்கம் ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டுள்ளது.

இதில் 300 கோடி ரூபாய் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு செலவிடப்பட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் லக்விஜய சாகர பலன்சூரிய தெரிவித்துள்ளார். 24

# நவாலி படுகொலை 23-ம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு



24

## ஒரு கோடி ரூபாய் வலம்புரிச் சங்குடன்

# கிளிநொச்சியில் இருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் வைத்து சுமார் ஒருகோடி பெறுமதியான வலம்புரிச் சங்குடன் இருவர் நேற்றிரவு கைதுசெய்யப்பட்டிருப்பதாக கிளிநொச்சி விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த இரக 23

## கொழும்பு மாநகர சபையின்

# தமிழ் உறுப்பினர் ஒருவர் நேற்று சுட்டுப் படுகொலை

(கொழும்பு)

நவோதய மக்கள் முன்னணியின் தலைவரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான எஸ்.கே. கிருஷ்ணா (வயது39) சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று காலை 7.20 24



# சிங்கப்பூரின் முதலீடுகள் இலங்கையில் அதிகரிக்கப்படும்

## சிங்கப்பூர் பிரதமர் லீன் சின் லூ

(கொழும்பு)

இலங்கை - சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்துடன் இலங்கையில் முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக சிங்கப்பூர் பிரதமர் லீன் சின் லூ தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தூதுக் குழுவினருக்கு நேற்று பகல்போசன விருந்தொன்று வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தற்போது சிங்கப்பூரில் முதலீடுகளை மேற்கொள்ளும் வெளிநாட்டுத் தொழில் முயற்சியாளர்களையும் இலங்கையில் முதலீடு செய்ய ஊக்குவிப்பதற்கான சந்தர் 23

# சீனா வழங்கிய நிதி குற்றச்சாட்டுக்கு

## மகிந்த விளக்கமளிக்க வலியுறுத்தல்

(கொழும்பு)

2015ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு சீனா நிதி வழங்கியதாக கூறப்படுகின்றமை தொடர்பில், அவர் விளக்கமளிக்க வேண்டியது கட்டாயம் என்று, ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. 23

# டெனீஸ்வரனால் மாகாணசபையில் இன்று குழப்பங்கள் ஏற்படலாம்!

## அமைச்சர் ஆசனம் கேட்டதால் குழப்பத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்

(யாழ்ப்பாணம்)

இன்றைய வடமாகாணசபை அமர்வில் தனக்கு அமைச்சர்களிற்குரிய ஆசனம் ஒதுக்கப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் பா. டெனீஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் வட மாகாண போக்குவரத்து, மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் தன்னை முதலமைச்சர் விக்னேஸ்வரன் பதவியில் இருந்து நீக்கியது செல்லுபடியற்றது என்று அறிவிக்கக் கோரி, வட மாகாண அமைச்சராக இருந்த டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் 23

# முதல்வரை பதவி நீக்க ஆளுநரால் முடியும்!

## சட்டத்துறை வல்லுநர் பிரதீபா மஹாநாம

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிடும் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனை, அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அதிகாரம் மாகாண ஆளுநருக்கு உண்டு. ஜனாதிபதியின் 23

## புலிகள் இருந்தால்தான் எமது உரிமையை தருவீர்கள் என்றால்

# விஜயகலா கூறியதில் தவறில்லை - சுமந்திரன்

(கொழும்பு)

விஜயகலா மகேஸ்வரன் விடுதலைப் புலிகளை பற்றி பேசியதில் என்ன தவறுள்ளது? அவர் மீது நீங்கள் கோபப்படுவதில் நியாயமில்லை. அவரை அப்படி பேசத் தூண்டியவர்களில்தான் நீங்கள் கோபப்பட வேண்டும். இப்படி சிங்கள மக்கள் மத்தியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறினார். அவர் இப்படி கூறிய போது, கூட்டத்தில் மய

## நாட்டில் அதிகரித்துள்ள

# குற்றங்களுக்கு அரசே காரணம்

## மகிந்த குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்துள்ள குற்றச் செயல்களுக்கு அரசே காரணம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து விலகிய விஜய

# விஜயகலாவுக்கு எதிராக வடமராட்சியில் சுவரொட்டி




(கரணவாய்)

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிரான வாசகங்களுடன் வடமராட்சியில் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'வித்தியா கொலை குற்றவாளியை காப்பாற்றிய குற்றவாளி', 'அமைச்சர் பதவியை 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும்-பீரிஸ் வலியுறுத்து

(கொழும்பு)

மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து அரசாங்கம் உடனடியாக தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தலைவரான ஜி. எல்.பீரிஸ் வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இந்த அரசாங்கமானது இன்று ஒரு நாடகத்தைத் தான் அரங்கேற்றி வருகிறது. நாட்டில் இன்று அரசாங்கம் எனும் ஒன்றே இல்லை என்பதுதான் உண்மையாகும்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் நீதியமைச்சானது பெற்றோல் மற்றும் டீசலின் விலைகள் அதிகரிக்கப்படும் என்று கூறியிருந்தது.

இந்த அறிவிப்பு வந்து 11 மணி நேரங்களுக்குள் பெற்றோலிய அமைச்சானது, ஒருபோதும் இவ்வாறு விலையேற்றத்தை மேற்கொள்ளப்போவதில்லை என்று குறிப்பிட்டது.

அனைத்து அமைச்சுக்களும் ஒரு அரசாங்கத்தின் கீழ் இருக்கும்போது, எதற்காக இவ்வாறு இருவேறு கருத்துக்களுடன் செயற்பட வேண்டும் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அனைத்து அமைச்சர்களும் செல்வதில்லையா? ஏனைய சில அமைச்சுக்கள் அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாகவா இயங்குகின்றனவா?

நாட்டுக்கு தற்போதைய சூழ்நிலையில் ஸ்தீரமான அரசாங்கம் ஒன்று அவசியம் என்பதும் சக்திமிக்க தலைவர் ஒருவர் வேண்டும் என்பதுமே அனைத்து மக்களதும் உணர்வாகும்.

ஏனெனில், தேசிய ரீதியாக மட்டுமன்றி சர்வதேச ரீதியாகவும் இந்த அரசாங்கம் நம்பிக்கையிழந்து விட்டது.

2015 ஜனாதிபதித் தேர்தலில் இருந்து, இந்த மூன்று வருடங்களில் தேசிய சர்வ தேச ரீதியாக நாடு படுமோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது. இந்த நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமெனில் அரசாங்கம் உடனடியாக தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும் என்பதுதான் எமது கருத்தாக இருக்கின்றது எனத் தெரிவித்தார். (ம)


## பகிரங்க ஏலவிற்பனை

எமது பாடசாலையின் 2017ஆம் ஆண்டுக்கான பொருட்கணக்கெடுப்பின் போது ஏல விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட சில பொருட்கள் 17.07.2018 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

-அதிபர்

யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்

(4854)



## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் திருவிழா
18.07.2018-11.08.2018

கோயில் திருவிழாக் காலங்களில் தற்காலிக கடைகள் அமைக்க விரும்புவோர் 15.07.2018 இற்கு முன்னர் கோயில் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

-ஆதீன கர்த்தா

(சி-3194)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



Quality Royal Guaranteed

நல் ஆரோக்கியத்திற்கு
"றோயல் சுத்தமான தேன்"

உங்கள் நலன் ஆரோக்கியம் கருதி "ஆய்வுகூடத்தில்" தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகின்றது.

**Packed By: Royal Industries** R

**Marketed By:** சிவா நறுமணப் பூங்கா

இல.288,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல: 021 222 2567

(C-3179)

குறிப்பு: யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


## கண்ணீர்க் காணிக்கை

கலாபூஷணம் திருமதி
**ஞானகுமாரி சிவனேசன்**



அவர்களின் மறைவுச் செய்தி
கேட்டு யாழ்.இசையுலகே
வேதனையுறுகின்றது.
கணீர் என்ற ஓங்கிய குரலில் ஒலிக்கும்
பஞ்சரத்தினக் கீர்த்தனையை
இனி எப்போ கேட்போம் என
ஏங்கி நிற்கின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(4845)

திருமதி குமுதா உமாகாந்தன் "சோமராகம்"
இசைமன்றம், நல்லூர் யாழ்ப்பாணம்.

## வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தின் அறிவித்தல்

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் கஸ்தூரியார் வீதி மாடிக்கடைத் தொகுதி அமைக்கப்பட்ட முறை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அறிக்கையிடுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை**

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட கஸ்தூரியார் வீதி மாடிக் கடைத்தொகுதி அமைக்கப்பட்ட கட்டடத்தில் ஏற்பட்ட முறைகேடுகள் தொடர்பாக என்னால் அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கை என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆராய்ந்த குழுவானது பின்வரும் முக்கியமான பரிந்துரைகளை மேற்கொண்டுள்ளது.

1.மேற்கொள்ளப்பட்ட பெறுகைகளின் நடைமுறைகள், வரைபடங்களின் அங்கீகாரம், கட்டட வேலை மதிப்பீடு, கணியப்பட்டியல், கட்டட அமைப்பு மற்றும் ஒப்பந்தம் ஆகியவை மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்திற்கும் நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்ட விதிகளுக்கும் முரணாக உள்ளதால் SMT Developers (PVT) limited நிறுவனத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை முடிவுறுத்தி, குறித்த கட்டட தொகுதியை முழுமையாக பொறுப்பேற்பதற்கு நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். வரைபடத்தின் பிரகாரம் நிறைவேற்றப்படாது இருக்கும் வேலைகளை, வழங்கப்படாது இருக்கும் கடைகளை ஒரே தடவையில் கோரி பெற்றுக்கொள்ளும் பணத்தை பெற்று வழங்குவதன் மூலம் (Premium) கிடைக்கும் நிதியைக் கொண்டு பூர்த்தி செய்யப்படுவதற்கும், அதில் மிகுதி இருப்பின் அதனை SMT Developers (PVT) limited நிறுவனத்திற்கு வழங்குவதற்குமான ஏற்பாட்டை நீதிமன்ற கட்டளை மூலம் பெறுவதற்கும் சட்ட நடவடிக்கையில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

2.மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 32க்கு முரணாக சட்ட வலுவற்ற அதிகாரக் கையளிப்பைப் பெற்று அதனடிப்படையில் எடுத்த சகல நடவடிக்கைகளுக்கும் அப்போதய முதல்வரே பொறுப்பாளியாதலால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

அத்துடன் தவறான அதிகாரக் கையளிப்பை (Delegation) வழங்கிய உறுப்பினர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மேலும் அவ்வாறே பிழையான நடவடிக்கைகளுக்கு உடந்தையாக இருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

3.இனிமேல் வாடகை ஒப்பந்தம் செய்யப்படும் போது குத்தகைக்காலம் ஐந்து வருடங்களாக மட்டுப்படுத்தப்பட்டு ஐந்து வருடங்களின் பின்னர் வாடகை மீள் மதிப்பீட்டுடன் புதுப்பிக்கப்படல் வேண்டும். வாடகை ஒப்பந்தம் கடையின் உரிமையாளரின் கோரிக்கையின் பேரில் வாரிசுகள் அல்லாதவர்களுக்கு பெயர் மாற்றிக் கொடுக்கப்படுவதற்காக 20 வருட வாடகையுடன் சபை மாற்றிக் கொடுப்பதற்கான அறிவுறுத்தலை மாகாண உள்ளூராட்சி அமைச்சர் மாநகரசபைக்கு வழங்குதல் வேண்டும். உரிமை மாற்றம் செய்யப்படும் போது வாடகைத் தொகை மீள மதிப்பீடு குறித்த காலப்பகுதியில் செய்திருத்தல் வேண்டும்.

4.பொறியியலாளரின் 18.05.2018-ம் திகதிய அறிக்கையின்படி வாடகை ஒப்பந்தம் இல்லாமலும் வாடகை செலுத்தாமலும் 3-ம் மாடியில் சிலர் குடியிருப்பாளர் தொழில் நடாத்துகின்றார்கள் என அறியப்படுகின்றது. மேற்படி குடியிருப்பாளரிடமிருந்து நிலுவையுடன் கூடிய வாடகை அறவிட உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

5.மாநகரசபை குறித்த SMT Developers (PVT) limited நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட 31.01.2011-ம் திகதிய ஒப்பந்தத்தின் பிரிவு (e) இன் பிரகாரம் ஒப்பந்த காரரினால் வாடகைக்கு விடப்படாத கடைகளுக்கான வாடகைத்தொகை ஒப்பந்தகாரரிடம் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

6.ஒய்வுநிலை நீதிபதிகளான திரு.க.அரியநாயகம் மற்றும் திரு.இ.வசந்தசேனன் ஆகியோரது அறிக்கைகளில் அவர்களினால் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

குழுவின் அறிக்கையின் படி குழுவின் பரிந்துரைகள் மக்களுக்கு இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றன. மேலும் இதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கத்திற்காக யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் அலுவலகத்தில் பிரதி எடுப்பதற்கான கட்டணத்தினைச் செலுத்தி பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடக்கு மாகாணசபை

(சி-3197)

## மரண அறிவித்தல்

அமரர்
# மருதை கிருஸ்ணசாமி
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன திணைக்கள பணியாளர்)



*4ஆம் கண்டம், பேராறு கற்சிலை மடுவை வசிப்பிடமாகக் கொண்ட மருதை கிருஸ்ணசாமி அவர்கள் 08.07.2018 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.*

*அன்னார் சுப்லட்சுமியின் அன்புக் கணவரும், நந்தகுமார், லோகேஸ்வரன், மகேஸ்வரன் (பொதிகை புத்தகசாலை உரிமையாளர்), சிவமலர், திருச்செல்வம், பிரதீபன், பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெனிற்றா, வாணி, கலைமதி, அனஸ்ரா, சுபா, ரதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசாந், ஜீர்த்தனா, ரெஷான், நிலா, கஜந்தன், அபிநயா, சயந்தன், சயந்தினி, அபிஷாலினி, கிதுர்ஷன், கோபிலாஷினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.*

*அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.07.2018) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் பேராறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**4ஆம் கண்டம், பேராறு,**
**கற்சிலைமடு.**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

(3196)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஐ.நா.சபை வாபஸ் பெற வேண்டும்

## பிரிட்டன் நேஸ்பி பிரபு வேண்டுகோள்



(லண்டன்)

இலங்கை அரசிற்கு எதிரான பிரேரணையை ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை வாபஸ்பெறவேண்டும் என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கேட்டுக்கொள்ளவேண்டும் என பிரிட்டனின் நேஸ்பி பிரபு வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐக்கிய இராச்சியத்தின் நாடாளுமன்றத் தின் புலனாய்வு மற்றும் பாதுகாப்பு குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னரே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

பிரிட்டனும் அமெரிக்காவும் பல அநீதிகளை இழைத்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் சித்திரவதையையும்,மோசமாக நடத்தப்படுவதையும் கண்டிக்க வேண்டும்.ஆனால் சில சந்தர்ப்பங்களில் அதனை தூண்டியது என அவர் தெரிவித்தார்.

காணாமல்போனோர் விவகாரம்,புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை உருவாக்குதல்,சுயாதீன உண்மை மற்றும் நல்லிணக்க குழுவை ஏற்படுத்துதல் போன்றவற்றில் சிறந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் அமெரிக்காவும் பிரிட்டனும் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை விலக்கிக்கொள்ளுமாறு மனித உரிமை பேரவையை கோரவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் நடவடிக்கைகள் ஐ.நா. பிரகடனத்திற்கும் மனித உரிமைகள் பிரகடனத்திற்கும் எதிரானவை என்பதை உணரவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். நேஸ்பி பிரபு மகிந்த ராஜபக்ஷ தரப்பினருடன் நெருங்கிய உறவுகளை கொண்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# றெஜினாவுக்கு நீதிகோரி போராட்டம் தொடர்கிறது

## மட்டக்களப்பு, புத்தளத்தில் நேற்று இடம்பெற்றது






(ஏறாவூர்)

யாழ்ப்பாணம் சுழிபுரத்தில் படுகொலை செய்யப்பட்ட சிறுமி றெஜினாவிற்கு நீதி கோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டமானது மட்டக்களப்பு நகரிலுள்ள காந்திப் பூங்காவுக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த ஆர்ப்பாட்டத்தில், சிறுவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும், அரசாங்கம் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும், அரசாங்கம் குற்றம் செய்தவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

சிறுவர்களும் பெண் களும் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படல் வேண்டும்.

இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக உரிய தண்டனை வழங்கப்படல் வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் தெரிவித்தனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் திருமதி இந்திரன் ஜெயசிலி தலைமையில் இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இருந்தும் வந்த பெண்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் றெஜினாவின் படுகொலையைக் கண்டித்தும் போதைப் பொருள் பாவனைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நேற்று திங்கட்கிழமை புத்தளத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட நாயக்கர்சேனை தமிழ் வித்தியாலய மாணவர்கள் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டம் காலை 8.00 மணிக்கு பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன் போது மாணவர்கள் பல்வேறு சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முதுகெலும்பில்லாத ஆட்சியாளர்கள் நல்லாட்சி குறித்து கடவுளிடம் முறைப்பாடு செய்ய தீர்மானம்

## நாளை காலியில் தேங்காய் உடைத்து வழிபாடு



நாட்டில் அராஜக நிலைமை ஏற்படுவதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் நல்லாட்சி அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவதற்காக, காலியில் அமைந்துள்ள சீனிகம விகாரையில் தேங்காய் உடைத்து நாளை வழிபாடு செய்யப் போவதாக ஒன்றிணைந்த எதிரணி அறிவித்துள்ளது.

இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் எங்களுக்கு வீரர் என்பது தெற்கில் உள்ளவர்களுக்கு தெரியாதென, முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூறியிருப்பது மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா இவ்வாறு கூறும்போது அமைச்சர் தயாகமவும் அருகில் இருந்திருக்கிறார். தொடர்ந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் இவ்வாறு கருத்து தெரிவிப்பதை முதுகெலும்பில்லாத ஆட்சியாளர்கள் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் எனவும் அவர் இதன் போது தெரிவித்தார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக் கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# இலஞ்சம், ஊழல் குறித்து 1398 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக 1398 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலஞ்சம்மற்றும்ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றுள் 908 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருப்பதாக ஆணைக்குழுவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பிரியந்த சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக 2768 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கை-இந்திய அரசுகளுக்கு எதிராக இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டம்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு எதிராக மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் இந்திய மத்திய மாநில அரசுகளைக் கண்டித்தும் இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர்களின் அவசர ஆலோசனைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்று இதில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதாவது இலங்கை அரசால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள 187 விசைப்படகுகளையும் 16 மீனவர்களையும் விடுதலை செய்ய வேண்டும். இலங்கை அரசால் மீனவர்களுக்கு எதிராக நிறைவேற்றவுள்ள புதிய சட்டத்திற்கு மத்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும், இலங்கை அரசால் கைப்பற்றப்பட்டுள்ள 187 படகுகளில் ஒரு படகிற்கு 25 இலட்சம் வீதம் அனைத்து படகிற்கும் நிவாரணம் வழங்க வேண்டும் போன்ற தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தனர்.

குறித்த கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் மத்திய, மாநில அரசுகளை கண்டித்தும் மீனவர்கள் நேற்று முதல் காலவரையறையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஜெயிக்குமா பெல்ஜியம்? ஜொலிக்குமா பிரான்ஸ்?

## உலக கால்பந்து அரையிறுதியில் மோதல்


பயிற்சியில் பெல்ஜியம்

**இரண்டு அணிகள்**

கால்பந்து தரவரிசையில் 'ரொப் 10' இடத்தில் உள்ள அணிகளில் உலக கிண்ணத் தொடரின் அரையிறுதிக்கு பெல்ஜியம், பிரான்ஸ் என 2 அணிகள் மட்டும் முன்னேறின. ஜேர்மனி, ஆர்ஜென்ரீனா, பிரேசில், போர்த்துக்கல், ஸ்பெயின் உள்ளிட்ட 8 அணிகள் நாடு திரும்பின.

**17 கோல்**

பெல்ஜியம்வீரர் லூகாகு கடைசியாக களமிறங்கிய 13 போட்டிகளில் 17 கோல் அடித்தார். சக வீரர்கள் கோல் அடிக்க 3 முறை உதவினார்.


பயிற்சியில் பிரான்ஸ்

உலக கிண்ண கால்பந்து தொடரின் அரையிறுதியில் இன்று பிரான்ஸ், பெல்ஜியம் அணிகள் பலப் பரீட்சை நடத்துகின்றன.

கிரீஸ்மன், மபே, போக்பா கூட்டணி மீண்டும் கைகொடுக்கும் பட்சத்தில், 12 ஆண்டுகளுக்குப் பின் பிரான்ஸ் அணி இறுதிக்கு செல்லலாம்.

'ரெட் டெவில்ஸ்' பெல்ஜியம் அணியின் துணிச்சல் ஆட்டம் தொடர்ந்தால், இறுதிப் போட்டியில் விளையாடும் கனவு நனவாகலாம்.

ரஷ்யாவில் 21ஆவது உலக கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. 32 அணிகள் பங்கேற்ற இத்தொடரில் நடப்பு சம்பியன் ஜேர்மனி லீக் சுற்றுடன் நடையைக் கட்டியது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மெஸ்சியின் ஆர்ஜென்ரீனா, ரொனால்டோவின் போர்த்துக்கல், ஸ்பெயின் அணிகள் 'ரவுண்ட் 16' சுற்றுடன் நாடு திரும்பின.

எஞ்சியிருந்த முன்னணி அணியான பிரேசிலின் கதை காலிறுதியில் முடிந்தது.

இந்நிலையில் இன்று நடக்கும் முதல் அரையிறுதியில் தரவரிசையில் 3ஆவது இடத்தில் இருக்கும் பெல்ஜியம் அணி, 7ஆவது இடத்திலுள்ள பிரான்ஸை சந்திக்கிறது.

**கிரீஸ்மன் அபாரம்**

பிரான்ஸ் 'அணி 2006க்குப் மீண்டும் அரையிறுதிக்கு வந்துள்ளது. உலக கிண்ண தொடரில் கடந்த 5 போட்டிகளில் தோற்காமல் (4 வெற்றி, 1 'சமன்') வலம் வருகிறது. 19 வயது இளம் வீரர் மபே (3 கோல்), மின்னல் வேகத்தில் பந்தை கொண்டு செல்வது, பெல்ஜியத்திற்கு கட்டாயம் சிக்கலைக் கொடுக்கலாம்.

3 கோல்கள் அடித்த அணித் தலைவர் கிரீஸ்மனுடன் பவார்ட், ஒலிவர் கிரவுட் என பல நட்சத்திர வீரர்கள் பலம் சேர்க்கின்றனர். இவர்களுடன் கோல்காப்பாளர் ஹியுகோ லோரிசும் கைகொடுக்க காத்திருக்கிறார்.

**யாருக்கு பலம்**

'பெல்ஜியம் அணி நூறு சதவீத வெற்றியுடன் அரையிறுதிக்கு வந்துள்ளது. 1986க்குப் பின் அரை யிறுதிக்கு முன்னேறிய இந்த அணி, இன்று உற்சாகமாக செயல்படலாம். பயிற்சியாளர் ரொபர்டோ மார்டினஸ் வந்த பின் களமிறங்கிய 23 போட்டிகளில் தோற்காமல் வலம் வருகிறது.

இந்த உலக கிண்ணத் தொடரில் அதிக கோல் அடித்த அணிகளில் முதலிடமும் பெல்ஜியத்துக்குத் (14) தான். ஜப்பான் அணிக்கு எதிராக 0-2 என பின்தங்கி இருந்தபோது, பயிற்சியாளர் மாற்று வீரராக களமிறக்கிய இரு வீரர்களும் கோல் அடித்தனர்.

அதேநேரம் தற்காப்பு வீரர் தோமஸ் மியுனியர், தடை காரணமாக (இரண்டு 'மஞ்சள் அட்டை') இன்று களமிறங்காதது பெரும் இழப்பு. இது அணித் தலைவர் ஈடன் ஹசார்டுக்கு சிக்கல் கொடுக்கலாம். இருப்பினும் லூகாகுவின் அசுர வேகம், கெவின் டி பிரியுனின் தாக்குதல் ஆட்டம் வெற்றிக்கு கைகொடுக்கலாம்.

**ஐரோப்பா ஆதிக்கம்**

உலக கிண்ணத் தொடரின் அரையிறுதியில் ஐந்தாவது முறையாக ஐரோப்பிய அணிகள் மட்டும் (இங்கிலாந்து, பெல்ஜியம், குரோஷியா, பிரான்ஸ்) பங்கேற்கின்றன. 2006க்குப் பின் இதுபோல நடப்பது இதுதான் முதன் முறை.

**மூன்று போட்டி**

பெல்ஜியம் அணிக்கு எதிரான இரண்டு உலக கிண்ணத் தொடர் உட்பட முக்கிய தொடர்களில் கடைசியாக மோதிய மூன்று போட்டிகளிலும் பிரான்ஸ் வென்றுள்ளது.

**ஒன்பது வீரர்கள்**

பெல்ஜியம் அணியின் 9 வீரர்கள் இத்தொடரில் கோல் அடித்துள்ளனர். இதற்கு முன் பிரான்ஸ் (1982), இத்தாலி (2010) அணிகளில் சார்பில் 10 வீரர்கள் கோல் அடித்திருந்தனர்.





## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலகம்
## ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அச்சுவேலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, பிள்ளையார் கோவில்வீதி, ஆதன இலக்கம் 63 என்ற இலக்கத்தைக் கொண்டதும் அச்சுவேலி கோவில்பற்று பத்தைமேனி இறை "நாகன் சீமா" நிலப்பரப்பு 05 கொண்ட கிராமசேவையாளர் பிரிவு: J/281, பத்தைமேனி அச்சுவேலியில் அமைந்துள்ள ஆதனத்தில் உரிமையாளர் பெயர் S. சிவபாக்கியம், M.சின்னத்தம்பி என்பவர்களது பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனத்தை பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த மயூரன் பெண் நிமாலி உரிமை கோருகின்றார்.

மேற்குறித்த ஆதனம் பொன்னுத்துரை சின்னத்தம்பியும் பெண் சிவபாக்கியமும் ஆகியோர் தங்கள் பிள்ளைகளான சின்னத்தம்பி சிவானந்தம், சின்னத்தம்பி விவேகானந்தன், சின்னத்தம்பி விபுலானந்தன், சின்னத்தம்பி சர்வானந்தன் என்பவர்களது பெயரில் உறுதி இல 2011, 1955.06.25 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் க.வ.பாலசிங்கம் அவர்களால் எழுதப்பட்டு நன்கொடையாக வந்தடைந்தது.

அவ் ஆதனம் 1981.07.19ஆம் திகதி உறுதி இல 6803 நொத்தாரிஸ் ம.ஏகாம்பரநாதன் என்பவரால் சின்னத்தம்பி சிவானந்தம், சின்னத்தம்பி விவேகானந்தன் ஆகிய இருவருக்கும் பிரிவிடல் செய்யப்பட்டது.

அவ் ஆதனத்தை பொன்னையா லோகேஸ்வரன் பெண் ஞானேஸ்வரி அவர்கள் தங்கள் மகன் லோகேஸ்வரன் நிமலனுக்கு தமது கொள்விலையும் எவ்வித பிசகு தடையுமற்ற நீண்டகால ஆட்சியும் என வெளிப்படுத்தி உறுதி இலக்கம் 94மூலம், 1998.06.09 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் K.சபாரட்ணம் அவர்களால் எழுதப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது.

குறித்த ஆதனத்தை லோகேஸ்வரன் நிமலன் என்பவர் தனது பெற்றோர் ஆகிய லோகேஸ்வரன் பெண் ஞானேஸ்வரிக்கு நன்கொடையாக உறுதி இலக்கம் 9895 மூலம், 2009.05.11ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் து.பாக்கியநாதன் அவர்களால் எழுதப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது.

அவ் ஆதனத்தை லோகேஸ்வரன் பெண் ஞானேஸ்வரி,லோகேஸ்வரன் நிமலன் ஆகியோர் முதலாம் பெயரின் மகளும், இரண்டாம் பெயரின் சகோதரியுமாகிய மயூரன் பெண் நிமாலிக்கு நன்கொடையாக உறுதி இலக்கம் 14370 மூலம், 2015.12.14 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிஸ் து.பாக்கியநாதன் அவர்களால் எழுதப்பட்டு நன்கொடையாக வழங்கப்பட்டது.

மேற்படி அச்சுவேலி கோவில்பற்று பத்தைமேனி இறை "நாகன் சீமா" நிலப்பரப்பு 05ம் கொண்ட ஆதனத்திற்கு எல்லைகள்

கிழக்கு :-நன்கொடை பெறுபவரின் ஆதனம்

வடக்கு :-விமானநிலைய வீதி

மேற்கு :-றோட்டு

தெற்கு :- சுப்பிரமணியம் கைம்பெண் இராஜேஸ்வரியின் ஆதனம்

16.02.2018 ஆம் திகதி உத்தரவு பெற்ற நில அளவையாளர் திரு.எஸ்.சர்வேஸ்வரன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 0562ஆம் இலக்க படத்தில் துண்டு 1 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேற்குறித்த ஆதனத்தை மயூரன் பெண் நிமாலி என்ற பெயருக்கு ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 2018.08.31ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மயூரன் பெண் நிமாலி என்ற பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ் விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதை அறியத் தருகின்றேன்.

தியாகராசா நிரோஷ்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு
பிரதேசசபை
புத்தூர்.
10.07.2018

(C-3193)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் தலைமையில் வடக்கின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## கோத்தபாய கூறுகிறார்



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்காலத்தில் நிறுவப்படும் அரசாங்கத்தின் மூலம், வடக்கின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், வடக்கில் அதிகரித்துள்ள அட்டூழியங்களை கட்டுப்படுத்த மீளவும் விடுதலைப் புலிகள் உருவாக வேண்டும் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனின் உரையில் ஒரு உண்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது, யுத்தம் நிறைவடைந்த நாள் முதல் 2014 ஆம் ஆண்டுவரை இவ்வாறான அட்டூழியங்கள் வடக்கில் காணப்படவில்லை என்பதே அதுவாகும்.

அந்தவகையில், விஜயகலாவின் குமுறல் போன்று வடக்கு மக்களின் பிரச்சினைகள், எதிர்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் தீர்க்கப்படும் எனத் தெரிவித்தார். (இ-7)

# வாளால் வெட்டி ஒருவர் படுகொலை சகோதரர்களுக்கு மரண தண்டனை

(கொழும்பு)

நபரொருவரை வாளால் வெட்டிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் 7 பேர் உள்ளிட்ட பிரதிவாதிகள் 9 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காலி நீதவான் மஞ்சுல திலகரத்ன, குற்றவாளிகளான முதலாவது மற்றும் 8 ஆவது பிரதிவாதிகளுக்கு நேற்று மரண தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

புஞ்சிஹேவகே சிறிலால் மற்றும் ஹெட்டியாராச்சி சுனில் ஆகிய இருவருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், 2,3,4,5,6,7,9 ஆம் பிரதிவாதிகளுக்கு எதிராக போதிய சாட்சியங்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக இவர்கள் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி, சமரவீர ஆராச்சிகே மிஹிர பிரியந்த என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டிற்கமைய, பிரதிவாதிகளுக்கு எதிராக நீதவான் அதிகுற்றப் பத்திரிகையை தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துப்பாக்கி ரவைகள் உள்ளிட்ட ஆயுதங்களுடன் பெண் கைது

(கொழும்பு)

காலி, ஊருகஸ்மங்ஹன்திய பிரதேசத்தில் துப்பாக்கி ரவைகள் மற்றும் பல ஆயுதங்களுடன், பெண்ணொருவரைக் கைது செய்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

ஊருகஸ்மங்ஹன்திய, கொஹிலவகுர பிரதேச வீடொன்றைச் சோதனையிட்டபோது, போரா ரக துப்பாக்கி ரவைகள் 09, 122 மில்லிமீற்றர் ரக துப்பாக்கி ரவைகள் 134 உட்பட மேலும் பல ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, அவ்வீட்டிலிருந்த பெண், கைது செய்யப்பட்டாரென, பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், அவ்வீட்டிலிருந்து கத்திகள், வாள்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்த பொலிஸார், கைது செய்யப்பட்ட 27 வயதுடைய பெண்ணை, எல்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-7)

## கண்டியில் கலவரம்

# அமித் வீரசிங்க பிணையில் விடுவிப்பு



(கண்டி)

கண்டி கலவரத்தின் பிரதான சந்தேக நபர் அமித் வீரசிங்க உள்ளிட்ட 10 சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்களுக்கெதிரான வழக்கு நேற்று தெல்தெனிய நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் இந்தப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி அமித் உள்ளிட்ட 10 சந்தேக நபர்களையும் 5 இலட்சம் ரூபா பெறுமதியான 3 சரீரப் பிணை மற்றும் 5000 ரூபா ரொக்கப் பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இதேவேளை அமித் வீரசிங்க மீது தொடுக்கப்பட்டுள்ள மேலும் சில வழக்குகளுக்கு இன்னும் பிணை வழங்கப்படவில்லை என்பதுடன் அவருக்கெதிரான பிரதான வழக்கிலேயே பிணை வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மார்ச்மாதம் கண்டி, திகன பகுதிகளில் இடம்பெற்ற இனக்கலவரம் தொடர்பில் பிரதான சூத்திரதாரியாக இனங்காணப்பட்டு அமித் வீரசிங்க கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## கடவுச்சீட்டு மோசடி

# இரண்டு இலங்கையர்களுக்கு சிங்கப்பூரில் சிறைத்தண்டனை

(கொழும்பு)

கடவுச்சீட்டு மோசடியில் ஈடுபட்ட இரு இலங்கைப் பிரஜைகளுக்கு, சிங்கப்பூரில் எட்டு மாதகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்துக்கு ரிய போலி கடவுச்சீட்டுகளை வைத்திருந்ததாக இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளதாக, சிங்கப்பூர் குடிவரவு சோதனை பணியகம் தெரிவித்துள்ளது.

நாகமணி கனகாதரன் மற்றும் கந்தசாமி நித்யானந்தன் ஆகிய இருவரும் குடிவரவு சோதனை பணியக அதிகாரிகளால் கடந்த மாதம் 3ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு குறித்த போலி கடவுச்சீட்டுகளை விநியோகித்த மலேசிய பிரஜையான இசான் இஸ்மயி பின் ஜசாக் என்ற நபரும் கைது செய்யப்பட்டு, எட்டு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தொழில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் குறித்த இலங்கைப் பிரஜைகள் இருவரும் சிங்கப்பூர் ஊடாக ஐக்கிய இராச்சியத்துக்கு செல்வதற்கான ஏற்பாடுகளை இலங்கையைச் சேர்ந்த ஒருவர் செய்திருந்தமையும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (இ-7)

# சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறப் போவதில்லை

## தயாசிறி எம்.பி. உறுதி



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறப் போவதில்லை என தெரிவித்துள்ள அக்கட்சியின் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜெயசேகர, சுதந்திர கட்சியிலிருந்துகொண்டே அரசாங்கத்துக்கு எதிராக செயற்படப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

சிங்களப் பத்திரிகை ஒன்றுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவர் இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், "அரசாங்கத்திலிருந்து விலகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அக்கட்சியில் இருந்துகொண்டே எதிர்க்கட்சியினரோடு இணைந்து செயற்படத் தீர்மானித்திருந்தோம்.

ஆனால் கடந்தவாரம் நடைபெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், கலந்து கொண்டிருந்த சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இணைந்துகொள்வதாக தீர்மானித்துள்ளனர்.

ஆனால் நான் தொடர்ந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலேயே இருப்பதற்கு முடிவு செய்துள்ளேன்" எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இராசி பலன்

**10.07.2018**

ஆனி 26, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு
துவாதசி பிற்பகல் 4.07 மணிவரை
ரோகினி பின்னிரவு 1.43 மணிவரை
சுபநேரம் 10.28-11.58 மணிவரை
இராகுகாலம் 2.58-4.28 மணிவரை
பிரதோச விரதம், அமிர்தசித்தம்

வளவன்

கிரகநிலை: சூரி; ராகு, புத; சனி; குரு

சந்திராஷ்டமம்: விசாகம்

**மீனம்**



இழுபறியாக இருந்த காரியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மேடம்**



யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கக்கூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**இடபம்**



பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்**



தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**கும்பம்**



தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், மனதில் தோன்றுவதை செய்வீர்கள்.

**கடகம்**



விலை உயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், தொலைதூர பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**மகரம்**



மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**சிம்மம்**



குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு**



கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**



இரவு-பகலாக பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் அதிக பிர[illegible] காட்டுவீர்கள்.

**துலாம்**



சேமிப்புக்கள் கரையக்கூடிய வாய்ப்புண்டு, மனதில் கவலைகள் தோன்றி மறையும், விட்டுக் கொடுத்துச் செல்வதால் வெற்றி கிட்டும் நாள்.

**கன்னி**



தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்முறைச் சம்பவங்களுக்கும் இராணுவத்திற்கும் தொடர்பில்லை

## யாழ்.கட்டளைத் தளபதி தர்ஷன விளக்கம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பில்லை என யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். பலாலி இராணுவ தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது, யாழில் வன்முறையில் ஈடுபடுவோருக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படுவதாக கேள்வி எழுப்பப்பட்டது. குறித்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே தர்ஷன மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

வன்முறையில் ஈடுபடுவோருக்கும் இராணுவத்தினருக்கும் தொடர்பு உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இராணுவத்தின் பின்புலத்தில் தான் யாழில் வன் முறைச் சம்பவம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுவது முற்றிலும் பொய்யான செய்தி. இவ்வாறு பொய்யான செய்திகளை வெளியிடுவோர் மீது ஒன்றை கேட்க விரும்புகின்றேன். ஆவாக்குழுவை சேர்ந்தவர்கள் என பலர் பொலிஸாரால் கைதுசெய்யப்படுகின்றார்கள். அவர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எங்கேயாவது இராணுவத்தினருக்கும் தமக்கும் தொடர்புள்ளதாக குறிப்பிட்டுள்ளார்களா? எந்த ஆதாரத்தை வைத்து இராணுவத்தின் பின்புலத்தில் ஆவாக்குழுக்கள் செயற்படுகிறார்கள் என்று கூறுகின்றனர். மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் இவ்வாறான குழுக்களுக்கு உடந்தையாக செயற்பட வேண்டிய அவசியம் எமக்கில்லை. மேலும் யாழ்ப்பாணத்தில் யுத்தம் முடிவுற்ற பின்னர் படையினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுவருவதாக பலர் போலிப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். எனினும் அவை முற்றிலும் பொய்யானவை. தற்போதைய நிலையில் யாழ்ப்பாணத்தில் படையினரின் எண்ணிக்கை படிப்படியாக குறைக்கப்பட்டு வருகின்றது. யுத்தம் முடிவுற்ற பின்னர் யாழில் சிவில் நிர்வாகத்தில் இராணுவம் தலையிடவில்லை. பொலிஸாரே சிவில் சம்பந்தமான விடயங்கள் அனைத்தையும் மேற்கொண்டு வருகின்றார்கள்.

அவர்களுக்கு உதவிகள் தேவைப்படின் பாதுகாப்பு அமைச்சுக்கு தொடர்பு கொண்டு எமக்கு இராணுவ கட்டளை தலைமையகத்தால் கட்டளை வழங்கப்பட்டால் மாத்திரமே நாம் சிவில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும். எனினும் இவ்வளவு காலத்தில் அவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை. யுத்தம் முடிவுற்ற பின்னர், நாம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டில்தான் ஈடுபட்டு வருகின்றோம்.

யுத்தம் முடிவுற்று 9 வருடங்கள் முடிவுற்றுள்ள நிலையில் இராணுவத்திடம் உள்ள தனியார் காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்கும் வேலைத்திட்டங்களில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமூக வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம் என மேலும் தெரிவித்தார். (இ-9)

## விசேட நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

விசேட டெங்கு நுளம்புக் கட்டுப்பாட்டுவாரம் எதிர்வரும் 12 ஆம் - 13 ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்கு நுளம்பு பெருகக் கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து பாதுகாக்கு முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நாளை மறுதினம் 12 ஆம் திகதி குருநகர் ஜே/ 68 கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் 13 ஆம் திகதி பசார் - ஜே/ 69, ஜே/73, ஜே/ 74 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் டெங்கு களத்தரிசிப்பு இடம்பெறும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

## 14 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

## காணாமற்போனோரின் உறவினர்களை கலந்துரையாடலுக்கு வருமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் காணாமற்போனவர்களின் உறவுகளுக்கும் காணாமல்போனோர் தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் அலுவலகத்தின் ஆணையாளருக்கும் இடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலுக்கு வருகைதருமாறு காணாமல் போனவர்களுடைய உறவுகளுக்கு குறித்த அலுவலகத்தால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (இ-9)

## பாடசாலையின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணியளவில் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் ஜி.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்வார். பரிசில்களை யாழ்.மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை பிரதி அதிபர் திருமதி யமுனா நந்தகுமார் வழங்குவார். (இ-8)

## வெட்டுக் காயத்துடன் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

(கரணவாய்)

வாள் வெட்டிற்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படும் நபர் ஒருவர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் கரவெட்டி மேற்கு பகுதியில் இடம்பெற்றதாக கூறப்படும் இச் சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த குலசிங்கம் குமார் (வயது-39) என்ற நபரே வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடுகள் எதுவும் பதியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)





## முன்பள்ளி விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடத்தைச் சேர்ந்த அமரர்களான க.நடராசா, ந.இரத்தினம் ஆகியோரின் ஞாபகார்த்தமாக அவர்களின் குடும்ப உறவுகளின் அனுசரணையுடன் ஆறுகால்மடம் அறிவொளி சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யா/ வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் அறிவொளி சனசமூக நிலையத்தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை 10 ஆம் வட்டார உறுப்பினர் எம்.எம்.எம். நிபாஹிர், உலக வைத்தியர்களுக்கான வலையமைப்பு நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் க.கபிலன் ஜே/99 வண். வடமேற்கு கிராம உத்தியோகத்தர் திருமதி றஜனிகாந்த், யாழ்.கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஜெகதாரணி சத்தியசீலன், யாழ். கரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலய ஆசிரியர் சசிரேகா சிவரூபன், வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலய அதிபர் ரூபசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-8)

## நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி துண்டுப்பிரசுரம்





(யாழ்ப்பாணம்)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிக்க வலியுறுத்தி மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலான துண்டுப்பிரசுரங்களை மக்கள் விடுதலை முன்னணியினர் நேற்று யாழ்.நகர் பகுதியில் வழங்கினர்.

1978 ஆம்ஆண்டுகொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை செயற்படுத்தப்பட்டு நேற்றுடன் 40 வருடங்களைக் கடந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை எதிர்த்து மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்றில் தனிநபர் பிரேரணை சமர்ப்பிப்பதை முன்னிட்டு குறித்த துண்டுப்பிரசுரங்களை பொது மக்கள் மத்தியில் வழங்கியிருந்தனர்.(இ-9)

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ்தான மணவாளக்கோல அலங்கார உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை 28 நாட்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் முதலாம் நாள் 108 சங்காபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து சுவாமிக்கு ஸ்நபனாபிஷேகம் வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெறும். 25 ஆம் நாள் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து வசந்தமண்டபப் பூசை நடைபெற்று ரதபவனி இடம்பெறும். 26 ஆம் நாள் பகல் தீர்த்த உற்சவம் நடைபெறும். 27 ஆம் நாள் பூங்காவனமும் 28 ஆம் நாள் வைரவ சாந்தியுடன் உற்சவம் நிறைவுபெறும். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் உரிமைகளைத் தட்டிப்பறிக்க நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்



## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

(ஏறாவூர்)

பிற சமூகங்களின் உரிமைகளை நாம் ஒருபோதும் தட்டிப்பறிக்கக்கூடாது. அதே போன்று தமிழர்களின் உரிமைகளையும், உரியவற்றையும் பிறர் தட்டிப்பறிக்க இடமளிக்க முடியாது என, தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்க மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கல்லடி உப்போடை விவேகானந்தா மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்று திங்கட்கிழமை இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், "இந்நாட்டில் ஜனாதிபதி மற்றும் பிரதமரை உருவாக்கிய பெரும் பங்கு தமிழ் மக்களுக்கும் உள்ளது. அதன் காரணமாக அரசாங்கத்தின் அனைத்து வரப்பிரசாதங்களையும் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கடந்த கால யுத்தத்தின் போது பல கொடுமைகளையும், பேரிழப்புகளையும் பெரும்பாலும் வடக்கு- கிழக்கு தமிழ் மக்களே சந்தித்தனர்.

இந்நிலையில், யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நடைபெற்ற அபிவிருத்திகளில் வடக்கு- கிழக்கு தமிழ் மக்களுக்கு சமத்துவமான அபிவிருத்தி நடைபெற்றதா? சமத்துவமான வளப்பங்கீடு வழங்கப்பட்டதா? என்று கேட்டால் நான் இல்லையென்றே கூறுவேன்.

வடக்கு - கிழக்கு இணைந்த அரசியல் தீர்வு வரவேண்டும், சமஷ்டி ஆட்சி வரவேண்டும் என்ற கோரிக்கையினை முன்வைத்தே வடக்கு - கிழக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

இந்நிலையில், தீர்வு வரும் வரையில் காத்திருக்காமல் அபிவிருத்தியையும் வளப்பங்கீட்டையும் தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுங்கள் என்று நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் கூறியிருக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வருட இறுதிக்குள் தேர்தல் அதில் எந்த மாற்றமுமில்லை

## சு.க.அமைச்சர் துமிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான எந்த தேவைப்பாடும் அரசாங்கத்திற்கில்லை. புதிய தேர்தல் முறைமையில் காணப்படும் எல்லை நிர்ணயம் போன்ற சில விடயங்கள் காரணமாகவே தேர்தலை நடத்த முடியாதுள்ளது என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேர்தல் முறைமையில் சிறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அந்த குறைபாடுகளை திருத்துவதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

ஆகவே திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய முறைமையில் தேர்தல் இவ்வருடத்தின் இறுதிக்குள் நடத்தப்படும். அதில் எந்த மாற்றமுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து 126 பெண் சிறைக்கைதிகள் மாற்றம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து 126 பெண் சிறைக்கைதிகள் அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு மாற்றப்படவுள்ளனர்.

குறித்த சிறைச்சாலை அதிநவீன தொழில்நுட்ப அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது.

வெலிக்கடை சிறையில் ஆயுள் தண்டனை மற்றும் நீண்ட கால சிறைத்தண்டனைக்கு உள்ளாகியுள்ள பெண்களே இந்த மாற்றத்துக்குள்ளாகியுள்ளனர் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் எச்.எஙி.என்.சி தனசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வெலிக்கடைச் சிறைச்சாலையில் நிலவும் அதிக நெருக்கடி நிலையைக்கருத்திற்கொண்டே இந்த சிறைக்கைதிகளின் மாற்றம் இடம்பெறவுள்ளது.

எனினும் அதிக தூரம் என்ற காரணத்தால் பெண் கைதிகளின் உறவினர்கள் இந்த சிறை மாற்றத்தை விரும்பவில்லை எனத் தெரிய வருகிறது. (இ-7)

### அரச பாடசாலைகளில்

# தரம் ஒன்றுக்கு மாணவர்களை இணைக்கும் கால அவகாசம் இன்றுடன் நிறைவு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லை இன்றுடன் நிறைவடைவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைகளில் தரம் ஒன்று வகுப்பில் உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 37 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையின் மூலம் 32 மாணவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மேலும், படைவீரர்களின் பிள்ளைகள் ஐவர் என்ற ரீதியில் மொத்தமாக 37 மாணவர்கள் ஒரு வகுப்பிற்குத் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.கவை வீழ்த்துவதற்கு யாருடனும் கைகோர்ப்போம்

## சு.க. அதிருப்திக் குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியை அரசாங்கத்திலிருந்து வெளியேற்றுவதற்காக கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்த நாம் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவையே ஆதரிக்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் பழைய முறையிலேனும் உரிய காலத்தில் நடத்தப்பட வேண்டும். தேர்தல் எந்த முறையில் நடந்தாலும் கட்சிகளின் வெற்றி தோல்விகளை தீர்மானிப்பது மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

நாம் ஐ.தே.கவின் கொள்கைளில் உடன்பாடின்மையினால் தான் தேசிய அரசாங்கத்திலிருந்து விலகினோம்.



இந்நிலையில் எதிர்வரும் தேர்தலில் ஐ.தே.கவை வீழ்த்துவதற்காக அக் கட்சிக்கு எதிராக செயற்படும் கட்சி எதுவாக இருந்தாலும் அவர்களுடன் கைகோர்க்க நாம் தயாராகவுள்ளோம். இதன் காரணமாகவே கூட்டு எதிர் கட்சியுடன் இணைய தீர்மானித்தோம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய விசேட மேல் நீதிமன்றத்தில் முதல் வழக்கு கோத்தாவுக்கு

(கொழும்பு)

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட மேல் நீதிமன்றத்தில் முதல் வழக்காக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட வழக்கை விசாரணைக்கு எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் 90 மில்லியன் ரூபாய் அரச பணத்தை தவறாக பயன்படுத்தி, தனது தந்தையான டி.ஏ. ராஜபக்ஷ நினைவு அருங்காட்சியகம் ஒன்றை நிர்மாணித்தமை தொடர்பான வழக்கே இவ்வாறு விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

இதனைத் தவிர ராஜபக்ஷ குடும்பத்தினர் சம்பந்தப்பட்ட வழக்குகள் உட்பட 10 வழக்குகளை துரிதமாக விசாரிப்பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கான பட்டியலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் மூன்று விசேட மேல் நீதிமன்றங்களை ஸ்தாபிக்க தீர்மானித்திருந்ததுடன் அதில் ஒரு மேல் நீதிமன்றம் விரைவில் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

இந்த நீதிமன்றத்தில் நடத்தப்படும் விசாரணைகளின் முன்னேற்றங்களின் அடிப்படையில் ஏனைய இரண்டு மேல் நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கப்படும்.

இது சம்பந்தமாக அமைச்சர் ராஜித சேனாரட்ன, ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துகோரள ஆகியோர் கூடி கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில், சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபரும் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரசியல் நிலைமையை சீர்குலைக்க சிலர் முயற்சி



(கொழும்பு)

சிலர் நாட்டின் அரசியல் நிலைமையைச் சீர்குலைக்க முயற்சி செய்வதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட இறுதி வரையில் ஜனாதிபதித் தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படமாட்டாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இரத்த மாற்று நடவடிக்கைகளில் நெருக்கடி

(கொழும்பு)

இரத்த மாற்று பணிகளிலிருந்து நேற்று முதல் தாங்கள் விலகுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சங்கத்தின் ஊடக பேச்சாளர் சமந்த ஆனந்த இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய இரத்த மாற்று சேவையின் பணிப்பாளர் மருத்துவர் ருக்ஷான் பெல்லனகேவின் பல்வேறு மோசடி செயற்பாடுகள் காரணமாக இரத்த மாற்று நடவடிக்கைகளில் நெருக்கடிகள் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக தெரிவித்தார்.

இரத்த பரிசோதனைக்காக பயன்படுத்தப்படுகின்ற இரசாயன வகையொன்று இன்னும் சில நாட்களில் முடிவடைந்து விடும்.

இந்த நிலையில், குறித்த இரசாயனத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்காதபட்சத்தில் இரத்த பரிமாற்ற நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடையும் என வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, தெரிவு செய்யப்பட்ட தரப்பினருக்கு வேதன உயர்வு வழங்கப்படுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரச கணக்காய்வாளர்கள், தேசிய வருவாய்த் துறை ஆணையாளர்கள் இணைந்து சுகயீன விடுமுறை போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாரின் தலையீட்டையடுத்து புதையல் தோண்டும் முயற்சி நிறுத்தம்

(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் பட்டக்காடு, மரக்காரம்பளை வீதியில் புதையல் தோண்டுவதற்கு மேற்கொண்ட முயற்சி பொலிஸாரின் தலையீட்டினால் தடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது. நேற்று முன்தினம் பட்டக்காடு, மரக்காரம்பளை வீதியிலுள்ள பகுதி ஒன்றில் ஏற்கனவே புதையல் தோண்டப்பட்டுள்ளது. எனினும் எவ்விதமான பொருட்களும் கிடைக்கவில்லை. இதையடுத்து நேற்று முன்தினம் அப்பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அப்பகுதியில் எவரும் இவ்வாறான முயற்சியில் ஈடுபடவில்லை என்பதைக் கண்டறிந்துள்ளனர். இதையடுத்து சற்று நேரம் பாதுகாப்புக்கடமைகளை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து பொலிஸார் விலகிச் சென்றுள்ளனர்.

இப்பகுதியில் புதையல் இருப்பதாகத் தெரிவித்து அண்மையில் ஒரு குழுவினரால் புதையல் தோண்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)






# சுந்தரபுரம் அ.த.க.பாடசாலையின் கற்றல் கற்பித்தல் கண்காட்சி

(வவுனியா)

வ/ சுந்தரபுரம் அ.த.க பாடசாலையின் கற்றல் கற்பித்தல் கண்காட்சி அண்மையில் அதிபர் செ.ஜேசுநேசன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.இந்திரராஜா, சிறப்பு விருந்தினராக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் தேசிய அருங்கலைப்பேரவையின் வவுனியா மாவட்ட அதிகாரி கே.பொன்கரன், வவுனியா வடக்கு வலயக்கல்வி பணிமனையின் கல்வி அதிகாரிகளும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

குறித்த கண்காட்சியில் மாணவர்களது கைவினை ஆக்கங்கள் மற்றும் சித்திரப்பாட ஆசிரியர் கு.பாலகுமாருடைய ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இக் கண்காட்சியை அயற்பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர்கள் . மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பார்வையிட்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.இந்திரராஜா தனது 2018 ஆம் ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து Mul timedia Projector ஐ பாடசாலை அதிபரிடம் கையளித்திருந்தார். (2-9)

## 'சுத்தமும் பசுமையும்'

# வவுனியாவில் துப்புரவுவாரம் முன்னெடுப்பு

(வவுனியா)

வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில், நகரசபைத் தவிசாளர் இ. கௌதமன் தலைமையில் "சுத்தமும் பசுமையும்" எனும் தொனிப்பொருளில் துப்புரவு வாரம், நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இது தொடர்பாக வவுனியா நகரசபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

"ஆறு வாரங்களுக்கு நடைபெறவுள்ள இச் செயற்றிட்டம், நகர சபைக்குட்பட்ட அனைத்து வட்டாரங்களிலும், தினமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

"நகர சபைக்குட்பட்ட பிரதேசத்தை, சுத்தமாகவும் பசுமை நிறைந்ததாகவும் வைத்துக்கொள்ள வேண்டியது, மக்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

"எனவே, இப்பணியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டி இருக்கிறது" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# வீதி விரைவில் புனரமைக்கப்படும்

## சிறிதரன் எம்.பி. உறுதி




(கிளிநொச்சி)

கிளிநொச்சி 7 ஆம் யூனிட் கல்மடுநகர் இராமநாதபுரம் பயணம் மேற்கொள்ளும் பத்தாம் பத்திநாதர் தேவாலய பின் வீதி விரைவில் புனரமைத்துத் தரப்படுமென யாழ். மாவட்ட பாராளுமனற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

குறித்த வீதி புனரமைப்பு தொடர்பில் அண்மையில் பத்தாம் பத்திநாதர் தேவாலயத்தில் வைத்து சிறிதரன் எம்.பியிடம் மகஜர் ஒன்று கல் மடுநகர் சனசமூக நிலைய பொருளாளரினால் வழங் கப்பட்டது.

மகஜரைப் பெற்றுக் கொண்ட சிறிதரன் எம்.பி. மிக விரைவில் வீதி புனரமைப்புப் பணிகள் நடைபெறுமென உறுதிமொழி வழங்கினார். (2)





மன்னார் மறைமாவட்டத்தில் கறிற்றாஸ்-வாழ்வுதய பணியகத்தின் "உதவிக்கரம்" பிரிவினால் "உதிரம் கொடுப்போம் உயிரைக் காப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் அண்மையில் மன்னாரில் நடைபெற்ற போது... (படங்கள்-பனிக்கன்குளம் செய்தியாளர்)


# போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு நிகழ்வு

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கோட்டம், வலய, மாகாணம் ஆகிய மட்டங்களில் ஆங்கில தினப் போட்டிகளிலும் , ஆங்கில நாடகப் போட்டியிலும் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சிக் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ரி. ஜோன் குயின்ரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்மிரர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஏ.பி. மதன் கலந்து கொள்ள உள்ளார். கிளிநொச்சி வலயத்திலுள்ள கரைச்சி , கண்டாவளை , பளை , பூநகரி ஆகிய கோட்டங்களைச சேர்ந்த வெற்றிபெற்ற மாணவர்கள் இப்பரிசளிப்புவிழாவில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-84)

## மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்ட

# பொதுக்கிணறுகளில் நீரில்லை; குழாய்க் கிணறுகளும் சேதம்





(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்மடு நங்கன் குடியிருப்பு பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக் கப்பட்டுள்ள பொதுக்கிணறுகள் நீரின்றிக்காணப்படுவதுடன், குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற குழாய்க் கிணறுகளும் சேதமடைந்த நிலையில் காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டாவளைப் பிரதேசத்திற்குட்பட்ட கல்மடு நகர் றங்கன் குடியிருப்பு பகுதியில் கண்டாவளைப் பிரதேச செயலகத்தினால் மக்களின் தேவைகளுக்கு அமைத்து வழங்கப்பட்ட இரண்டு பொதுக்கிணறுகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கையளிக்கப்பட்ட போதும், குறித்த கிணறுகள் நீரின்றியே காணப்படுகின்றன.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்ற இரண்டு குழாய்க்கிணறுகளும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இந்தப்பிரதேசத்தில் 110 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில் குடிநீர்த்தேவை கருதி இக்கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளபோதும தற்போது அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுகின்றது.

தற்போது குடிநீர் பெற்றுக் கொள்வதற்கும் ஏனைய தேவைகளுக்கான நீரைப் பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் துன்பங்களை அனுபவிப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)












கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ச் சங்கத்தின் 16 ஆவது திருக்குறள் மாநாடும், கருத்தரங்கும் கிளிநொச்சி பரந்தன் உயர்நிலைப் பள்ளியில் முன்னாள் அதிபர் அமரர் சுப்பையா நினைவு மண்டபத்தில் கடந்த 7, 8 ஆம் திகதிகளில் தமிழ்ச்சங்கத் தலைவர் நா. சோதிநாதன் , வே. இறை பிள்ளை ஆகியோரின் தலைமையில் நடை பெற்றது. முதலாம் நாள் நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி. சத்தியசீலன் கலந்து கொண்டிருந்தார்.இரண்டாம் நாள் நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களன மாவை. சே. சேனாதிராசா , சிவஞானம் சிறிதரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (படங்கள்- பூநகரி , பரந்தன் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைக்குளம் சுற்றுலா மையத்தை விடுமுறை தினங்களிலும் திறவுங்கள்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு அட்டைக்குளம் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ள சுற்றுலா மையத்தை சனி,ஞாயிறு ஆகிய விடுமுறை நாட்களில் திறக்குமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட விசுவமடு அட்டைக்குளம் பகுதி வடக்கு மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சரினால் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த சுற்றுலா மையம் மற்றும் சிறுவர் பூங்கா என்பன சனி,ஞாயிறு ஆகிய நாட்களில் மூடப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

இதனை பாடசாலை விடுமுறை நாட்களில் திறப்பதன் மூலம் இப்பிரதேசத்திலுள்ள சிறுவர்கள் பெற்றோர்களுடன் சென்று பொழுது போக்குகளில் ஈடுபட முடியும்.

இதனை விடுமுறை நாட்களில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ள இப்பிரதேச மக்கள் இதற்கான மின்சார வசதியையும் ஏற்படுத்தித் தருமாறு கோரியுள்ளனர். (2-315)

# தென்னை வளர்ப்பாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வும் ஒளிப்படக்காட்சியும்

(முல்லைத்தீவு)

தென்னை பயிர்ச்செய்கை சபையின் சங்கங்களை மேம்படுத்தும் நோக்கில் தென்னை வளர்ப்பாளர்களுக்கான விழிப்புணர்வு கருத்தமர்வு ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தில் அண்மையில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் கருவேலன்கண்டல், மானுருவி, வித்தியாபுரம், ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, இடதுகரை ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்களுக்கு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தென்னை வளர்ப்பாளர்களுக்கு ஒளிப்படக்காட்சிகள் மூலமான தென்னைசார் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன், இப்பிரதேசத்தில் தென்னை வளர்ப்பிற்கு பொருத்தமான காணிகள் இருந்தும் தென்னைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளது.

அனைவரும் தென்னையை பயிரிட்டு ஊடு பயிர்களை நடுவதன் மூலம் ஐந்து வருட காலத்தினுள் உங்கள் வீட்டிற்கு தேவையான வருமானத்தை நீங்களே பெற்றுக்கொள்ளலாம்.

குடும்ப வன்முறைகளுக்கு காரணமான குடும்ப சுமையை ஓரளவு நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

அத்துடன் இப்பிரதேசத்தில் நுண்நிதி நிறுவனங்களில் 24%இற்கு மேற்பட்ட வட்டிக் கடனை பெற்று வரும் பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக தென்னை பயிர்ச்செய்கை சபையின் மூலம் வழங்கப்படும் வட்டி மானிய கடனை பெற்று 125000 ரூபாவிற்கு 9% வட்டி மாதாந்தம் 2750 ரூபா செலுத்துவதன் மூலம் தென்னை வளர்ப்பதனை ஊக்குவிப்பதோடு அரச உத்தியோகத்தர்களுடனும் அந்நியோன்னியத்தையும் ஏற்படுத்துவதோடு உங்களுடைய பொருளாதாரத்தை நிவர்த்தி செய்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

மேலும் இப்பிரதேசத்தில் தென்னை வளர்ப்பு, தென்னை கைத்தொழில் மேம்படுத்தல் தொடர்பான கூட்டங்கள் எதிர்வரும் 10,11, 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# முன்பள்ளி கல்விக்கு அத்திபாரமாக அமைகின்றது

## யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவிப்பு



(கண்டாவளை)

சமூகத்தில் உள்ள தலைவர்கள் அனைவரும் சிறார்களின் எதிர்காலம் கருதி உதவி புரிய வேண்டும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வலயமட்ட முன்பள்ளிகளின் விளையாட்டு விழா நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராககலந்துகொண்ட யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.சத்தியமூர்த்தி கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

அவர் கருத்துரைக்கையில்,

முன்பள்ளி சிறார்களைக் கட்டிக்காத்து பராமரிப்பது என்பது மிகச்சிரமமானது. அதேவேளை சிறார்களின் உடல் உள ஆரோக்கியம் என்பது மிக முக்கியமானது. ஆகவே முன்பள்ளிகள் என்பது கல்விக்கு அத்திபாரமாக அமைகின்றது.

முன்பள்ளிகளை பராமரிப்பது என்பது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள் போன்றன அல்ல.

அங்கு நிரந்தரக் கட்டடங்கள், நிரந்தர ஆசிரியர்கள் குறைவு. சமுதாயத்தில் உள்ள தலைவர்கள் அனை வரும் இவ்வாறான முன்பள்ளிகளுக்கு உதவ வேண்டும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-315)




# 100 ஏக்கர் நிலப்பரப்பிற்கு நீர் விநியோகிக்கும் புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனம் பயன்பாடின்றி செயலிழப்பு





(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் புழுதியாறுப்பகுதியில் சுமார் 32 மில்லியன் ரூபா செலவில் வடக்கு மாகாண சபையால் நிர்மாணிக்கப்பட்ட ஏற்று நீர்ப்பாசனம் பயன்பாடற்ற நிலையில் செயலிழந்து காணப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர்பிரிவிற்குட்பட்ட மாயவனூர் கிராமத்தில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை நோக்காகக் கொண்டு இப்பிரதேசத்தில் வாழும் 115 பயனாளிகள் பயனடையும் வகையில் 100 ஏக்கர் நிலப்பரப்பிற்குள் நீர் விநியோகிக்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்ட புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத்திட்டம் இன்று பயன்பாடின்றிய நிலையில் காணப்படுகின்றது.

கடந்த 2014ஆம்ஆண்டு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் 32 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு 23-01-2015 அன்று வடக்கு மாகாண முதலமைச்சரினால் திறந்து வைக்கப்பட்ட குறித்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டமே இவ்வாறு செயலிழந்து காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சில விவசாயிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றபோதும், இந்த ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் குறித்த ஏற்று நீர்ப்பாசனத்திட்டத்திற்கு பயன்படுத்தும் இயந்திரம் எரிபொருள் மூலம் இயங்குகின்ற இயந்திரமாகக் காணப்படுவதனால் அதனை இயக்குவதில் அதிக செலவு ஏற்படும் என்றும் அனைத்து விவசாயிகளும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் போது ஏற்றுநீர்ப்பாசனத்தை குறைந்த செலவில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தற்போது, இந்தப் பிரதேசத்தில் கடுமையான வறட்சி நிலவுவதனால் குடிநீர் நெருக்கடி காணப்படுவதாக இப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (2-315)

# சதொச வளாக முகப்புப்பகுதியில் சிதறிய மனித எச்சங்கள் மீட்பு





(மன்னார்)

மன்னார் நகர நுழைவாயிலில் உள்ள சதொச விற்பனை நிலைய வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் அகழ்வு பணிகள் நேற்று திங்கட்கிழமை 29 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் நீதவான் ரி.ஜே. பிரபாகரன் மேற்பார்வையில் இடமாற்றம் பெற்று வருகின்ற அகழ்வு பணிகளுக்கு விசேட சட்ட வைத்திய நிபுணர் டபிள்யூ. ஆர்.ஏ.எஸ். ராஜபக்ஷ தலைமை தாங்கி வருகின்றார். அவருடன் இணைந்து களனி பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ராஜ் சோமதேவா மற்றும் அவரின் குழுவினரும் இணைந்து அகழ்வு பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி அகழ்வுப் பணி களத்தில் [illegible] தற்காலிகமாக குறைக்கப்பட்டு அகழ்வு மேற்கொண்டபோது கிடைத்த பகுதி அளவு மற்றும் முழு மனித எச்சங்களை அப்புறப்படுத்தும் பணிகள் ஓரளவிற்கு முடிவடைகின்ற நிலையை எட்டியுள்ள போதும் நேற்று மேற்படி வளாகத்தின் முகப்பு பகுதியை மேலும் அகலப்படுத்தி ஆழப்படுத்தி மனித எச்சங்கள் காணப்படுகின்றனவா என ஆராய்ந்து பார்த்த சமயத்தில் மேலும் அதிகளவிலான சிதறிய மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனால் முகப்புப் பகுதிகளில் தற்போது இன்னும் அதிகளவிலான மனித எச்சங்கள் காணப்படலாம் என சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து முகப்புப்பகுதியைமேலும்ஆழப்படுத்தி அகழ்வு செய்வதற்கான செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. குறித்த அகழ்வுப் பணிகளில் தற்போது மனிதவள பற்றாக்குறை காணப்படுவதனால் மீட்பு மற்றும் அப்புறப்படுத்தல் பணி மிகவும் மந்த கதியில் இடம் பெற்று வருகின்றது.

குறித்த வளாகத்தில் இருந்து மீட்கப்பட்டு வருகின்ற மனித எச்சங்கள் குறித்த வளாகத்திலே சுத்தப்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டு சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பொதியிடப்பட்டு நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலையில் இரத்தத்தில் சீனி உயருதா?

இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டாலும்கூட நீரிழிவு நோயாளிகள் சிலருக்குக் காலையில் சீனியின் அளவு அதிகரித்துக் காணப்படும். இதைக் கட்டுப்படுத்தவில்லை என்றால் உடலின் பல்வேறு உறுப்புகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. காலையில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிப்பது ஏன்? அதனால் ஏற்படும் விளைவுகள் என்னென்ன? அதைச் சரி செய்ய முடியுமா? விளக்குகிறார் நீரிழிவுநோய் மருத்துவர் தேவராஜன்.



நம் உடலுக்குத் தேவையான சக்தி குளுக்கோஸில் இருந்துதான் பெரும்பாலும் கிடைக்கிறது. இரவில் நமக்கு அதிக சக்தி தேவைப்படாது. என்றாலும், உடலிலிருக்கும் செல்கள், மூளை போன்றவற்றின் செயற்பாடுகள் சீராக இருக்க உடல் தொடர்ந்து குளுக்கோஸைத் தயாரித்துக்கொண்டே இருக்கும். ஆனால், நீரிழிவு நோயாளிகளின் உடல், தேவையானஅளவு இன்சுலினை உற்பத்தி செய்யாது என்பதால் இரத்தத்திலிருக்கும் சீனி செல்களைச் சென்றடையாமல் இரத்தத்திலேயே தங்கிவிடும்.

இரவில் உறங்குவதற்கு முன்னர் இன்சுலின் ஊசி போட்டுக்கொண்டாலும் குறைந்த அளவே இன்சுலின் சுரக்கும். எனவே, நள்ளிரவுக்குள் ஏறக்குறைய இன்சுலின் தீர்ந்துவிடும். இதனால் காலையில் அவர்களுக்கு இரத்தத்தில் சீனியின் அளவு வழக்கத்தை விட அதிகமாக இருக்கும். இது ஹடான் பினாமினன்' (Dawn Phenomenon) எனப்படும். இரவில் சாப்பிடாமல் உறங்குபவர்கள், விரதமிருப்பவர்களுக்கு இரத்தத்தில் சீனியின் அளவு குறைந்துவிடும். இதைச் சரிசெய்ய உடல் அதிக அளவில் குளுக்கோஸ் தயாரிப்பதால்கூட இந்தப் பிரச்சினை ஏற்படலாம்.

நீரிழிவு நோயாளிகளில் சிலருக்கு இரவில் இரத்தத்தில் சீனியின் அளவு குறைந்துவிடும். இதைத்தான்ஹைப்போகிளைசீமியா' (Hypoglycemia) என்பார்கள். அப்போது அவர்களின் உடலில் இன்சுலின் சுரப்பது குறைவதால், குளுக்கோஸ் தயாரிக்கும் வேகம் அதிகமாகும். இதனாலும் காலையில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. காலையில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருப்பதை, 'சோமோகி எஃபெக்ட்' (Somogyi Effect) என்பார்கள். இரவு மூன்று மணிக்குத் தொடங்கி விடியற் காலையில் உச்சத்தை அடையும் கார்டிசால் ஹோர்மோன் (Cortisol) சுரப்பு, உடலில் இன்சுலின் அளவைக் குறைத்துவிடும். இரத்தத்தில் இன்சுலினின் அளவு குறைவது சாதாரணமாக நடக்கக்கூடியது. என்றாலும் நீரிழிவு நோயாளிகளுக்கு இது ஏற்படும்போது காலையில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாகிவிடும்.


காலையில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகரிக்க, சிலநேரங்களில் இரவில் சாப்பிடும் உணவுகளும் காரணமாகலாம். அதிக காபோவைதரேட் நிறைந்த உணவுகள், அளவுக்கு அதிகமான உணவுகளைச் சாப்பிடுவதால் இப்படி ஏற்படலாம். இதனால் இதயம், கல்லீரல் ஆகியன பாதிக்கப்படும். எனவே, உடனடியாக மருத்துவரை அணுகி இதைக் கட்டுக்குள் வைத்துக்கொள்ளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இரத்தத்தில் சீனியின் அளவு சீராக இருப்பவர்களுக்கு இது ஏற்படாது. இந்தப் பிரச்சினை உள்ளவர்கள் உணவு முறையில் மாற்றங்கள் செய்ய வேண்டும். நடைப்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். இரவு உணவை அளவாகச் சாப்பிட வேண்டும். காலையில் இரத்தத்தில் சீனியின் அளவு அதிகமாக இருக்கும்போது, வழக்கமாகச் சாப்பிடுவது





போல அதிகம் சாப்பிடாமல் அளவாகச் சாப்பிட வேண்டும். சில நீரிழிவு நோயாளிகள் காலை உணவுக்கு முன்னரும் இன்சுலின் போட்டுக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். இருந்தாலும் காலையில் போட்டுக்கொள்ளும் இன்சுலினைவிட இரவில் போட்டுக்கொள்ளும் இன்சுலினே அதிக பயன் தரும்.

காலையில் அதிகமாக இருக்கும் இரத்தத்தில் சீனியின் அளவைக் கட்டுக்குள் வைத்திருக்க, நாம் மருத்துவர்களின் ஆலோசனையின்படி இரவில் இன்சுலின் அளவை அதிகரித்துக்கொள்ள வேண்டும். இன்சுலினில் இரண்டு வகைகள் உள்ளன. நீண்டநேரம் செயற்படக் கூடியவை. குறைந்த நேரம் செயற்படக்கூடியவை என்பனவாகும். (Long Acting and Short Acting Insulin). இவற்றை நாம் கவனித்து, தேவைக்கேற்ப மாற்ற வேண்டும். இவை அனைத்தையும் தவறாமல் கடைப்பிடித்தால் இந்தப் பிரச்சினையிலிருந்து சுலபமாக விடுபடலாம்.

# பேருந்தின் கண்ணாடியை உடைத்துக்கொண்டு உள்நுழைந்த மூங்கில்-இரண்டு பேர் படுகாயம்







(கொழும்பு)

நோட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியின் எடிட் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். காயமடைந்த இருவரும் லக்ஷபான பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நோட்டன் பகுதியிலிருந்து பயணித்த இ.போ.சபைக்கு சொந்தமான பேருந்து மீது எடிட் பிரதேசத்தில் மூங்கில்கள் சரிந்து விழுந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மூங்கிலொன்று பேருந்தின் முன்கண்ணாடியை உடைத்துக் கொண்டு பேருந்திற்குள் நுழைந்ததாலேயே இருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

பலத்த காற்று வீசியதாலேயே பிரதான வீதியின் அருகிலுள்ள மூங்கில்கள் உடைந்து பேருந்து மீது விழுந்துள்ளதாக விசாரணைகளை மேற்கொள்ளும் நோட்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

பெண்களின் தொழிற்றுறையை மேம்படுத்த

# 9.5 மில். அமெ. டொலர் இலங்கைக்கு நிதி உதவி



(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி 9.5 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் பெண்களால் முன்னெடுக்கப்படும் தொழிற்றுறையை மேம்படுத்துவதற்காக வழங்கியுள்ளது.

பெண்களால் முன்னெடுக்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறைகளை மேம்படுத்துவதற்காக இலங்கையில்முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டத்திற்காக இந்த நிதியுதவி பயன்படுத்தவுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ஸ்ரீ விடோவதியும் இலங்கையின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்கவும் இதில் கைச்சாத்திட்டனர். (இ-7)

# பல உயிர்களைப் பாதுகாத்த பௌசர், தேங்காய்





(கொழும்பு)

களுத்துறையில் தேங்காய் ஒன்றினால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்ட அபூர்வ சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வலல்லாவிட்ட பிரதேசத்தில் திடீரென ஏற்பட்ட கடும் காற்று காரணமாக பாரியளவில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளன. இதன் போது வலல்லாவிட்ட அவித்தாவ வீதியில் ஊழியர்களினால் வீதி நிர்மாணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

காற்றினால் விழுந்து கிடந்த தேங்காய் ஒன்றைக் கண்ட சாரதி ஒருவர் அதனை எடுப்பதற்காக பௌசர் ஒன்றின் உதவியாளரை கீழே இறக்கியுள்ளார்.

அந்தத் தேங்காயை எடுக்கச் சென்ற சந்தர்ப்பத்தில் பௌசரின் வேகம் குறைக்கப்பட்டு முன்னால் சென்றுள்ளது. இதன்போது, அங்கிருந்த பாரிய மரம் ஒன்று பௌசர் மீது உடைந்து விழுந்துள்ளது. இந்த அனர்த்தம் காரணமாக யாரும் காயமின்றி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பியுள்ளனர்.

அந்த மரம் பௌசர் மீது விழவில்லை என்றால் அருகில் இருந்த கடை மற்றும் வீடுகள் மீது விழுந்து பாரிய உயிர்ச் சேதங்களை ஏற்படுத்தியிருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்தத் தேங்காய் தான் இந்த உயிர்களைக் காப்பாற்றியுள்ளதாக பௌசரின் சாரதி தெரிவித்துள்ளார். (இ-7)

# சிங்களப் பாடகி படுகொலை! சந்தேகத்தில் கணவன் கைது

(கொழும்பு)

பிரபல சிங்களப் பாடகி பிரியானி ஜெயசிங்க படுகொலை செய்யப்பட்ட நிலையில், அவருடைய வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பாணந்துறையிலுள்ள அவரது வீட்டில் வைத்து கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பிரியானி ஜெயசிங்க படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் பிரியானி ஜெயசிங்கவின் கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொலை செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஒரு சோடி கத்தரிக்கோலும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை அரசியல்வாதிகளை புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும்

## விடுதலைப் புலிகள் கட்சி வலியுறுத்து



(கொழும்பு)

சுயநல அரசியலுக்காக நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து இனவாதத்தைத் தூண்டும் தென்னிலங்கை அரசியல்வாதிகளைக் கைது செய்து, புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும் என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க அரசின் செயற்றிட்டங்களை நிலைகுலையச் செய்து வைப்பதும் தங்களின் சுயநல அரசியலுக்காக அரசியல் வங்குரோத்து நிலையை செய்ய நினைக்கும் சரத் பொன்சேகா, விமல் வீரவன்ச போன்றோரை முதலில் கைது செய்து புனர்வாழ்வுக்குட்படுத்த வேண்டும்.

வடக்கு-கிழக்கில் இடம்பெற்ற கரும்புலிகள் தின அஞ்சலி குறித்து தெற்கின் இனவாத அறிக்கைகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் "கரும் புலிகள் தின அஞ்சலி நிகழ்வுக்கு அரசினால் தடை விதிக்கப்படவும் இல்லை. அது தொடர்பான எவ்வித சுற்றறிக்கையும் அரசு வெளியிடவும் இல்லை.

அத்துடன், இந்நிகழ்வு இரகசியமாக செய்யப்பட்ட ஒன்று இல்லை. பகிரங்கமாக பாதுகாப்பு தரப்பினரின் பிரசன்னத்தில் அவர்களின் முன்னிலையிலேயே இடம் பெற்றது.

அஞ்சலி நிகழ்வு இடம்பெற்ற எந்தவொரு இடத்திலும் எவ்வித பயங்கரவாத செயலோ அல்லது எவ்வித ஊக்குவிப்போ இடம்பெறவில்லை என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆனால், தற்போது தெற்கிலிருந்து இனவாதக் கருத்துக்களைப் பரப்பி சிங்கள மக்களுக்கு தவறான கருத்துக்களை பகிரங்கப்படுத்தி மீண்டும் ஒரு தமிழ் சிங்கள மோதலை உருவாக்கி தற்போதைய நல்லிணக்க அரசின் செயற்றிட்டங்களை நிலைகுலைய வைப்பதும் தங்களின் சுயநல அரசியலுக்காக அரசியல் வங்குரோத்து நிலையை செய்ய நினைக்கும் சரத் பொன்சேகா, விமல் வீரவன்ச போன்றோரை முதலில் கைது செய்து புனர்வாழ்வுக்கு உட்படுத்த வேண்டும்.

நாங்களும் இந்நாட்டின் குடிமக்கள். இறந்த எம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினால் சட்டமும் ஒழுங்கும் எப்படி சீர்கெடும். நாங்கள் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டவர்கள். மேலும் எங்களை பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவதை எப்படி ஏற்றுக் கொள்வது" என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# மகிந்தானந்தவின் வழக்கு மீது நீதிபதி களுஆராச்சி அதிருப்தி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கிலிருந்து, நீதிபதி கிஹான் குலதுங்கவை விலக்கி வேறொரு நீதிபதி முன்னிலையில் விசாரிக்க கடந்த வழக்கின் போது மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

அதனடிப்படையில் இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றபிரதானநீதிபதிஏ.ஏ.அர்ஹெய்யன்துடுவ முன்னிலையில்எடுத்துக்கொள்ளப்பட்ட போது அது மேலதிக விசாரணைக்காக நீதிபதி விக்கும் களு ஆராச்சியிடம் ஒப்படைக்கப்பட்டது.

இருப்பினும் இந்த வழக்கினை விசாரணை செய்ய நீதிபதி விக்கும் களு ஆராச்சி அதிருப்தி வெளியிட்டார்.

இதனால் வழக்கினை விசாரிக்க நீதிபதி சம்பத் அபேகோன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இதனடிப்படையில் வழக்கு விசாரணை நீதிபதி சம்பத் அபேகோன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் வழக்கு தொடர்பான மேலதிக விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்

மஹிந்தானந்த அளுத்கமகே அமைச்சராக இருந்த காலத்தில் சட்டவிரோதமாக பெறப்பட்ட 274 இலட்சம் ரூபா பணத்தைப் பயன்படுத்தி பொரளை கிங்சி வீதியில் வீடொன்றைக் கொள்வனவு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு சட்டமா அதிபரால்கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மைத்திரிக்கும் சீனா நிதியுதவி



(கொழும்பு)

2015 ஆம்ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைக்காக இரண்டு பிரதான வேட்பாளர்களும் சீன நிறுவனத்திடமிருந்து, நிதியைப் பெற்றுக் கொண்டனர் என்று பொலிஸ் விசாரணைகளின் போது தெரியவந்திருப்பதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பொலிஸ் உயர்மட்ட அதி காரிகளை மேற்கோள் காட்டி இந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, சீன மேர்ச்சன்ட் பொறியியல் நிறுவனம், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கியது என்ற குற்றச்சாட்டு தொடர்பாக, 2016ஆம் ஆண்டு பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்தது.

விசாரணைகளில் இரண்டு பிரதான வேட்பாளர்களும் சீன நிறுவனத்திடம் நிதியைப் பெற்றனர் என்பது கண்டறியப்பட்டதையடுத்து, அந்த விசாரணைகள் இடைநிறுத்தப்பட்டன.

இதுகுறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவும் விசாரணை நடத்தியது என்று அறியப்படுகிறது.

நிறைவு செய்யப்படாத அந்த விசாரணை குறித்த இடைக்கால அறிக்கை, 2016 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போது, இலங்கை அரசியல் பரப்புரைகளுக்கு நிதியளிப்பதை ஒழுங்குபடுத்தும் சட்டங்கள் எதுவும் நடைமுறையில் இல்லை.

எந்தவொரு தனிநபர் அல்லது அமைப்புகளிடமிருந்தும், எல்லா அரசியல் கட்சிகளும், பகிரங்கப்படுத்துவது அல்லது எந்த ஆபத்துமின்றி சட்ட ரீதியாக கொடைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன நிறுவனத்திடம் இருந்து மகிந்த ராஜபக்ஷ தேர்தல் பரப்புரைக்காக 7.6 மில்லியன் டொலர் நிதியைப் பெற்றார் என்று நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிட்டதையடுத்து, இந்த விவகாரம் சூடு பிடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விஜயகலாவைக் காரணம் காட்டி இனவெறுப்பைத் தூண்டும் கோத்தா

## துஷார அமரசேன விசனம்



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் வெளியிட்ட கருத்துக்களைக் காரணம் காட்டி கோத்தபாய ராஜபக்ஷ இனங்களுக்கிடையில் வெறுப்புணர்வுகளை தோற்றுவிக்க முயற்சித்து வருகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் இந்துனில் துஷார அமரசேன தெரிவித்தார்.

கடந்த சில நாட்களாக நாட்டில் விஜயகலா மகேஸ்வரனின் உரை பரபரப்பினை ஏற்படுத்தியிருந்தது. அவர் அன்று மக்கள் மத்தியில் ஆற்றியிருந்த உரை வன்மையாக கண்டிக்க வேண்டிய விடயம். இருப்பினும் அவர் தனது தவறை ஒப்புக்கொண்டு அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்தார்.

இந் நிலையில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது விஜயகலாவின் உரையை நியாயப்படுத்தும் வகையில் பேசியிருந்தார்.

இதுவும் சிங்கள, தமிழ் மக்களிடையில் மீண்டும் பிரச்சினையை தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளது. ஆனால் மக்களின் நம்பிக்கைக்கு விரோதமான செயற்பாடாகவேஇதனைகொள்ள வேண்டும் என துஷார மேலும் தெரிவித்தார். (இ-7)

# மகிந்தவுக்கு விசேட சலுகை இல்லை

## ஐ.தே.க.பொதுச் செயலாளர் திடம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில்ஏனைய உறுப்பினர்களுக்கு இருக்கின்ற கட்டுப்பாடுகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் உள்ளது. ஆகவே "நியூயோர்க் ரைம்ஸ்" விவகாரம் தொடர்பில் அவர் விளக்கமளிக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு மீண்டும் அழைத்து வந்தால் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தி தொடர்பில் விளக்கமளிப்பேன் என மகிந்த கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் இவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இவருக்கென்று விசேட சலுகைகள் வழங்க முடியாது.

சீனத் துறைமுக கடன் தொடர்பில் நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்ட செய்தியை ஒரு தனிப்பட்ட விடயமாக மகிந்த ராஜபக்ஷ கருத முடியாது. இவ்விடயம் நாட்டின் அரச கடன்களுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. எனவே இது தொடர்பில் அவர் கட்டாயம் விளக்கமளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விஜயகலாவின் தலைவர் ரணிலா? பிரபாகரனா?

## மரிக்கார் கேட்கிறார்



(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவா அல்லது வேலுப்பிள்ளை பிரபாகரனா என்பது தொடர்பில் அவர் விரைவில் தீர்மானம் எடுக்க வேண்டும் என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார், விஜயகலாவுக்கு எதிராக கட்சி மட்டத்தில் எடுக்கப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையாக கட்சியிலிருந்து அவரை நீக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

முல்லேரியாவ டீ.பீ.இளங்கரத்ன விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விஜயகலா மகேஸ்வரன், நாட்டைப் பிளவுபடுத்த முயன்ற சட்டவிரோத புலிகள் அமைப்பை மீண்டும் கொண்டுவர முயற்சிக்கிறார். இது குறித்து நாடாளுமன்றில் முதலாவதாக நானே கருத்து தெரிவித்தேன்.

இதனாலேயே இன்று அவர் அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார் என மரிக்கார் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியா - தென்கொரியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



(டில்லி)

இந்தியா மற்றும் தென் கொரியா இடையே வர்த்தகம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருநாட்டு அமைச்சர்களும் நேற்று கையெழுத்திட்டனர்.

தென்கொரிய ஜனாதி பதி மூன் ஜே-இன் நாளை 11 ஆம் திகதிவரை இந்தியாவில் அரசுமுறை சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார். மூன் ஜே-இன், அவரது மனைவி மற்றும் அந்நாட்டின் அமைச்சர்கள், உயரதிகாரிகள் குழுவுடன் அவர் நேற்று முன்தினம் டில்லி வந்தடைந்தார்.

இந்நிலையில், இந்தியா மற்றும் தென் கொரியா இடையே வர்த்தகம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.

தென்கொரிய வர்த்தக அமைச்சர் கிம் ஹியூன் சோங் மற்றும் இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் சுரேஷ் பிரபு ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். (7-8)

## நிர்பயா கொலை வ

## குற்றவாளிகளுக்கு மரண

### உச்ச நீதிமன்

(டில்லி)

மரண தண்டனையை எதிர்த்து டில்லி நிர்பயா வழக்கு குற்றவாளிகள் 3 பேர் தொடர்ந்த மனுவை தள்ளுபடி செய்துள்ள உச்ச நீதிமன்றம் அவர்களின் மரணதண்டனையை உறுதி செய்துள்ளது.

டில்லியில், கடந்த 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் 16ஆம் திகதி இரவு, ஓடும் பேருந்தில் மருத்துவ மாணவி நிர்பயா 6 பேர் கொண்ட கும்பலால் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

குற்றவாளிகள் 6 பேரும் கைது செய்யப்பட்டனர். ஒருவன், சிறுவன் என்பதால் குறைந்த பட்ச தண்டனையுடன் தப்பினான். முக்கிய குற்ற

## 100 ஹிட்லர் சேர்ந்தது போல் பா.ஜ.கட்சியின் ஆட்சியுள்ளது

### மம்தா குற்றச்சாட்டு



(டில்லி)

தற்போது நடைபெற்று வரும் பா.ஜ.கவின் ஆட்சி 100 ஹிட்லர் சேர்ந்து ஆட்சி செய்வதைப் போலுள்ளதாக மேற்கு வங்க முதலமைச்சரும், திரிணாமூல் கட்சியின் தலைவருமான மம்தா பானர்ஜி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்த ஆட்சியை வீழ்த்துவதற்கு காங்கிரஸ்டன் இணைந்து செயற்படவும் தயாரென அவர் தெரிவித்துள்ளார்.

வார இதழொன்றுக்கு அண்மையில் அளித்த பேட்டியொன்றில் மேலும் தெரிவித்த அவர், "பா.ஜ.க. ஆட்சி மக்களைத் துன்புறுத்துகிறது. மக்களுக்கு அராஜகத்தைச் செய்கிறது. இன்று பா.ஜ.கவிலுள்ள சிலரே அக்கட்சியை ஆதரிக்கவில்லை.

பா.ஜ.கவின் இந்த ஆட்சியை வீழ்த்துவதற்கு காங்கிரஸ்டன் இணைந்து தேர்தலில் போட்டியிடவும் தயாராகவுள்ளேன்.

பிரதமர் பதவிக்கு போட்டியிடும் நோக்கம் எனக்கில்லை. பிரதமர் பதவிக்கான வேட்பாளர்களைத் தேடுவதை விடுத்து காங்கிரஸ்டன் இணைந்து பணியாற்றுவேன்.

மக்களுக்கு சிறந்த சேவையைச் செய்வதற்கு எந்தக் கட்சியுடனும் இணைந்து செயலாற்றுவதில் எனக்கு பிரச்சினையில்லை.

அனைவரும் இணைந்து செயற்படுவதே நாட்டிற்கு சிறந்த விடயமாகும்" என்று தெரிவித்துள்ளார். (7-8)

## ஜப்பானை புரட்டிப்

## பலி எண்ணிக்கை



(டோக்கியோ)

ஜப்பானில் பெய்து வரும் தொடர் மழை மற்றும் வெள்ளம் தொடர்பான விபத்துக்களில் சிக்கி இதுவரை 100 பேர் உயிரிழந்திருப்பதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் நாட்டில் தற்போது பலத்த மழை பெய்து வருகிறது. ஜப்பானிலுள்ள ஹிரோஷிமா, கியாட்டோ, ஒக்காயாமா, எஹிமே உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில தினங்களாக கன மழை பெய்து வருகிறது.

மழையினால் தாழ்வான பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கார்கள், பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்கள் தண்ணீருக்குள் மூழ்கி கிடக்கின்றன.

தாழ்வான பகுதிகளில் தண்ணீரில் தத்தளிக்கின்றனர். வீடுகள் மூழ்கியதால் மக்கள் கூரைகளில் தஞ்சம் அடைந்தனர். அவர்கள்

## தன்னை ஓவியமாக வரைந்த சிறுவனை பாராட்டிய பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன்



(பரீஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் 2 மணித்தியாலங்களில் தன்னை ஓவியமாக வரைந்த 11 வயது சிறுவனைப் பாராட்டியுள்ளார்.

இம்மானுவேல் மக்ரோன் நைஜீரியாவின் நியூ ஆபிரிக்கா ஷ்ரைன் என்னும் ஓவியக் கலைக்கூடத்தை பார்வையிட சென்றபோது , கரீம் வாரிஸ் ஒலமிலேக்கான் என்ற 11 வயது சிறுவன், பென்சில் மற்றும் கரி ஆகியவற்றை பயன்படுத்தி இரண்டு மணித்தியாலங்களுக்குள் மக்ரோனை அழகிய ஓவியமாக வரைந்துள்ளான்.

மிகவும் தத்ரூபமாக அமைந்திருந்த அவரது ஓவியத்தைக் கண்டு ஆச்சரியம் அடைந்த மக்ரோன் தனது டுவிட்டர் பக்கத்தில் அதனைப் பதிவிட்டுள்ளார். (7-8)

## நீண்ட நேர சந்திர கிரகணம் வெறும் கண்ணால் பார்க்கலாம்



(சென்னை)

27ஆம் திகதி நீண்ட நேர சந்திர கிரகணம் நிகழ உள்ளது. இதை இந்தியாவின் அனைத்து பகுதிகளில் இருந்தும் வெறும் கண்களால் பார்க்க முடியும்.

இந்த நூற்றாண்டின் மிக அரிய நீண்ட சந்திர கிரகணமும், பூமியை நெருங்கும் செவ்வாய் என 2 அற்புதங்கள் இந்த மாதம் வானத்தில் நிகழவுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி மிக நீண்ட சந்திரகிரகணம் நிகழவுள்ளது. சூரியன், பூமி, சந்திரன் ஆகியவை ஒரே நேர்கோட்டில் சந்திக்க உள்ளன. இந்த கிரகணம் 1 மணி 43 நிமிடங்கள் வரை நீடிக்கும். அப்போது நிலவில் முழுவதுமாக இருள் சூழ்ந்து இருக்கும்.

இந்த சந்திரகிரகணம் இந்திய நேரப்படி எதிர்வரும் 27 ஆம் திகதி இரவு 11.54 மணிக்கு தொடங்கும். இதை இந்தியாவின் அனைத்து பகுதிகளில் இருந்தும் வெறும் கண்களால் பார்க்க முடியும். (7-8)

## ரயில் தடம்

(அங்காரா)

துருக்கி நாட்டில் ரயில் ஒன்று தடம் புரண்டதில் 30 பேர் உயிரிழந்துள்ளதோடு, 100 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு அரச தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

பல்கேரிய எல்லையிலுள்ள கபிகுலே நகரிலிருந்து இஸ்தான்புல்லுக்குப் பயணித்த ரயிலே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

சுமார் 360 பயணிகளுடன் சென்ற குறித்த ரயிலின் 6 பெட்டிகள் தடம் புரண்டுள்ளதாக அரச தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.

ரயில் தடம் புரண்டமைக்கான காரணம் தெரியவில்லை. ஆனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ...ழக்கில் ...தண்டனை ...ன்றம் உறுதி



...வாளி ராம்சிங், சிறையில் தற்கொலை செய்துகொண்டான்.

மற்ற குற்றவாளிகளான முகேஷ், பவன், வினய், அக்ஷய் ஆகியோருக்கு டில்லி உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. பின்னர், மேன்முறையீட்டில் இந்த தண்டனையை உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது.

அதன்பின்னர் முகேஷ், பவன், வினய் ஆகியோர், மரண தண்டனையை மறு ஆய்வு செய்யக்கோரும் மனுக்களை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர். அக்ஷய் மனு தாக்கல் செய்யவில்லை. 3 பேரின் மனுக்கள் மீது விசாரணை நடத்தப்பட்டு, கடந்த மே 4ஆம் திகதி தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையில் நீதிபதி அசோக் பூஷன், ஆர்.பானுமதி ஆகியோர் அடங்கிய அமர்வு, அவர்களின் மனுக்களை தள்ளுபடி செய்து உத்தர விட்டனர்.

இதனால், அவர்களின் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. (7-8)

## ...போட்ட கனமழை!

## ...100 ஆக உயர்வு



இராணுவ படகுகள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் மீட்கப்படு மேடான பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதேபோல் தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த 50 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

தொடர் மழை காரணமாக பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவும் ஏற்பட்டு பொது மக்களை பலிவாங்கி வருகிறது.

இந்நிலையில் மழை வெள்ளத்தில் மூழ்கியும், நிலச்சரிவில் சிக்கியும் பலியானோர் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காணாமல்போன 50இற்கும் மேற்பட்டோரை தேடும் பணிகளில் பேரிடர் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (7-8)

## ...ம்புரள்வு; 30பேர் உயிரிழப்பு



சீரற்ற காலநிலை மற்றும் அதனால் ஏற்பட்ட மண்சரிவே இதற்குக் காரணமாக இருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் கூடுதலானோர் ஹெலிகொப்டரின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக ஆளுநர் மெஹ்மட் செலான் தெரிவித்துள்ளார்.

ரயில் தடம் புரண்டதில் காயமடைந்தவர்களுள் ரஷ்ய சுற்றுலாப் பயணிகளும் அடங்குவதாக ரஷ்ய செய்திகள் தெரிவித்துள்ளன.

மேலும், சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்காக, அந்நாட்டு ஜனாதிபதி தயீப் எர்டோகன் தனது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. (7-8)

## வரி விதிப்பு தொடர்ந்தால் அமெரிக்காவுக்கு தகுந்த பாடம்

## -பிரான்ஸ் எச்சரிக்கை-



(பரிஸ்)

அமெரிக்காவின் வரி விதிப்பு இனியும் தொடருமானால், ஐரோப்பாவிடமிருந்து வலுவான பதிலொன்றை எதிர்பார்க்கலாமென பிரான்ஸ் அமைச்சர் புரூனோ லீ மையர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் வரி விதிப்புகளை எதிர்கொள்ள ஐரோப்பா உறுதியான ஒற்றுமையை கடைப்பிடிப்பது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தென் பிரான்ஸிலுள்ள எக்ஸ் அன் மாகாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வர்த்தக மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டதென்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், இனியும் ஐரோப்பிய நாடுகளின் பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டால், ஐரோப்பாவானது பலம் மிக்க இறையாண்மையுடைய நாடு என்பதை அமெரிக்கா உணர்ந்துகொள்ளும் என்றும் எச்சரித்துள்ளார். (7-8)

## ரோந்து படையினர் மீது பயங்கரவாதிகள் தாக்குதல்!

## 9 பொலிஸார் பலி



(டுனிஸ்)

துனிசியாவில்ரோந்துபடையினர் மீது பயங்கரவாதிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 9 பொலிஸார் உயிரிழந்தனர்.

துனிசியா நாட்டின் எல்லையோரம் உள்ள புறநகர் பகுதிகளில் இயங்கிவரும் பயங்கரவாதிகள் அவ்வப்போது வெளிநாட்டினரையும் அரசுப் படையினரையும் குறிவைத்து ஆவேச தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

குறிப்பாக, அரபு வசந்தம் எனப்படும் ஆட்சி மாற்ற புரட்சிக்காலமான 2011ஆம் ஆண்டுக்கு பின்னர் இதுபோன்ற தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், அல்ஜீரியா நாட்டின் எல்லையோரம் துனிசியா நாட்டின் மேற்கு பகுதியில் உள்ள ஜென்டோவ்பா மாகாணத்தில் ரோந்து பணியில்ஈடுபட்டிருந்த பொலிஸ் வாகனங்கள் மீது கையெறி குண்டுகளை வீசியும், துப்பாக்கிகளால் சுட்டும் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 9 பொலிஸார் உயிரிழந்தனர். (7-8)

## குகைக்குள் சிக்கிய 13 பேரில் நான்கு சிறுவர்கள் மீட்பு

(பாங்கொக்)

தாய்லாந்து நாட்டில் வெள்ளம் சூழ்ந்த குகைக்குள் சிக்கி தவித்த 13 பேரில் 4 சிறுவர்கள் மீட்கப்பட்டு நிவாரண முகாமுக்கு திரும்பியுள்ளனர்.



தாய்லாந்தின் சியாங் ராய் பகுதியில் உள்ள தாம் லுவாங் குகையை பார்வையிடச் சென்ற 12 சிறுவர்கள் மற்றும் அவர்களின் கால்பந்து பயிற்சியாளர் குகைக்குள் சிக்கிக்கொண்டனர். 9 நாட்களுக்குப் பிறகு அவர்கள் உயிருடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவர்களை மீட்கும் பணியில் தாய்லாந்து கடற்படை முழு வீச்சில் ஈடுபட்டுள்ளது. குகைக்குள் உள்ள சிறுவர்களுக்கு உணவு, மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

திடீரென பெய்த பெரு மழை மற்றும் வெள்ளம் காரணமாக அந்த குகைக்குள் வெள்ளமும், சகதியும் புகுந்தது. இதனால் வெளிச்சமும், வெளியேறும் வழியும் இல்லாமல் சிக்கியிருக்கும் அவர்களை மீட்பதற்கு கடும் சவால்களை சந்தித்து வருகின்றனர்.

முழு வீச்சில் மீட்புப் பணிகள் நடைபெற்று வரும்நிலையில், ஒட்சிசன் பற்றாக்குறையால் மீட்புக்குழு வீரர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்நிலையில், வெள்ளம் சூழ்ந்த குகைக்குள் சிக்கி தவித்த 13 பேரில் 4 மாணவர்கள் மீட்கப்பட்டு, மீட்புக் குழுவினரின் நிவாரண முகாமுக்கு திரும்பியுள்ளதாக நேற்று முன்தினம் மாலை முதல்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (7-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப கல்வித் திறனை விருத்தி செய்ய ஒபெக் நிதியத்தின் உதவியுடன் விசேட திட்டம்



(கொழும்பு)
சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் உதவியின் மூலம் நாட்டின் தொழில்நுட்ப கல்வி மற்றும் திறனை விருத்தி செய்யும் விசேட திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படவுள்ளது.

இதற்கு 50 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைத்துள்ளது.

இது தொடர்பான விசேட ஒப்பந்தம் ஒன்று ஒஸ்ரியாவின் வியனா நகரில் OFID Director-General Suleiman J Al-Herbish க்கும் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச். சமரதுங்கவுக்கும் இடையில் கடந்த 3 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

13 வருட கட்டாயக் கல்வி கொள்கையை முன்னெடுக்க கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளும் ஆசிரியர்கள் பயிற்சிகளும் அவசியமாகி ன்றன என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இதனடிப்படையில் பிரத்தியேக கல்வியை மேம்படுத்த பல தொழில்நுட்ப ஆய்வு சாலைகளை கல்வியமைச்சு நிர்மாணிக்கவுள்ளது.

60.7 மில்லியன் டொலர் செயற்றிட்டத்தின் கீழ் பிரத்தியேக கல்வி விருத்தி மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. இதில் ஒபெக் நிதியம் 50 மில்லியன் டொலர்களை நிதியுதவியாக வழங்கவுள்ளது. (இ-7)

# வன்னியாகுளம் கொலைச் சம்பவத்தில் இரு தரப்பினரும் நிரபராதிகள் இல்லை

## பொலிஸ் பேச்சாளர் ருவான் தெரிவிப்பு

(கொழும்பு)
இனம்தெரியாத குழு ஒன்றினால் கொலை செய்யப்பட்ட அநுராதபுரம், வன்னியாகுளம் பகுதியைச் சேர்ந்த சுஜீவ பிரசன்ன குமார என்பவரின் கொலை தொடர்பில் பிரதான சந்தேக நபர் உட்பட மேலும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்ட சந்தேகநபர் மற்றும் உயிரிழந்த நபருக்கு இடையில் பல காலமாக பிரச்சினைகள் இருந்து வருவதுடன் ,2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் 3 ஆம் திகதி இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் குறித்த இருவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சந்தேக நபரினால் கொலை செய்யப்பட்ட நபருக்குத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக உயிரிழந்தவரின் மனைவியால் அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில் புல்லையார் சமிந்த எனும் நபர் கைது செய்யப்பட்டு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை, உயிரிழந்த நபருக்கு எதிராக 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் ஒன்று பெண் ஒருவரை



பாலியல் துஷ்பிரயோகம் செய்ததும் மற்றும் ஏனைய நான்கும் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதுமாகும்.

தாக்குதல் சம்பவங்களில் ஒன்று, கொலைச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான புல்லையார் சமிந்த எனும் நபரின் கையை கத்தியால் வெட்டி காயப்படுத்தியது.

இதில் ஒரு தரப்பினரை மாத்திரம் நிரபராதிகள் எனக் கூற முடியாது எனவும் இரு தரப்பினர்களுக்கு எதிராகவும் வழக்குகள் இருப்பதாவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் முழு விசாரணை நடத்தி அதனடிப்படையில் பிரதான சந்தேக நபர் உட்பட மேலும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார். (இ-7)



# வட்டியையும் முதலையும் ரஞ்சனிடமே வசூலியுங்கள்

(கொழும்பு)
பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் திரைப் படங்களின் தயாரிப்புப் பணிகளை வரையறுக்கப்பட்ட இ.டி.ஐ. நிதி நிறுவனமே செய்தது.

ஆகவே, அந்நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டவர்களின் பணத்தை. வட்டியும் முதலுமாக பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க திருப்பிச் செலுத்த வேண்டுமென ஒன்றிணைந்த எதிரணி வலியுறுத்தியுள்ளது.

புஞ்சி பொரளையிலுள்ள வஜிராஷ்ரம பௌத்த நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே, அந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான சிசிர ஜயகொடி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

"வரையறுக்கப்பட்ட இ.டி.ஐ. நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த அப்பாவி ஏழை மக்களின் பணத்தை அந்நிறுவனம் கொள்ளையடித்துள்ளது. கொள்ளையடிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு திரைப்படத் தயாரிப்புக்களுக்கு அந்நிறுவனம் நிதி உதவி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

"குறிப்பாக, இந்நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்ட நிதியினூடாக பிரதியமைச்சரும் திரைப்பட நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க பல படங்களில் நடித்துள்ளார்.

"இ.டி.ஐ. நிதி நிறுவனத்தால் ஏமாற்றப்பட்டவர்கள், அந்நிறுவனத்துக்கு முன்பாகப் போராடுவதைத் தவிர்த்து பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவின் வீட்டுக்குச் சென்று அவரிடம் அந்தப் பணத்தை வசூலிக்க வேண்டும்" எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, "நாட்டின் எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் எரிபொருள் சூத்திரம் ஒன்று இல்லாமையே நல்லாட்சி அரசாங்கம் எரிபொருள் விடயத்தில் தடுமாறுவதற்கான காரணம்" என இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்ந்திருந்தால் அம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்பனை செய்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கடமைகளே சுமைகள் ஆகும் போது...

குடும்பப் பெண்மணி சமைக்கவும் வியாபாரி கடையில் உட்காரவும் வேலைக்கு போகிறவர் அலுவலகம் செல்லவும் சலித்துக் கொள்ள ஆரம்பித்தால் அதன் எல்லைதான் என்ன?

இந்த அழகில் கூடுதலாக வேறு சில பொறுப்புகள் இவர்களிடம் ஒப்படைக்கப்படும் போது அல்லது திணிக்கப்படும் போது இவர்கள் வெறுத்துப் போகிறார்கள்.

அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளை வேப்பெண்ணெய் குடித்த மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு செய்தால் வாழ்வே சுமையாகத்தான் தெரியும். வேண்டா வெறுப்பாகச் செய்யப்படும் எதுவும் நமக்கே நிறைவைத் தராது என்றால், அதன்மூலம் பலனடைய வேண்டியவர்கள் நம் செயல்களில் எந்த அளவுக்குக் குறை காண்பார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதே இல்லை.

இவர்களின் விமர்சனங்களும் இவர்கள் சொல்லும் குறைகளும் சமயங்களில் இவர்கள் தரும் தண்டனைகளும் கடமைகளிலிருந்து மேலும் நம்மை விலகிப் போகவே வழி வகுக்கும்.

இருதய மருத்துவ நிபுணர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன். கடமைகளைச் சுமையாக நினைத்து அவற்றை வெறுப்புடனும் சலிப்புடனும் செய்வதால் மனச் சுமை அதகமாகின்றது; இது இருதய வியாதிகளுக்குத் தான் வழிவகுக்கின்றது. ஒரு மனிதன் தன் கடமைகளை ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் செய்தால் அதுவே அவனுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. எவ்வளவு அதிகப்படியான வேலையைச் செய்தாலும் அது சுமையாய்ப்படுவதில்லை; இப்படிப்பட்டவர்களுக்கு இருதய வியாதி வருவதில்லை என்கிறார் செமபாயிண்ட்!

ஒவ்வொருவரும் தங்கள் கடமைகளில் உள்ள சிரமங்களையே பெரிதுபடுத்திப் பேசுகிறார்கள். நான் நாயா அலைபுறேன். மாடா உழைக்கிறேன் என்று மிகைப்படுத்திப் பேசி அனுதாபம் தேடுகிறார்கள். அந்த அனுதாபத்தைக் கொண்டு சலுகை பெறப் பார்க்கின்றார்கள். அல்லது கடமைகளிலிருந்து தப்பிக்க வழி தேடுகிறார்கள்.

இவர்கள் கடமைகளைத் தொலைத்து தலைமுழுகிவிட்டு அதைவிடத் தலைபோகிற விடயமாக எதை எடுத்துக் கொள்ளப் போகின்றார்கள்? கடமையைவிடத் தலையாய விடயம் இந்த உலகில் உண்டா என்ன?

கடமைகளை ஈடுபாட்டுடன் ஏற்றுக் கொண்டால் வளர்ச்சியும் மகிழ்ச்சியும் கைகோர்த்து நடக்கும்.

இவற்றை உதற நினைத்தால் தோல்வியும் துன்பமும் நம்மைச் சுற்றி நூலம் படையாய்ப் படிந்துவிடும்.

இந்தப் போட்டி மிகுந்த உலகில் கடமைகளைப் புறக்கணித்து விட்டு காலந்தள்ளுவது மகா கடினம்!

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகேந்திரனை சிங்கப்பூரிலிருந்து பிரதமர் அழைத்துவர வேண்டும்

## ரோஹித எம்.பி. வலியுறுத்தல்




(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் விஜயத்தின் போது தனது நண்பர் அர்ஜுன் மகேந்திரனை கையோடு அழைத்து வரவேண்டும் என கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரை ப்பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்தவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே. இவர் சிறந்த ஒரு பொருளியல் வித்துவான். இவர் மத்திய வங்கியில் வந்தால் நாட்டின் பொருளாதாரம் பிரகாசம் அடையும் என்றெல்லாம், பிரதமர் அவரை அறிமுகம் செய்தார்.

இவரை மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கும் போது தனது உற்ற நண்பர் என பிரதமர் அவரை அறிமுகம்செய்தார்எனவும்ரோஹித எம்.பி. நினைவுபடுத்தினார்.

சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் சென்றுள்ளார். பிரதமரின் சிங்கப்பூர் விஜயம் குறித்து ஊடகங்களிடம் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரோஹித அபேகுணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)




கேலிச்சித்திரம்

# பிரதமரைப் பின் தொடர்ந்தால் மகேந்திரனை கண்டுபிடிக்கலாம்



(கொழும்பு)

அர்ஜுன் மகேந்திரனை கைது செய்ய வேண்டும் என்றால் அல்லது அவர் இருக்குமிடத்தை கண்டறிய வேண்டும் என்றால் சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பின் தொடர வேண்டும். அவ்வாறு பின் தொடர்ந்தால் இலகுவாக கண்டறிய முடியும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

உள்ளக கணக்காய்வுகளை செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தேசிய ரீதியில் உருவாக்கப்பட்ட இந்த சட்டத்தில் இவை பறிக்கப்பட்டுள்ளன. அரச அதிகாரி ஒருவர் பொய்யான கருத்தினை விசாரணைகளில் முன்வைத்தால் அது தவறு என நிரூபிக்கப்பட்டால் அவருக்கான உயரிய தண்டனை ஒரு இலட்சம் என்று இந்த சட்டம் கூறியுள்ளது. இந்த திட்டத்தை 5 ஆயிரமாக குறைக்க அரசாங்கமே யோசனையை கொண்டு வந்துள்ளது.

இந்த சட்டத்தை பலவீனப்படுத்திய பிரதான பொறுப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையே சாரும். ஊழல் வாதிகளை காப்பாற்ற, ஊழலை மறைக்க பிரதம அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் இணைந்து சூழ்ச்சி செய்து விட்டனர். அமைச்சர்களின் தேவைக்காக அரச அதிகாரிகள் செய்யும் தவறுகளை இன்று அமைச்சர்கள் காப்பாற்றுகின்றனர்.

கென்யா நாட்டின் கணக்காய்வு சட்டத்தை பார்த்தால், கணக்காய்வாளருக்கு அதீத அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஊழல் குற்றங்களில் நேரடியாக பொலிஸுக்கு முறைப்பாடு செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் அவ்வாறு ஒன்றும் இல்லை, வெறுமனே பாராளுமன்றத்தில் தெரிவிக்க முடியும். அதைத் தாண்டி எதனையும் செய்ய முடியாது. மேலும் பிரதமரது சிங்கப்பூர் விஜயம் எதற்காக என்பது எமக்குத் தெரியாது.

எனினும் மே முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வந்துள்ள சிங்கப்பூர் உடன்படிக்கை குறித்து கண்டிப்பாக இந்த விஜயத்தில் கலந்துரையாடப்படும் என நம்ப முடியும். ஆனால் அர்ஜுன் மகேந்திரனை மீண்டும்இலங்கைக்கு கொண்டுவர பிரதமர் போகவில்லை என்பதையும் கூற முடியும்.

எனினும் அர்ஜுன் மகேந்திரன் எங்கு ஒளிந்துள்ளார் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் பிரதமர் பின்னால் ஒருவர் பின் தொடர்ந்தால் அவரை பிடிக்க முடியும். ஊடகங்களும் அதனை செய்ய முடியும். அப்போது அவரை கண்டறிய முடியும்.

சிலவேளைகளில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உதயங்க வீரதுங்கவை வரவழைப்பதாக கூறியதை போன்று பிரதமர் அர்ஜுன் மகேந்திரனை வரவழைக்க சென்றாரோ தெரியவில்லை.

உதயங்கவை வரவழைத்தால் மகேந்திரனை வரவழைக்க முடியும் என்ற நேரடி சவால் ஏதும் இவர்கள் இருவருக்கும் இடையில் உள்ளதா? என்பதும் தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 50 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் பாக்.பிரஜை கைது

(கொழும்பு)

50 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில்வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

45 வயது பாகிஸ்தான் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாகிஸ்தானின் லாஹூரில் இருந்து பாகிஸ்தான் விமான சேவைக்கு சொந்தமான PK 186 என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

குறித்த நபரின் பயணப் பொதியிலிருந்து சுமார் 4 கிலோ 180 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## லொறி குடை சாய்ந்து விபத்து



(ஹற்றன்)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் நோர்வூட் பிரதான வீதியிலிருந்து நோர்வூட் அயரபி தோட்டத்திற்கு உட்செல்லும் வீதியில் கால்வாய் ஒன்றில் லொறி ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து சம்பவம்நேற்றுமுன் தினம் பிற்பகல் ஒரு மணியளவில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டட வேலைப் பாட்டுக்கு இரும்புக் கம்பிகள் மற்றும்சீமெந்து ஆகிய பொருட்களை ஏற்றி சென்ற லொறி வீதியில் முன்னோக்கி செல்லும் போது லொறியின் தடுப்புக்கட்டை செயலிழந்ததன் காரணமாக பின்னோக்கி சென்று குறித்த கால்வாயில் கவிழ்ந்துள்ளது. (இ-7)

# 3 பிள்ளைகளின் உயிரைக் காப்பாற்றிய இளைஞனை தாக்கிய பிரதேச மக்கள்

(கொழும்பு)

ஏற்படவிருந்த பாரிய விபத்தை தவிர்க்க சென்ற இளைஞனை பிரதேச மக்கள் இணைந்து கடுமையாக தாக்கிய சம்பவம் ஒன்று கட்டுகஸ்தொட்ட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பு பிரதேசத்தில் தனியார் நிறுவனம் ஒன்றில் சேவை செய்யும் நபர் ஒருவர், இரண்டு வாரங்களின் பின்னர் தனது ஊரான கட்டுகஸ்தொட்ட சென்றுள்ளார். அவ்வாறு சென்றவரிடம் வீட்டிற்கு அவசியமான பொருட்களை கொள்வனவு செய்யுமாறு மனைவி கூறியுள்ளார்.

மனைவி கூறியதற்கமைய பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தனது 3 பிள்ளைகளையும் ஆட்டோவில் அவர் அழைத்து சென்றுள்ளார்.

அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய முடியாதென்பதனால், ஆட்டோவை ஒவ்வொரு கடை அருகிலும் நிறுத்திவிட்டு பொருட்களை கொள்வனவு செய்துள்ளார்.

அவ்வாறு நிறுத்தப்பட்ட ஒரு இடத்தில் ஆட்டோ பின்பக்கம் நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளது. இதன்போது ஆட்டோவில் இருந்த 3 பிள்ளைகளும் கத்தி கூச்சலிட ஆரம்பித்துள்ளனர்.

இதனால் ஏற்படவிருந்த பாரிய விபத்தை தடுப்பதற்கு முயற்சித்த இளைஞன் ஒருவர் குறித்த ஆட்டோவில் ஏறி அதனை சற்று தூரம் ஓட்டி சென்று நிறுத்த முயற்சித்துள்ளார்.

தனது பிள்ளைகளின் கூச்சல் சத்தத்தை கேட்டு ஓடி வந்த தந்தை ஆட்டோவுடன் தனது பிள்ளைகளை கடத்த முயற்சிப்பதாக நினைத்து அந்தப் பகுதி மக்களுடன் இணைந்து அந்த இளைஞனை தாக்கியுள்ளார்.

எனினும் சம்பவத்தை பார்த்துக் கொண்டிருந்த சிலர் உடனடியாக செயற்பட்டு, இளைஞனை காப்பாற்றியதுடன், சம்பவத்தை விபரித்துள்ளனர். பின்னர் தவறை உணர்ந்த தந்தை மன்னிப்புக் கோரியுள்ளார். (இ-7)

# ஐ.தே.கவில் ஒரு இலட்சம் புதியவர்களுக்கு அங்கத்துவம்

## அகிலவிராஜ் காரியவசம் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் புதியவர்கள் ஒரு இலட்சம் பேருக்கு கட்சி அங்கத்துவத்தை பெற்றுக்கொடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இச் செயற்பாடுகள் கட்சியின் செயலாளர் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ளன.

புதியவர்கள் ஒரு இலட்சம் பேருக்கு அங்கத்துவம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டுமென கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் செயலாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.கவின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பாக புதிய முகங்களை இணைத்துக் கொள்ளும் பணிகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும் என செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், புதிய முகங்களை இணைத்துக் கொள்வதற்கான உதவிகள் ஐ.தே.கவின் மகளிர் அணி, இளைஞர்கள் அணி மற்றும் கிளைக் காரியாலயங்களின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூயோர்க் ரைம்ஸ் செய்தி எதிரொலி

# மகிந்தவுக்கு எதிராக நாடாளுமன்றில் ஒத்திவைப்பு வேளை பிரேரணை

(கொழும்பு)

தேர்தல் பரப்புரைக்காக சீன நிறுவனத்திடமிருந்து. 7.6 மில்லியன் டொலர் நிதியை மகிந்த ராஜபக்ஷ பெற்றார் என்று, நியூயோர்க் ரைம்ஸ் வெளியிட்ட செய்தி தொடர்பாக, நாடாளுமன்றத்தில் நாளை மறுதினம் ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.



நாடாளுமன்றத்தில் வரும், வியாழக்கிழமை இந்த ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வரும் என்று, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார். கோத்தபாயராஜபக்ஷவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் குறித்த ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பது குறித்தும், ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

எனினும், வாரத்தில் ஒரு ஒத்திவைப்பு வேளைப் பிரேரணையைக் கொண்டு வரவே எமக்கு அனுமதியுள்ளது.

எனவே, நியூயோர்க்ரைம்ஸ் செய்தி தொடர்பாக முதலில் ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்த முடிவு செய்துள்ளோம்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# கிரிவெஹேர விகாராதிபதியின் வைத்தியசாலைக் கட்டணம் 3 மில்லியனை தாண்டியது



(கொழும்பு)

கதிர்காமம்- கிரிவெஹேர விகாராதிபதி கொபவக தம்மிந்த தேரரின் வைத்தியசாலை கட்ட ணத்தை செலுத்த அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விகாராதிபதி மீது அண்மையில் துப்பாக்கிச் சூடு மேற்கொள் ளப்பட்டதையடுத்து, அம்பாந் தோட்டையிலிருந்து கொழும்புக்கு விமானம் மூலம் அழைத்து வரப்பட்ட அவர் கொழும்பில் தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

தாக்குதல் சம்பவத்தையடுத்து, விமானச் செலவு மற்றும் வைத்தியசாலை கட்டணத்தை அரசாங்கம் பொறுப்பேற்பதாக, அரச ஊடகப் பிரிவு அறிவித்திருந்தது.

தற்போது தேரரின் வைத்தியசாலைக் கட்டணம் 3 மில்லியனை தாண்டியுள்ளதாக தெரிய வருகிறது.

இருப்பினும், இதற்கு அமைச்சரவையில் அனுமதி பெறப்பட வேண்டும் என, புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா குறிப்பிட்டுள்ளதுடன், ஜனாதிபதிக்கும் இது குறித்து அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (இ-7)

# வகுப்பறையின் கூரை உடைந்து வீழ்ந்ததில் ஏழு மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

அம்பாந்தோட்டையிலுள்ள தனியார் வகுப்பறையின் கூரை உடைந்து விழுந்ததில் 7 மாணவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் பெலியத்த பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள நான்கு மாடிக் கட்டடத்தில் கல்வி நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் போது இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் 16 மற்றும் 15 வயதுடைய மாணவ, மாணவிகளே காயங்களுக்கு உள் ளாகி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த பிரதேசத்தில் மழையுடன் வீசிய பலத்த காற்றின் காரணமாக இவ்வாறு கூரை உடைந்து விழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கூரை உடைந்து விழும் சந்தர்ப்பத்தில் குறித்த வகுப்பில் சுமார் 750 மாணவர்கள் இருந்துள்ளனர்.

இதேவேளை, காயமடைந்தவர்களில் ஒரு மாணவன் தங்கல்ல வைத்தியசாலையிலும் ஏனைய ஆறு பேரும் பெலியத்த வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், கட்டடத்திற்கு அருகில் இருந்த வியாபார நிலையங்களும் பாதிக் கப்பட் டுள்ளதாக தெரிய வருகிறது. (இ-7)

# கணக்காய்வுத் திணைக்களத்திற்கு பதிலாக கணக்காய்வு அலுவலகம்

(கொழும்பு)

புதிய கணக்காய்வுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி கணக்காய்வுத் திணைக்களத்திற்குப் பதிலாக அரசாங்கத்தின் கணக்காய்வு அலுவலகம் அமைக்கப்படவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கணக்காய்வாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில்,

திணைக்களத்தின் கீழ். மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் பணிகளும் வளங்களும் பணியாளர்களும் அரச கணக்காய்வாளர் அலுவலகத்திற்கு உள்வாங்கப்படுவர்.

கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

**எண் 2 (சந்திரன்)**
**(சமுதாயச் சிற்பிகள்)**

**பெயர் எண் 119**

வியாபார விலாசம் கொடி கட்டிப் பறக்கும். புகழ் சேரும், மக்கள் முன்பு கவர்ச்சியான தோற்த்தோடு கம்பீரமாக காட்சியளிப்பார்கள். வெற்றி வீரர்களாக வலம் வருவார்கள். சிற்சில மனக்குழப்பங்கள் வந்து நீங்கும். கற்பனை வளமிக்கவர்கள். காரிய சித்தியுண்டாகும். திரவப் பொருள் விற்பனையில் பெரும் இலாபம் கிட்டும். வயது ஏற ஏற வாழ்க்கை பிரகாசமடையும்.

**பெயர் எண் 128**

பலரைக் கவர்ந்திழுக்கும் சக்தி வாய்ந்தது. பல தார அமைப்பை உண்டாக்கும். மது, மாது அடிமையாக்கும். ஆன்மீக விடயத்திற்கு அதிக அளவு செலவுகள் செய்வார்கள். கஷ்டப்பட்டு உழைத்தும் கடைசியில் பொருள் இழப்புகள் உண்டாகும். இவர்களின் பொருள், புகழை மற்றவர்கள் தட்டிச் சென்று விடுவார்கள். சில நேரங்களில் குடும்ப வாழ்க்கையை வெறுத்து சந்நியாச நிலைக்குத்தள்ளப்படுவார்கள். வேதாந்தம் பேசி வீண் பொழுதைப் போக்குவார்கள். எதிலும் நிலையிருக்காது.

**பெயர் எண் 137**

பெரியபதவி பொறுப்புகள் வலியத் தேடிவரும். எப்போதும் அலைபாய்ந்து கொண்டேயிருக்கும். தெய்வீக அருள் பூரணமாகக் கிடைக்கும். அடிக்கடி வெட்டுக்காயம், பல் ஈறுகளில் வலி தலைக்கனம், நீர் அழுத்த நோய்கள் உண்டாகும். உஷ்ணமான பொருட்கள் உண்பதைத் தவிர்க்க வேண்டும். மனதிற்கினிய மண வாழ்க்கை அமையும். நல்ல புது வழி பாக்கியங்கள் கிடைக்கும்.

**பெயர் எண் 146**

இவ்வெண் மிகுந்த பணவரவை உண்டாக்கும். நவதானியங்கள் மூலமும் வளர்ப்புப் பிராணிகள் மூலமும் மேன்மை தரும். பிறர் உதவிகள் மூலமே நன்மையடைவார்கள். சொந்த முயற்சி வெற்றியைத் தராது. பசுமைப் புரட்சி செய்வார்கள். நீர் நிலைகளால் பணம் சேர்ப்பார்கள். நவதானியங்களால் பெரும் பணம் சேரும். ஆடு, மாடு, கோழி, நாய் போன்ற வளர்ப்புப் பிராணிகள் மீது மிகுந்த பாசமிருக்கும்.



விநாயகராமன்

சந்திரஆதிக்கஎழுத்துக்களின் குணாதிசயங்கள்

**B**...ஆத்ம சக்திகளின் பிறப்பிடமாகத் திகழும் எழுத்தாகும். தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு வெற்றியைப் பெற்றுத் தரும். சிறந்த அறிவாற்றல் இருக்கும். எழுத்து, பேச்சு பலம் கூடும். கற்பனை வளமிக்கது. தலைசிறந்த நிர்வாகத் திறமை வெளிப்படும். வெகு சீக்கிரத்தில் உணர்ச்சி வசப்படுவார்கள். மனதில் புதுப்புது எண்ணங்கள் உதயமாகிக் கொண்டேயிருக்கும். இது நன்மைகள் பலவற்றைச் செய்யும் எழுத்தாகும். மனதில் தோன்றும் கருத்தை அப்படியே வெளியிடுவார்கள். ஆன்மீகத்தில் அதிக பற்று இருக்கும். சில நேரத்தில் மனதில் இரகசியங்களை வெளியிட முடியாது தவிர்ப்பார்கள். நேரடியாக எதையும் செய்து சாதிக்க முயல்வார்கள். சமாதானத்தைப் பெரிதும் விரும்புவார்கள். கலை ஆர்வமும் தேர்ச்சியும் இருக்கும். வீணான விடயத்தில் தலையிட மாட்டார்கள். அரசனுக்கு நிகராக வாழ நினைப்பார்கள். அந்தஸ்தான வாழ்க்கை அமையும். தன்னுடைய சொந்த வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து காட்டுவார்கள். சில சமயம் அறிவைச் சரியாகப் பயன்படுத்தாமல் வீண் சண்டைகளையும் புறம் கூறுவதையும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதையும் வீண் பழிச்சொல் கூறுவதையும் செய்பவராக எல்லோரையும் மாட்டி விடுபவராகவும் ஊர் வம்பு பேசுபவராகவும் இருப்பதால் பகையைச் சம்பாதிப்பார்கள்.

கலைகளில் சரித்திரம் படைப்பார்கள். எழுத்துத் துறையில் சாதிப்பார்கள். சமாதானத்தின் மூலம் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முயல்வார்கள். பல கலைகள் கற்றவர்கள். கட்டடம் பல கட்டுவார்கள். உணர்ச்சியைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். தெய்வ நம்பிக்கை கைகொடுக்கும். அயராத உழைப்பாளிகள்.

**K**...சகல கலைகளும் கைகூடும். கலைத்துறை பெரும்புகழைச் சேர்க்கும். பல கலை நிபுணர்கள். முன்னேற்றத்தில் தீவிர ஆர்வமிருக்கும். உலக மக்களுக்கு நன்மை செய்வார்கள். தூய்மை உணர்வைத் துண்டும். நாட்டுப்பற்று, மொழிப்பற்று அதிகமாக இருக்கும். தன்னை நம்பி வந்தவரை எப்பாடு பட்டாவது காப்பாற்றுவார்கள். உணர்ச்சிகளால் பாதிக்கப்படுவார்கள். தன்மானம் காப்பார்கள். கலைத்துறையில் பெரும்பிரகாசம் கிட்டும். மிகப் பெரிய கலைஞராக்கும். பொன்னும் பொருளும் வந்து சேரும். மக்களிடம் நன்மதிப்புக் கிடைக்கும் உலக மக்களின் நன்மைக்காகச் சேவை செய்வார்கள். தூய்மையானவர்கள். இயல், இசை, நாடகத்துறைகளில் சிறந்து விளங்குவார்கள். கருத்தாழமிக்கவர்கள். பல தொழில் செய்யும் பாக்கியமுண்டாகும்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச காணி அபகரிப்பிற்கு எதிராக கிளர்ந்தெழுந்த கல்லடி மக்கள்








(கல்லடி)

மட்டக்களப்பு கல்லடி பாலத்திற்கு அருகில் நீர் வழிந்தோடும் அரச காணியை அத்துமீறி அபகரிப்பதற்கு எதிராக அப்பகுதி மக்கள் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்ததுடன் இது தொடர்பில் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

நேற்றுக் காலை கல்லடி பாலத்திற்கு அருகில் நீண்ட காலமாக அரச காணியாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த காணியொன்றுக்குள் நுழைந்தவர்கள் குறித்த காணிக்குள் வேலி அமைக்கும் பணிகளை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த காணியை அடைத்து அதனை கொழும்பிலிருந்து வருகைதந்தவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையினை குறித்த நபர்கள் மேற்கொண்டிருந்ததாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியூடாகவே மழை காலங்களில் காத்தான்குடி தொடக்கம் பல பகுதிகளில் வெள்ளநீர் வழிந்து மட்டக்களப்பு வாவிக்குள் செல்வதாகவும் குறித்த பகுதியை அபகரிக்கும் நோக்கில் போலி ஆவணங்களை கொண்டு வந்து ஆக்கிரமிக்க முற்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டினர்.

குறித்த காணியில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணியென அடையாளப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அந்த பாதையினை உடைத்துவிட்டு குறித்த காணியை வேலியிட சிலர் முயற்சித்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்குவந்த மட்டக்களப்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் க.சத்தியசீலன், பிரதேச கிராம உத்தியோகத்தர் திருமதி நவஜீவிகா வேந்தன் ஆகியோர் குறித்த பகுதியில் நடைபெற்ற அத்துமீறல்செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது அங்கு வந்த காத்தான்குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் அது தொடர்பில் ஒருவரை கைதுசெய்து அழைத்துச்சென்றனர்.

குறித்த காணி அரச காணியெனவும் அதற்கான அறிவித்தல் பலகை நீண்டகாலமாக வைக்கப்பட்டிருந்ததாகவும் கிராம உத்தியோகத்தர் தெரிவித்தார்.

இந்தக் காணியின் ஊடாக பல இடங்களின் வெள்ள நீர் காலாகாலமாக வடிந்து செல்வதாகவும் இதனை அடைத்தால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் எனவும் எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதேச மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. . (இ-7)

# சு.கவில் ஜனாதிபதி வேட்பாளர்கள் போதுமானளவில் உள்ளனராம்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு



(கொழும்பு)

நாம் பலவீனமடைந்தால் மக்கள் அடித்து விரட்டினாலும் பிரச்சினையில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா தெரிவித்தார்.

கண்டி ஹாரிஸ்பத்துவ பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"சிலர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் யார் என கேட்கின்றனர். ஜனாதிபதி தேர்தல் நெருங்கும் நேரத்திலேயே வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தேர்தல் நெருங்கும் பொழுது நாட்டு அரசியலின் நிலைமை, வெவ்வேறு கட்சிகளின் நிலை போன்றவற்றை ஆராய்ந்து கலந்துரையாடியதன் பின்பே நாம் வேட்பாளர் ஒருவரைத் தேர்ந்தெடுப்போம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினுள் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகக் களமிறங்கக்கூடிய போதுமான அளவு நபர்கள் உள்ளனர்.

அதுபோலவே மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலும் நாம் பெரிதாக பிரச்சினைக்குள்ளாக தயாராக இல்லை. தேர்தல் நெருங்கும் போது அதற்கான முடிவுகளை எடுப்போம். ஆனால் இவற்றில் எது நடைபெறவேண்டுமானாலும் கட்சியைப் பலப்படுத்திச் செல்ல வேண்டும்.

ஊடகங்கள் செயற்படுவதைப் போல விவாதத்தனமாக நாமும் செயற்பட்டால் நமது கட்சியின் நிலையும் வேறு கட்சிகளின் நிலைமைபோலாகிவிடும். எனினும் நமது கட்சி சார்பில் மக்களுக்கு செய்ய வேண்டிய ஒரே பணி பிரதேச ரீதியாக மக்களை ஒன்றிணைத்து எமது கட்சியை பலப்படுத்துவதாகும். அதன்மூலம் மக்கள் அனைவருக்கும் பல்வேறு விதமான வேலைத் திட்டங்கள் முன்வைக்கப்படும்.

நாம் பலமிக்கவர்களாக இருந்தால் நாம் யாருக்கும் தேவைப்படுவோம். நாம் பலவீனமடைந்தால்மக்கள்எம்மை அடித்து விரட்டினாலும் பிரச்சினையில்லை. ஆனால்அதற்கு ஒருபோதும்இடமளிக்காது நாம் செயற்படுவோம்." என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1458

## ஹஸ்பதி


தகுதி பார்க்கும் மக்களே மறந்து போய்விடாதீர்கள்



விவசாயியின் கால்பட்ட அரிசியைத்தான் கழுவி உண்கின்றீர்கள் என்பதை...!

## கிஷானா


உணவைக்கொடுத்து உயிரை எடுப்பதுதான்



உலகிலேயே மிகவும் கொடுமையான நம்பிக்கைத் துரோகம்!

## ஷயூ

வாழ்க்கை ஒரு படகு ஆகும். அதை முறையாகக் கற்றவர்கள் கரையை அடைந்துவிட்டனர்.



அரைகுறையாகக் கற்றவர்கள் இன்னும் மிதக்கின்றனர்.அதைப் புரிந்துகொள்ளத் தெரியாதவர்கள் மூழ்கி இறக்கின்றனர்.

## பிரியா

ஒரு ஆண் நல்ல கடந்தகாலம் கொண்ட பெண்ணையும் ஒரு பெண் நல்ல எதிர்காலம் கொண்ட ஆணையும் தேடுவதுதான் திருமணம்




## மயூரி

அடுத்தவன் தவறை சுட்டிக்காட்டும்போது ஒரு விரல் தான் அவனை நோக்கி இருக்கும். மூன்று விரல் உன்னை நோக்கியே இருக்கும். நீ! அதற்கு தகுதியானவன்தானா என்று நினைத்து அவன் தவறைச் சுட்டிக்காட்டு



## கபிஷனா

தெருவில் கிடக்கும் காகிதமாக யாரையும் நினைக்காதே, நாளை அது பட்டமாக பறந்தால் நீயும் சற்று நிமிர்ந்துதான் பார்க்க வேண்டும்...



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்களைத் தடுக்க படையினர் தவறிவிட்டனர்

## கூட்டு எதிரணி குற்றச்சாட்டு



(கொழும்பு)

நாட்டில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைத் தடுக்க பாதுகாப்புப் படையினர் தவறிவிட்டனர் என கூட்டு எதிரணியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார்.

எம்பிலிபிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் தற்போது குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளதாக தெரிவித்த அவர், வங்கிக் கொள்ளைகளும் அதிகரித்துள்ளமை வருத்தமளிப்பதாகக் கூறினார்.

இந்நிலையில் குறித்த குற்றச்செயல்கள் தொடர்பில் உரிய அதிகாரிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் தலையிட்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் நாட்டை விட்டு தப்பிச் செல்வதாக சுட்டிக்காட்டிய அவர், இவ்வாறான செயற்பாடுகளால் நாடு ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான குற்றச் செயல்களால் தற்போது பிரிவினைவாதிகள் தங்கள் தலையை உயர்த்தியுள்ளனர். இந்நிலையில் அரசாங்கம் இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# பௌதீக அபிவிருத்தி போன்று ஆன்மீக செயற்றிட்டங்களும் நாட்டிற்கு முக்கியம்- மைத்திரி



(கொழும்பு)

பௌதிக ரீதியில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் விரிவான அபிவிருத்திப் பணிகளைப் போன்றே ஆன்மீக நற்பண்புகளை வளர்க்கக் கூடிய விரிவான செயற்திட்டங்களும் நாட்டிற்கு அவசியமாகும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுட்டிக்காட்டினார்.


சமய சூழலிலிருந்து விலகியுள்ள மக்களை மீண்டும் சமய வாழ்வியலை நோக்கி வரச்செய்து அன்பு, கருணை மற்றும் மனிதாபிமானத்துடன் விழுமியப் பண்புகளைப் பாதுகாக்கும் சமூகத்தை நாட்டில் கட்டியெழுப்ப சகல தரப்பினரும் தமது பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

பொலநறுவை, புலஸ்திகம ஸ்ரீசாந்தி நிக்கேத்தனாராம விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தாது கோபுரத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விகாரைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி முதலில் சமய அனுஷ்டானங்களில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், புதிய தாது கோபுரத்தை திறந்து வைத்தார்.

அதன்பின்னர் இடம்பெற்ற நிகழ்வில் புதிய தாது கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு நிதி உதவியளித்த நியுரத்ன குழும நிறுவனத்தின் லங்கேஸ்வர மித்ரபாலவுக்கு ஜனாதிபதி நினைவுப்பரிசு வழங்கினார். (இ-7)

# நீண்ட காலத்திற்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைப்பிரிவு



(திருமலை)

திருகோணமலை பொது வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சைப் பிரிவு நேற்று வைத்திய கலாநிதி டாக்டர் கனேகபாகுவினால் திறந்து வைக்கப்பட்டது.

புற்றுநோயினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக கொழும்பு, மஹரகம மற்றும் அநுராதபுரம் போன்ற பகுதிகளுக்கு சென்று சிகிச்சைபெற்று வந்தனர்.

இவர்களின் நலன்கருதி 72 இலட்சம் ரூபாய் செலவில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கான சிகிச்சை பிரிவு திறந்து வைக்கப்பட்டது.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவு இல்லாத காரணத்தினால் நோயாளர்கள் தங்களின் மருந்துகளை கலக்குவதற்கு, பொலநறுவை, அநுராதபுரம் போன்ற மாவட்டங்களுக்கு சென்று மருந்துகளை கலக்கி வந்துள்ளனர்.

இதனால் தூர இடங்களிலிருந்து வரும் நோயாளர்களின் நலன் கருதி உடனே மருந்துகளை கலக்கி நோயாளர்களுக்கு வழங்கும் நோக்கிலேயே உருவாக்கப்பட்டதாக வைத்திய நிபுணர் டாக்டர் கனேகபாகு தெரிவித்தார். (இ-7)

# ஜப்பானில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தில் இலங்கையர்களுக்கு பாதிப்பில்லை

(கொழும்பு)

ஜப்பானில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயங்களால் இலங்கையர்கள் எவரும் பாதிக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை ஜப்பானிய அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இயற்கை அனர்த்த நிலைமைகள் தொடர்பில் தொடர்ச்சியாக அவதானித்து வருவதாகத் தெரிவித்துள்ள, டோக்கியோவிலுள்ள இலங்கைத் தூதரகம் இலங்கையர் தொடர்பில் உன்னிப்பாக அவதானம் செலுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பேருந்துகள் நேருக்கு நேர் மோதியதில் 60 பேர் வைத்தியசாலையில்





(கொழும்பு)

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியின் மெல்சிறிபுர, கொகரல்ல பகுதியில் ஏற்பட்ட விபத்தில் சுமார் 60 பேர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தனியார் பேருந்துகள் இரண்டு நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து எம்பிலிபிட்டிய நோக்கி பயணித்த பேருந்தும் எம்பிலிபிட்டியவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த பேருந்துமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

விபத்தில் பலத்த காயமடைந்த 50 பேர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# மகிந்த ஆட்சியில் அச்சுறுத்தல் மைத்திரி ஆட்சியில் நிவாரணம்

## ஊடகவியலாளர்களை விண்ணப்பிக்க கோரிக்கை

(கொழும்பு)

2005 தொடக்கம் 2015 வரையான காலப்பகுதியில் பல்வேறு அழுத்தங்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளான ஊடகவியலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைய குழுவின் சிபார்சுகளை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைவாக, துன்புறுத்தல், சிரமங்களுக்கு உள்ளாக்கப்பட்டோர் தமது நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனவர்களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க அமைச்சரவை உப குழு தீர்மானித்துள்ளது.

ஊடகவியலாளர்கள் போன்று அமைப்புகளுக்கும் இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய குறிப்பிட்ட காலப்பகுதியில் கொலை, தாக்குதல் மற்றும் பல்வேறு சிரமங்களுக்கும் துன்பங்களுக்கும் உள்ளான ஊடகவியலாளர்கள், ஊடக சேவையாளர்கள் தொடர்பான விண்ணப்பங்களைக் கோருவதற்கு அந்தக் குழு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கான ஆலோசனைகளையும் விண்ணப்பங்களையும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று நிதி மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விண்ணப்பங்களையும் ஆலோசனைகளையும் தொலைபேசி மற்றும் தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் ஊடகத்துறை அமைச்சிற்கு தபால்மூலம் அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 011 251 3645, 011 251 3469 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா மௌனம்

## மத்தள விமான நிலையம் குறித்து எந்தக்கருத்தும் வெளியிட முடியாது

(டில்லி)

மத்தள அனைத்துலக விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை இந்தியா பெற்றுக் கொள்ளவுள்ளதாக இலங்கை அரசாங்கத் தரப்பில் செய்திகள் வெளியிடப் பட்டுள்ள போதிலும், இந்திய அரசாங்கம் இதுபற்றி கருத்து வெளியிடுவதை தவிர்த்து வருகிறது.

கடந்த வாரம் இந்திய அதிகாரிகள் குழுவொன்று கொழும்பு வந்து இரண்டு நாட்கள் பேச்சுக்களை நடத்தியிருந்தது.

இதன்போது மத்தள விமான நிலையத்தின் 70 வீத பங்குகளை, இந்தியாவும், 30 வீத பங்குகளை இலங்கையும் பகிர்ந்து கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது.

40 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில் இந்த உரிமை உடன்பாடு செய்து கொள்ளப்படவுள்ளதாக, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

70 வீத பங்குகளுக்காக 225 மில்லியன் டொலர் நிதியை இந்தியா வழங்கும் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த இணக்கப்பாடு தொடர்பாக இந்திய தரப்பில் இது வரை அதிகாரபூர்வ தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதுபற்றி இப்போது எந்தக் கருத்தையும் வெளியிட முடியாது என்று இந்திய விமான நிலையங்கள் அதிகார சபையின் பேச்சாளர் ஜேபி சிங், ஹிந்துஸ்தான் ரைம்சிடம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்திய வெளிவிவகார அமைச்சு மற்றும் இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சுக்களின் பேச்சாளர்களைத் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாக ஹிந்துஸ்தான் ரைம்ஸ் தெரிவித்துள்ளது. (இ-7)

## சம்பளப் பிரச்சினைக்கு அமைச்சுப் பதவி தடை என்றால் அதைத் துறக்க நான் தயார்

## திகாம்பரம் திட்டவட்டம்

(ஹற்றன்)



தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு ஒப்பந்தத்தில் இம்முறை கைச்சாத்திடும் தரப்பினர்தெளிவாக ஒப்பந்தம்செய்து கொள்ள வேண்டும். இல்லையேல் மக்களை இணைத்து வீதியில் இறங்கி போராடுவேன் என தெரிவித்த அமைச்சர் பழனி திகாம்பரம் தோட்டப்பகுதிகளில் பெருந்தோட்ட கம்பனிகளுக்கு எதிராக போராடுவதற்கு தயாராகும் படி மக்களை வழியுறுத்திக் கொண்டார்.

மலைநாட்டு புதிய கிராமங்கள், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் ஊடாக "பசும் பொன்" என்ற வீடமைப்பு திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 90 வீடுகள் நேற்று முன்தினம் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் சம்பள பிரச்சினை தொடர்பான கூட்டு ஒப்பந்தம் செய்யப்படவிருக்கின்றது. கடந்த காலத்தில் தனித்தனியாக பேச்சுவார்த்தை நடத்தியவர்கள் கடந்த இரு தினங்களுக்கு முன் கூட்டாக இணைந்து பேசி வருகின்றனர்.

ஒவ்வொரு முறையும் சம்பள பிரச்சினை காலத்தில் மக்களுடன் சேர்ந்து நானும் வீதியில் இறங்கி போராடுவதால் தான் ஓரளவு ஏனும் சம்பளம் கிடைக்கின்றது.

இப்பொழுதும் கூட திகாம்பரம் அமைச்சராக இருப்பதால் தான் சம்பள உயர்வு விடயத்தை பேச முடியாது உள்ளதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். சம்பள உயர்வுக்கு எனது அமைச்சு தான் தடை என்றால் அமைச்சு பதவியிலிருந்து விலகவும் நான் தயார். அமைச்சு பதவி எனக்கு ஒரு பெரிய விடயம் அல்ல.

அதேவேளையில்பதுளை மாவட்ட எம்.பி வடிவேல் சுரேஸ் 750 ரூபாய் அடிப்படை சம்பளம் இல்லை யென்றால் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மாட்டேன் என தெரித்திருக்கின்றார். அப்படியென்றால் அதை அவர் பெற்றுக்கொடுத்தால் எமக்கு பெரிய சந்தோஷமாகும். அவரை பாராட்டுவோம்.

ஆனால் ஆயிரம் ரூபாய் என்று கடந்த காலத்தில் முன் வைத்தவர்கள்இன்று750 ஆக அறிவிக்கின்றனர். இவர்களின் அறிக்கையை பார்த்தால் இவ்வாறாக தெரிகின்றது.

கடந்த காலங்களில்சம்பள பேச்சுவார்த்தையின் போது தொழிலாளர்களுக்கு நிலுவை பணம் கிடைக்கவில்லை. இதற்கும் என்னை சுட்டிக் காட்டி குறை கூறினார்கள். ஆனால் நான் திறைசேரியிலிருந்து இரண்டு மாதத்திற்கு ஆறாயிரம் ரூபாவை மக்களுக்கு பெற்றுக்கொடுத்ததால் தான் நிலுவை பணமும் பெறமுடியவில்லை என குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறாக காலம் காலமாக பொய் சொல்லி மக்களை ஏமாற்றி வருபவர்களை நம்பும் நீங்கள் உண்மை சொல்லும் எங்களை ஏன் நம்புவதில்லை எனவும் தெரிவித்தார்.

எனக்கும் அந்த தலைவருக்கும் எந்த ஒரு பிரச்சினையும் கிடையாது. முகம் கூட பார்த்து கதைத்ததில்லை. ஆனால் மக்களுக்கு நடக்கும் அநியாயத்தை தட்டி கேட்பதாலேயே அவருக்கும் எனக்கும் பிரச்சினை ஏற்படுகின்றது என தெரிவித்த இவர் எதிர்வரும் தேர்தலில் கடந்த காலத்தில் செய்த தவறுகளை செய்து விடாதீர்கள். அப்போது காலம் காலமாக அடிமைகளாகவே இருக்க வேண்டி வரும்.

எதிர்வரும் சம்பள பிரச்சினையில் மக்களோடு தான் நான் இருப்பேன். கம்பனிக்காரர்களுக்கு எதிராக போராடுவேன். அப்போது தான் கம்பனிக்காரர்களும் பயப்படுவார்கள். இல்லையேல் கம்பனிக்காரர்கள் ஒப்பந்தம் செய்பவர்களையும் மக்களையும் ஏமாற்றி விடுவார்கள்.

எனவே வீட்டில் இருங்கள்சம்பளம் கிடைக்கும்என்று சொல்பவர்கள்சரியான முறையில் சம்பளத்தை பெற்றுக் கொடுத்தால் நாம் ஏன் வீதிக்கு இறங்கி போராட வேண்டும் தேவை இல்லை. ஆனால் முறையாக சம்பளம் பெற்று தராத பட்சத்தில் போராடியாவது 20 வீதம் தொகை சம்பளத்தை பெற்றுக் கொள்கின்றோம்.

ஆனால் அடிப்படை சம்பளம் கூட்டப்படுகின்றதா என கேள்வி எழுப்பிய இவர் இன்று மலையகத்தில் இரண்டாவது தொழிற்சங்கமாக தொழிலாளர் தேசிய சங்கம் இருக்கின்றது. எம்மை தவிர்த்து விட்டு சென்று மக்களை ஏமாற்ற முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அலோசியஸ் தொலைபேசியில் உரையாடியவர்களை அடையாளம் காணும் பொறுப்பு CIDயிடம் ஒப்படைப்பு



(கொழும்பு)

விளக்கமறியல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸ் தொலைபேசியில் உரையாடிய நபர்களை அடையாளம் காணும் பொறுப்பை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வழங்கியுள்ளதாக வெலிக்கடை சிறைச்சாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அர்ஜுன் அலோசியஸ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறையில் இருந்து தொலைபேசி சிம் அட்டைகளும் சிறைச்சாலை தலைமையகத்தின் புலனாய்வு பிரிவினரால் அண்மையில் கைப்பற்றப்பட்டன. இந்த சிம் அட்டைகள் சிறைச்சாலை அதிகாரி ஒருவரால் சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு கிறது.

சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டதை அடுத்து அலோசியஸ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கு அருகில் வேறு ஒரு காவலர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

சிம் அட்டை மூலம் தொடர்பு கொண்ட நபர்களின் விபரங்கள் விரைவில் வெளியாகும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. (இ-7)

# செய்தித்துளிகள்

## பெண் புலியாக விஜயகலா



(கிரான்)

இதுவரை காலமும் செல்லப்பிள்ளையாக இருந்த விஜயகலா இப்பொழுது பெண்புலியாக மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

கிரானில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ் மக்களின் உணர்வையான உணர்வுகளை அவர் வெளியில் சொல்லியதால் அவர் பெண்புலியாக இப்பொழுது மாற்றப்பட்டுள்ளார். இந்த நிலைமை எல்லா அரசியல்வாதிகளுக்கும் வரும். புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக மிகவும் ஆக்கபூர்வமாக சிந்தித்து செயற்பட்டால் மாத்திரம் தான் இந்த நாடு தப்பிப் பிழைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இலங்கை-சீனா இடையே ஆழமான உறவு உண்டு



(கொழும்பு)

இலங்கை மக்களுக்கு நன்மையளிக்கும், உதவிகளை சீனா தொடர்ந்து வழங்கும் என்று சீனத் தூதுவர் செங் ஷியுவான் தெரிவித்துள்ளார்.

தங்காலை வைத்தியசாலைக்கு மருத்துவ மற்றும் பணியக கருவிகளை அன்பளிப்பாக வழங்கிய நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். "இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில்-இரண்டு நாடுகளின் மக்களுக்கிடையில், வரலாற்று ரீதியாக பல்வேறு துறைகளில் ஆழமான உறவுகள் இருந்து வருகின்றன. இலங்கைக்குத் தேவையான உதவிகளை சீனா வழங்கி வருகிறது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## உற்பத்தியாளர்கள் ஊக்குவிப்பு

(கொழும்பு)

தென்மாகாணத்தில் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக புதிய தொழில்துறைகள் மற்றும் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்கு மாகாண சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்கீழ் விவசாயம் கைப்பணித்துறை, சுற்றுலா, சிற்றுண்டிச்சாலைகள் போன்ற துறைகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுமார் 7 ஆயிரம் குடும்பங்கள் இத்துறைகளில் ஈடுபட்டுள்ளன. கைத்தொழில், சுற்றுலா மற்றும் கடற்றொழில் உள்ளிட்ட மாகாண அமைச்சுக்களின் மூலம் ஒரு கோடி ரூபாய் நிதி இதற்காக வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## ஐ.தே.கவிடம் மண்டியிடத் தயாரில்லை விரைவில் புதிய கட்சி ஆரம்பம் -திஸ்ஸ



(கொழும்பு)

விரைவில் தாம் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். அஸ்கிரிய பீட மகாநாயக்கரை சந்தித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனை தெரிவித்தார். தாம் ஐக்கிய தேசிய கட்சியிடம் மண்டியிட இனியும் தயாரில்லையெனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## 4கிலோமீற்றர் வீதி புனரமைப்பு

(வரணி)

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பராமரிப்பின் கீழுள்ள வரணி.மாசேரியூடாக குடத்தனை செல்லும் வீதியானது சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்பட்டது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தித் திணைக் களத்தினருக்கு சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து தற்போது 4 கிலோமீற்றர் நீளம் வரையான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. எனவே இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்கள் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினருக்கு நன்றி தெரிவித்துள்ளனர். (இ-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## பயம் ஒருவனை முட்டாளாக்கிவிடும்

ஒரு காட்டில் ஒரு இளைஞன் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனுக்குப் பசியெடுத்தது. ஒரு மரத்தின் உயரத்தில் கனிந்த பழங்கள் இருப்பதைக் கண்டான். மரத்தின் மேல் சரசரவென்று ஏறி அவற்றில் சில பழங்களைப் பறித்துத் தின்றான்.

மிகக் கனிந்த வாசனையுள்ள பழங்கள் கிளைகளின் நுனியில் இருந்தன. அவற்றை எட்டிப் பறிக்கக் கிளையின் மேல் நகர்ந்து சென்ற போது அவனது பாரம் தாங்காமல் ஒரு கிளை முறிந்து விட்டது.

சட்டென்று சுதாரித்த அவன் கீழே இருந்த ஒரு கிளையைப் பிடித்துக் கொண்டு தொங்க ஆரம்பித்தான். குனிந்து பார்த்தால் தரை வெகு கீழே இருந்தது. ஏற்கனவே பயந்து போயிருந்த அவன் மேலும் பயந்து கண்ணை மூடிக் கொண்டு "யாராவது காப்பாற்றுங்கள்" என்று திரும்பத் திரும்ப அலற ஆரம்பித்தான். உள்ளங்கை வியர்த்து வழுக்க ஆரம்பிக்கும் நிலை வந்து விட்டது.

தற்செயலாக அப்போது அந்தப் பக்கம் ஒரு முதியவர் வந்தார். மரத்தில் தொங்கிக் கொண்டிருந்தவனைப் பார்த்தார். அவன் மேல் ஒரு சிறிய கல்லை விட்டு எறிந்தார். கல் பட்டவுடன் வலியில் கீழே பார்த்தவனுக்கு ஆத்திரம் வந்தது. "பெரியவரே, உதவச் சொன்னால் கல்லால் அடிக்கிறீரே. அறிவில்லையா உமக்கு" என்று கோபத்துடன் கேட்டான்.

பெரியவர் பதில் பேசாமல் மற்றொரு சிறிய கல்லை எடுத்து அவன் மேல் எறிந்தார். மேலும் கோபமுற்ற இளைஞன் பெருமுயற்சி எடுத்து கையை வீசி மேலிருந்த கிளை ஒன்றை பலமாக பற்றிக் கொண்டு "நான் கீழே வந்தால் உம்மைச் சும்மா விட மாட்டேன்" என்று எச்சரித்தான்.

பெரியவர் மேலும் ஒரு கல்லை அவன் மேல் வீசினார். இளைஞன் இப்போது இன்னொரு பெருமுயற்சி எடுத்து கிளைமேல் ஏறி விட்டான். விடுவிடுவென இறங்கி வந்த அவன் நேராகப் பெரியவரிடம் வந்தான். அவரை சரமாரியாகத் திட்டினான். "ஏன் அப்படிச் செய்தீர்? உம்மை நான் உதவிதானே கேட்டேன்?" என்றான்.

பெரியவர் அமைதியாக சிரித்துக்கொண்டே "தம்பி.. நான் உனக்கு உதவிதான் செய்தேன்" என்றார். இளைஞன் திருதிருவென முழித்தான்.

பெரியவர் விளக்கினார். "நான் உன்னை முதலில் பார்த்த போது நீ பயத்தால் உறைந்து போயிருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை விட்டு எறிந்ததும் பயம் மறைய ஆரம்பித்து நீ என்னை எப்படிப் பிடிப்பது என்று யோசிக்க ஆரம்பித்தாய். யோசிக்க ஆரம்பித்தவுடன் நீயாகவே உன்னைக் காப்பாற்றிக் கொண்டு கீழே இறங்கி விட்டாய். உன்னை உன்னாலேயே காப்பாற்றிக் கொள்ள முடியும் என்று உன் அறிவுக்கு முதலில் புலப்படவில்லை. உன் பயம் உன் கண்ணை மறைத்துக் கொண்டிருந்தது. அதிலிருந்து உன்னை நான் திசை திருப்பினேன்" என்று சொல்லி விட்டுத் தன் வழியே அவர் போய் விட்டார்.



## 2018.07 10 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1988 - டப்ளின் நகரம் அமைக்கப்பட்டது.
- ❖ 1212- லண்டன் நகரின் பெரும் பகுதியை தீ அழித்தது.
- ❖1778 - அமெரிக்கப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி பிரித்தானியா மீது போரை அறிவித்தான்.
- ❖1796 - ஒவ்வொரு நேர் முழு எண்ணும் அதிகபட்சம் மூன்று முக்கோண எண்களின் கூட்டுத் தொகையாகக் கொடுக்கலாம் என்பதை கார்ல் ஃப்ரெடெரிக்காஸ் கண்டுபிடித்தார்.
- ❖1800- உருது, இந்தி மற்றும் உள்ளூர் மொழிகளை ஊக்கப்படுத்தவென கொல்கத்தாவில் போர்ட் வில்லியம் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1806 - வேலூர் சிப்பாய் எழுச்சி: தமிழ்நாட்டில் வேலூர்க் கோட்டையில் நிகழ்ந்த எழுச்சியில் நூற்றுக்கணக்கான ஆங்கிலப் படையினர் கொல்லப்பட்டனர்.
- ❖ 1890 - வயோமிங் ஐக்கிய அமெரிக்காவின் 44ஆவது மாநிலமாக சேர்க்கப்பட்டது.
- ❖1909-ஜேர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் சேவைக்கு விடப்பட்டது.
- ❖1925 - சோவியத் ஒன்றியத்தின் செய்தி நிறுவனம் டாஸ் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1925 - இந்திய ஆன்மீகத் தலைவர் மெஹெர் பாபா இறக்கும் வரையான (44 ஆண்டுகள்) மௌன விரதத்தை ஆரம்பித்தார். இந்நாள் அமைதி நாளாக அவரின் பக்தர்களால் கொண்டாடப்படுகிறது.
- ❖1941 - இரண்டாம் உலகப் போர்: போலந்தின் ஜெட்வாப்னி நகரில் நூற்றுக்கணக்கான யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் படுகொலை செய்யப்பட்டனர்.
- ❖1958 - அலாஸ்காவில் மிகப் பெரும் சுனாமி அலை (524 மீற்றர் உயரம்) பதியப்பட்டது.
- ❖1962-உலகின் முதல் தொலைத் தொடர்பு விண்கலமான டெல்ஸ்டார் விண்ணில் ஏவப்பட்டது.
- ❖1973-பங்களாதேஷத்தை அங்கீகரிக்கும் தீர்மானம் பாகிஸ்தான் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டது.
- ❖ 1973 - பஹாமாஸ் பொதுநலவாயத்தின் கீழ் முழுமையான விடுதலை அடைந்தது.
- ❖ 1978-மௌரித்தானியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து ஜனாதிபதி மொக்தார் டாடா பதவியிழந்தார்.
- ❖1991 -தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட அணி பன்னாட்டுத் துடுப்பாட்ட வாரியத்தில் மீண்டும் சேர்க்கப்பட்டது.
- ❖1991 - யாழ்ப்பாணம் ஆனையிறவு இராணுவத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் போர் தொடுத்தனர்.
- ❖1992 -போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல குற்றங்களுக்காக முன்னாள் பனாமாத் தலைவர் மனுவேல் நொரியேகா புளோரிடாவில் 40 ஆண்டு கால சிறைத்தண்டனை பெற்றார்.
- ❖2006-இந்தியாவில் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இன்சாட்-4 செயற்கைக் கோளை ஏற்றிச் சென்ற ஜி.எஸ்.எல்.வி. விண்கலம் இயந்திரக் கோளாறினால் கடலில் வீழ்ந்தது.

### பிறப்புகள்

- ❖1509 - ஜான் கால்வின், பிரான்சிய இறையியலாளர் (இ. 1564)
- ❖1682- பர்த்தலோமேயு சீகன்பால்க், செருமானிய மதப்பரப்புனர், மொழியியலாளர் (இ. 1719)
- ❖1832-ஆல்வன் கிரகாம் கிளார்க், அமெரிக்க வானியலாளர் (இ. 1897)
- ❖1856-நிக்கோலா தெஸ்லா, செர்பிய-அமெரிக்க இயற்பியலாளர், பொறியியலாளர் (இ. 1943)
- ❖1871-மார்செல் புரூஸ்ட், பிரான்சிய எழுத்தாளர் (இ. 1922)
- ❖1919- கரிச்சான் குஞ்சு, தமிழக எழுத்தாளர் (இ. 1992)
- ❖1920 -ஓவன் சேம்பர்லேன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர் (இ. 2006)
- ❖1925- மகாதீர் பின் முகமது, மலேசியாவின் 4 ஆவது பிரதமர்
- ❖1930- இந்திரா பார்த்தசாரதி, தமிழக எழுத்தாளர்
- ❖ 1931- ஆலிசு மன்றோ, நோபல் பரிசு பெற்ற கனேடிய எழுத்தாளர்
- ❖1939-சரத் அமுனுகம, இலங்கை அரசியல்வாதி.
- ❖1940- மேக்நாத் தேசாய், இந்திய-ஆங்கிலேய பொருளியலாளர், அரசியல்வாதி
- ❖1944-கே.எஸ்.பாலச்சந்திரன், இலங்கை-கனேடிய நடிகர், நாடகக் கலைஞர் (இ. 2014)
- ❖1945- வெர்ஜினியா வேட், ஆங்கிலேய டென்னிசு ஆட்டக்காரர்
- ❖1947 - கோட்டா சீனிவாச ராவ், தென்னிந்திய நடிகர், பாடகர்
- ❖1949-சுனில் காவஸ்கர், இந்தியத் துடுப்பாளர்
- ❖1950- புரோகோபிசு பாவ்லோபூலோசு, கிரேக்க அரசியல்வாதி
- ❖1958- எல். கைலாசம், தமிழக புதின எழுத்தாளர்
- ❖1959- எலன் குராஸ், அமெரிக்க இயக்குநர், ஒளிப்பதிவாளர்
- ❖1960-சேத் கோடின், அமெரிக்க எழுத்தாளர்
- ❖1968 - அசின் விராத்து, பர்மிய பௌத்த துறவி
- ❖1980- ஜெசிக்கா சிம்சன், அமெரிக்க நடிகை, பாடகி

### இறப்புகள்

- ❖1851- லூயி தாகர், பிரெஞ்சு இயற்பியலாளர், கண்டுபிடிப்பாளர் (பி. 1787)
- ❖1953- சோமசுந்தரப்புலவர், ஈழத்துப்புலவர் (பி. 1878)
- ❖ 1990-காந்தரூபன், விடுதலைப் புலிகளின் கரும்புலி (பி. 1971)
- ❖2000-நாவேந்தன், ஈழத்து எழுத்தாளர் (பி. 1932)
- ❖2006-ஷமீல் பசாயெவ், செச்சினியப் போராளித் தலைவர் (பி. 1965)
- ❖2014-சோரா சேகல், இந்திய நடிகை (பி. 1912)
- ❖2015-உமர் சரீப், எகிப்திய நடிகர் (பி. 1932)

### சிறப்பு நாள்

- ❖ விடுதலை நாள் ([illegible] 1973)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 45 | 40 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 380 | 400 | 500 | 400 |
| தக்காளி | 250 | 260 | 240 | 250 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 35 | 40 | 40 | 40 |
| கோவா | 200 | 160 | 150 | 170 | 200 | 160 |
| கரட் | 180 | 340 | 220 | 200 | 280 | 200 |
| பூசணி | 50 | 40 | 20 | 30 | 60 | 35 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 100 | 100 | 40 | 60 | 80 | 130 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 95 | 100 | 160 | 110 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 90 | 100 | 240 |
| பாகற்காய் | 250 | 450 | 250 | 280 | 250 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 80 | 80 | 120 | 140 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 90 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 120 | 100 | 60 | 80 | 140 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 180 | 200 | 240 | 180 |
| பீற்றூட் | 180 | 160 | 60 | 180 | 200 | 260 |
| கறிமிளகாய் | 300 | 500 | — | 200 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 250-300 | 280 | 300 | 320 | 260 |
| போஞ்சி | 340 | 250 | 120 | 240 | 320 | 60 |
| கத்தரிதம்புள்ள | 50 | 20 | 35 | — | 60 | 15 |
| கீரை-1பிடி | 40 | 20 | 20 | 20 | 30 | 70 |
| தேசிக்காய் | 50 | 30 | 60 | 60 | 80 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 30-60 | 25-50 | 40 | 40-60 | 60 |
| இராசவள்ளி | 200 | 200 | 130 | 130 | 200 | 170 |
| வெங்காயப்பூ | 250 | — | 180 | 240 | 240 | 80 |
| முள்ளங்கி | 60 | — | 60 | 100 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 10 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 25 | 50 |
| ஈரப்பலா | 80 | 50 | 130 | 60 | 60 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரை சில காலம் ஏமாற்றலாம். பலரை பல காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எக்காலத்திலும் ஏமாற்ற முடியாது. ~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற முடியாது

தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் ஏராளம்.

எனினும் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் அடுத்த முதலமைச்சர் வேட்பாளர் பற்றிய தீர்மானங்களை நிறைவேற்றிய வண்ணமுள்ளனர்.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுங்கள் என்று தீர்மானம் எடுத்து அதனை எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி வைப்பதுதான் பொருத்தமான நடவடிக்கையாக இருக்கும்.

இருந்தும் பதவி ஆசை விடுவதாக இல்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவரைத்தான் முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்க வேண்டும் எனத் தீர்மானம் எடுப்பதற்குள்; தமிழ் மக்களின் எதிர்கால அரசியலையும் சின்னாபின்னமாக்கி தமிழ் மக்களுக்கு எதுவும் இல்லாமல் செய்கின்ற உள்நோக்கம் இருப்பதை உணர முடியும்.

எனினும் தமிழ் மக்கள் அரசியல் பற்றி - எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் பற்றி மிகத் தெளிவாக அறிந்து வைத்துள்ளனர்.

அதிலும் கொழும்பை மையப்படுத்தி அரசியல் நடத்துபவர்கள் தொடர்பில் எங்கள் மக்கள் மிகத் தெளிவோடு இருக்கின்றனர் என்பதால்,

எங்கள் மக்களின் தீர்ப்பு இம்மியும் பிசகாமல் தக்க பாடம் புகட்டுவதாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறு தமிழ் மக்கள் மிகவும் தெளிவாகவும் விழிப்பாகவும் இருப்பதால்,

அடுத்துவரும் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராக சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் வந்துவிடக்கூடாது என்பதில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

இதன்காரணமாக இத்தகையவர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இத்தகைய பிரசாரங்கள் உச்சமடைவதைப் பார்க்கும்போது, கடும் பயம் பிடித்துக் கொண்டு விட்டது என்பதை மட்டும் உறுதிபடத் தெரிவிக்க முடியும்.

எதுஎவ்வாறாக இருப்பினும் தேர்தல் என்று வருகின்றபோது மக்களைத் தேடிச் செல்கின்ற கட்டாயம் தேர்தலை எதிர்கொள்ளும் அத்தனை பேருக்கும் ஏற்படும்.

அவ்வாறான சூழ்நிலையில், தமிழ் மக்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்பர் என்பதும் அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாதவர்கள் அந்த இடங்களை விட்டுப் பதறி அடித்து ஓடுவர் என்பதும் நிதர்சனமான உண்மைகள்.

ஆக, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் என்பது தமிழ் அரசியல்வாதிகளுக்கு மிகப் பெரும் படிப்பினையைக் கொடுக்கப் போகிறது.

இந்தப் படிப்பினை தமிழ் மக்களின் விடியலுக்கு - விடுதலைக்கு நிச்சயம் வலுச்சேர்க்கும்.

ஆகையால் யார்தான் எதைக் கூறினாலும் தமிழ் மக்களின் தீர்ப்பு என்பது மேன்முறையீடு செய்ய முடியாத தீர்ப்பாக இருக்கும் என்பதில் எந்த ஐயமுமில்லை.

# சமுதாய சீர்திருத்த பணியை நிறைவேற்ற தவறிய இருநபர்களுக்கு சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

சமுதாய சீர்திருத்த பணி கட்டளையை நிறைவேற்ற தவறிய இரு நபர்களுக்கு 3 வாரங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று நேற்று கட்டளையிட்டுள்ளது.

மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டில் இரு நபர்களுக்கு எதிராக யாழ்ப்பாண பொலிஸார் கடந்த ஆண்டு வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்

அவர்கள் இருவரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் நீதிமன்றால் தண்டப்பணத்துடன் 200 மணித்தியாலங்கள் சமுதாய சீர்திருத்த பணியில் ஈடுபடுமாறும் கட்டளையிடப்பட்டது.

இந்தநிலையில் அவர்கள் இருவரும் 100 மணித்தியாலங்கள் மட்டுமே சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என சமுதாயம்சார் சீர்திருத்த அலுவலகரால் கடந்த தவணையின் போது நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

எனினும் அன்றைய தினம் குற்றவாளிகள் இருவரும் மன்றில் முன்னிலையாகவில்லை. அதனால் அவர்கள் இருவரையும் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று பிடியாணை பிறப்பித்திருந்தது.

குற்றவாளிகள் இருவரும் தமது சட்டத்தரணி ஊடாக நேற்று நீதிமன்றில் சரணடைந்தனர். வழக்கை விசாரணை செய்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் எஸ். சதீஸ்தரன்,

குற்றவாளிகள் இருவரும சமுதாய சீர்திருத்த பணிக்கு ஒழுங்காக சமுகமளிக்காததுடன் நீதிமன்றுக்கும் சமுகமளிக்கவில்லை. அதனால் இருவருக்கும் 3 வாரங்கள் சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு கட்டளையிட்டார். (ம-9)

# விவசாயிகளின் பிரச்சினைகளைத் தீர்க்க எமது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் எதிராளிகள் எத்தகைய குற்றச்சாட்டுக்களை முன்வைத்த போதிலும் தற்போது நாட்டின் விவசாயப் பொருளாதாரத்தின் பொற்காலமாகும் என ஜனாதிபதி அவர்கள் தெரிவித்தார்.

விவசாயிகளின் நீண்டகால நீர் தட்டுப்பாட்டிற்கு தீர்வினைப் பெற்றுக் கொடுககவும் அவர்களது பல பிரச்சினைகளை தீர்க்கவும் கடந்த மூன்றரை வருட காலமாக அரசாங்கம் முறையாக திட்டமிட்டு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

வெலிகந்த புதிய கமநல சேவைகள் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று பிற்பகல் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதனை தெரிவித்தார்.

நிகழ்வில் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, இன்று எமது நாட்டில் விவசாய மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களும் கஷ்டங்களும் அவர்களது எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கப்படாதிருக்க விவசாய பொருளாதாரத்தையும் விவசாயிகளின் வாழ்க்கையையும் சுபீட்சமாக்குவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது எனத் தெரிவித்தார்.

சிலர் அபிவிருத்தி செயற்றிட்டங்களினால் குறுகிய தீர்வுகளை எதிர்நோக்கிய போதிலும் தற்போது அபிவிருத்தி செயற்றிட்டங்கள் முறையான திட்டமிடலுடனும், எதிர்கால குறிக்கோளுடனுமே நடைமுறைபடுத்தப்படுகின்றன எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி,

சில ஊடகங்கள் குறிப்பிடுவதைப்போல நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட வில்லை எனவும், அரசாங்கம் என்ற வகையில் பாரிய செயற்றிட்டங்களை நிறை வேற்றி வருவதுடன், எதிர்கால சவாலகளை வெற்றி கரமாக எதிர்கொண்டு நாட்டிற்கும் மக்களுக்குமான பொறுப்பினை உரியவாறு நிறைவேற்றுவோம் எனவும் வலியுறுத்தினார். (ம)

# கோத்தா மீதான மோசடி வழக்கு ஒக்ரோபர் மாதத்துக்கு ஒத்திவைப்பு

எவன்காட் மோசடி தொடர்பில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பிலான விசாரணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த மோசடி தொடர்பிலான வழக்கினை விசாரிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவை விதித்துள்ளமை காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள் ளது.

மிதக்கும் ஆயுத களஞ்சிய கப்பலை பராமரிக்க எவன்காட் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதால் அரச நிதியில் சுமார் ஆயிரத்து 140 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

இது தொடர்பிலான வழக்கு விசாரணையானது நேற்று திங்கட்கிழமை கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்த விசாரணையை ஒத்திவைப்பதாக கொழும்பு பிரதான நீதவான் ரங்க திசாநாயக்க உத்தரவிட்டார்.

இந்த விசாரணையின் போது கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 7 பேரும் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# சட்டவிரோத மணல் அகழ்ந்தோர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோட்டம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்ந்தோர் பொலிஸாரை கண்டதும் ஹன்டர் வாகனத்தை விட்டு தப்பியோடியுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்லிபுரத்திற்கும் குடத்தனைக்கும் இடைப்பட்ட பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து அப்பகுதிக்கு பொலிஸார் சென்றபோது மணல் கடத்தலில் ஈடுபட்டோர் ஹன்டர் வாகனத்தை கைவிட்டு தப்பிச் சென்றனர்.

வாகனத்தை பொலிஸ நிலையம் கொண்டு சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதனகிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை வவுனியா பிரதேசத்தில மலையா பருத்திக்குளம் கிராமம், பண்டாரிக்குளம் கிராமம், தவசிக்குளம கிராமம், அட்டம்பஸ்கட கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும்.(இ-9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்



- கடவுள் ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர வேறு ஒரு கடவுள் உலகில் இல்லை.
- இரசாயனத்தைக் கற்பவன் இயற்கை என்னும் புத்தகத்தைப் படித்தறிவது போல, ஆன்மிகத்தைக் கற்பதற்கு படிக்க வேண்டிய நூல் மனித மனம்.
- எல்லையில்லாத சக்தி சுருள் சுருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தியை உணர முயல்வது தான் ஆன்மிகம்.
- சமயம் சார்ந்த தத்துவ உண்மைகளை மூளையில் ஏற்றி கொண்டு குழப்பிக் கொள்ள வேண்டாம். உறுதி பிறழாத ஒழுக்கமே ஆன்மிகத்தின் அடிப்படை.
- சுயநலம் ஒழுக்கக்கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இது தான் ஒழுக்கத்திற்கு கொடுக்கக்கூடிய ஒரே இலக்கணம்.
- மனதிற்கோ, உடலுக்கோ பலவீனத்தை உண்டாக்கும் எதையும் கைவிரலாலும் தீண்டக்கூடாது. பலமே வாழ்வு. பலவீனமே மரணம்.
- கடவுளுக்குச் சமமான ஆற்றல் சாத்தானுக்கும் உண்டு. ஆனால், கடவுளுக்குச் சுயநலம் கிடையாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண தடகளப் போட்டி முடிவுகள்

**வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில், வடமாகாணப் பாடசாலைகளின் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கான தடகளப் போட்டிகள் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.**

**வடமாகாணத்தைச் சேர்ந்த 12 கல்வி வலயங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்று வீர, வீராங்கனைகளுக்கு 12, 14, 16, 18 மற்றும் 20 வயதுப்பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.**

**இந்தத் தடகளப் போட்டிகளில் இதுவரையில் நடைபெற்ற போட்டி முடிவுகள்.**

**14 வயதுப்பிரிவு பெண்கள் உயரம் பாய்தல்**

முதலிடம் - ஜெ.சிவகி (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - ஆர்.நிலாவாணி (பளை மத்திய கல்லூரி), மூன்றாமிடம் - எஸ்.சுவர்ணா (மகாஜனாக் கல்லூரி).

**16 வயதுப்பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல்**

முதலாமிடம் - ஆர்.பிரியங்கா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),இரண்டாமிடம் - பி.மதுசா (வவுனியா மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் - எஸ்.சிலோஜா (உயரப்புலம் எம்.எம். ரி.எம்.எஸ்.)

**12 வயதுப்பிரிவு ஆண்கள் நீளம் பாய்தல்**

முதலாமிடம் - என்.பிரசாந்த் (கொக்குவில் கிழக்கு நாமகள் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - எஸ்.தனுஸன் பீரிஸ் (சென்.ஜோசப் மகா வித்தியாலயம்), மூன்றாமிடம் எஸ்.அபிஜன் (ஆனைக்கோட்டை றோ.க)

**20 வயதுப்பிரிவு பெண்கள் 5000 மீற்றர் ஓட்டம்.**

முதலாமிடம் - எஸ்.ஹேமப்பிரியா (வவுனியா சேர்ச் ஓவ் சிலோன் ரி.எம்.எஸ், இரண்டாமிடம் - ஏ.ஆன்மியுரட் (கன்னியர்மடம் மகா வித்தியாலயம்),மூன்றாமிடம் - எஸ்.திலகவதி (சுதந்திரபுரம் தமிழ் மகா வித்தியாலயம்)

**20 வயதுப்பிரிவு ஆண்கள் 5000 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - எஸ்.கிந்துசன் (வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - எம்.அனோஜன் (நெல்லியடி மத்திய கல்லூரி),மூன்றாமிடம் - ஏ.எம். பெய்ன்வெனு (சென்.பற்றிக்ஸ் கல்லூரி).

**20 வயதுப்பிரிவு ஆண்கள் கோலூன்றிப் பாய்தல்**

முதலாமிடம் - ஏ.புவிதரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), இரண்டாமிடம் - கே.நெத்தலி ஜொய்சன் (அருணோதயக் கல்லூரி), மூன்றாமிடம் - கே.கேதுசன் (மகாஜனாக் கல்லூரி)

**20 வயதுப்பிரிவு பெண்களுக்கான நீளம் பாய்தல்**

முதலாமிடம் - ஏ.அபிநயா (உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி), இரண்டாமிடம் - பி.பவித்திரா (இராமநாதபுரம் கிழக்கு ஜி.ரி.எம்.எஸ்), மூன்றாமிடம் - ஏ.மேரி தயாந்தினி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்)

**18 வயதுப்பிரிவு பெண்கள் குண்டெறிதல்**

முதலாமிடம் - பி.டிலக்சனா (யாழ்ப்பாணக் கல் லூரி), இரண்டாமிடம் - கே.பைரவி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),மூன்றாமிடம் - கே.கிருத்தியா (மூளாய் சிவப்பிரகாச வித்தி)

**14 வயதுப்பிரிவு ஆண்கள் உயரம் பாய்தல்**

முதலாமிடம் - சி.துசாந்தன் (மகாஜ்னாக் கல்லூரி), இரண்டாமிடம் ஆர்.சாவியோ (சென்.ஜோன்ஸ் கல்லூரி), மூன்றாமிடம் - கே.கனிஸ்ரன் (மல்லாவி மத்திய கல்லூரி).

**20 வயதுப்பிரிவு பெண்கள் ஈட்டி எறிதல்**

முதலாமிடம் - வை.யாழினி (புத்தூர் சிறி சோமஸ்கந்தா கல்லூரி), இரண்டாமிடம் - பி.சானு (மகாஜனாக் கல்லூரி), மூன்றாமிடம் - ரி.ஜன்சிகா (இளவாலை கன்னியர்மடம்)

**18 வயதுப்பிரிவு பெண்கள் நீளம் பாய்தல்**

முதலாமிடம் - ஏ.அனுசலா (முருங்கன் மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - ஜெ.அபிசா (அரிப்பு ஆர்.சி.ரி. எம்.எஸ்), மூன்றாமிடம் - ஜெ.ஜெனிஸ்ரா (சென்.சேவியர் பெண்கள் கல்லூரி)

**16 வயதுப்பிரிவு ஆண்கள் தட்டெறிதல்**

முதலாமிடம் - எஸ்.மிதுன்ராஜ் (ஹாட்லிக் கல்லூரி), இரண்டாமிடம் - பி.மிதுசன் (ஹாட்லிக் கல்லூரி), கே.அட்சயன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி).

**12 வயதுப்பிரிவு பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - எஸ்.அருணவி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - பி.லக்ஸனா (மகாஜனாக் கல்லூரி),மூன்றாமிடம் - ஜெ.நியோமி அஸ்திகா லம்பேர்ட் (பெரிய பன்றிவிரிச்சான் மகா வித்தியாலயம்)

**16 வயதுப்பிரிவு பெண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - வி.டன்சிகா (தேராவில் தமிழ் வித்தி).





இரண்டாமிடம் ஜெ.கிருசாந்தினி (பிரான்பற்று கலைமகள் வித்தி),மூன்றாமிடம் - எம்.டி.எஸ்.விலாசினி (மடுகந்த தேசிய பாடசாலை)

**18 வயதுப்பிரிவு பெண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - வி.அனுசியா (திருவையாறு மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - ஏ.சாதனா ரூபினி (தூயஜோசப் வாஸ் ம.வி), மூன்றாமிடம் - எஸ்.சுலக்ஸனா (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

**20 வயதுப்பிரிவு பெண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ரி.டன்சிகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம்), இரண்டாமிடம் - எஸ்.டிலக்சனா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி),மூன்றாமிடம் - ஏ.ஆன்மியுரட் (யாழ்ப்பாணம் கன்னியர்மடம்)

**18 வயதுப்பிரிவு ஆண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம்- என்.எம்.நசாத்கான் (பாத்திமா ம.ம.வி), இரண்டாமிடம் - ஜெ.ஜினீஸ்குமார் (பாலிநகர் ம.வி), மூன்றாமிடம் - என்.பத்மப்பிரியன் (விக்டோரியாக் கல்லூரி)

**20 வயதுப்பிரிவு ஆண்கள் 800 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஜெ.ஏ.றோஜன் பெர்னாண்டோ (அரிப்பு ஆர்.சி.ரி.எம்.எஸ்),இரண்டாமிடம் - என்.கிளாஸ்ரன் மஸ்கரிங் (பாத்திமா ம.ம.வி),மூன்றாமிடம் - ஆர்.டிலக்சன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**12 வயதுப்பிரிவு பெண்கள் நீளம் பாய்தல்**

முதலாமிடம் - எஸ்.அருணவி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்),இரண்டாமிடம் - யு.கயல்விழி (கொக்குத் தொடுவாய் ஜி.ரி.எம்.எஸ்),மூன்றாமிடம் - ஈ.ஹம்சிகா (பூந்தோட்டம் மகா வித்தியாலயம்)

**18 வயதுப்பிரிவு ஆண்கள் உயரம் பாய்தல்**

முதலாமிடம் - ஏ.அபிதன் (நெல்லியடி மத்திய கல் லூரி), இரண்டாமிடம் - ஏ.சிபியன் செரேன் (நானாட்டான் ம.வி),மூன்றாமிடம் - ஜி.உமாகிருஸ்ணசர்மா (சென். ஜோன்ஸ் கல்லூரி)

**16 வயதுப்பிரிவு பெண்கள் குண்டெறிதல்**

முதலாமிடம் - கே.யதுசா (மகாஜனாக் கல்லூரி). இரண்டாமிடம் - ஜெ.சுகன்யா (பாசையூர் சென்.அன்ரனிஸ் பெண்கள் வித்தி).மூன்றாமிடம் - எஷ்.டிலக்சனா (வட்டகண்டல் ஜி.ரி.எம்.எஸ்)

**12 வயதுப்பிரிவு பெண்கள் 60 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - எஸ்.அருணவி (கிளிநொச்சி மகா வித்தியாலயம்).இரண்டாமிடம் - ஜெ.நயோமி அஸ்திகா லம்பேர்ட் (பெரிய ப்ன்றிவிரிச்சான் ம.வி).மூன்றாமிடம் - யு.கயல்விழி (கொக்குத்தொடுவாய் ஜி.ரி.எம்.எஸ்)

**12 வயதுப்பிரிவு ஆண்கள் 60 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - கே.எம்.மலிக் (இலகப்பிட்டி ஆர்.சி.ரி. ள்ம்.எஸ்),இரண்டாமிடம் - ஏ.ஜோன் அருன்சிகன் (மந்துவில் அலசரட்ணம் வித்தி),மூன்றாமிடம் - ஜெ.நிவேதன் (புதுக்குடியிருப்பு ஆர்.சி.வித்தி)

**14 வயதுப்பிரிவு பெண்கள் 80 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - கே.தர்மிகா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி),இரண்டாமிடம் - எஸ்.ஜாசியப்பிரியா (மானிப்பாய் சென்.ஆன்ஸ் ஆர்.சி.ரி.எம்.எஸ்),மூன்றாமிடம் - என்.எ[illegible] டிஸநாயக்க (தர்மபால வித்தி)

**14 வயதுப்பிரிவு ஆண்கள் 80 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - டபிள்யூ.கே.ஏ.மதுசங்க (பரக்கும் மகா வித்தி),இரண்டாமிடம் - ஏ.அனோக்ஸன் (பாத்திமா ம.வி),மூன்றாமிடம் - வி.ஜீவிதன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி)

**16 வயதுப்பிரிவு பெண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஏ.சௌமியா பெர்னாண்டோ (அரிப்பு ஆர்.சி.ரி.எம்.எஸ்),இரண்டாமிடம் - ரி.அபிசா மார்க் (சென்.ஆன்ஸ் ம.ம.வி),மூன்றாமிடம் - வி.நிரோசா (கற்கிடந்தகுளம் ஆர்.சி.ரி.எம்.எஸ்)

**18 வயதுப்பிரிவு பெண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஏ.அனுசலா (முருங்கன் ம.வி), இரண்டாமிடம் - கே.குமுதா (நெல்லுக்குளம் கலைமகள் ம.வி),மூன்றாமிடம் - ஜெ.அபிசா (அரிப்பு ஆர்.சி.ரி. எம்.எஸ்)

**20 வயதுப்பிரிவு பெண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஏ.மேரி தர்சிகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),இரண்டாமிடம் - ஏ.அபிநயா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),மூன்றாமிடம் - எஸ்.பிரியதர்சினி (கௌரியம்பாள் ஜி.ரி.எம்.எஸ்)

**16 வயதுப்பிரிவு ஆண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - ஏ.சிப்ஸன் குரூஸ் (சென்.ஆன்ஸ் ம.ம.வி),இரண்டாமிடம் - ஜெ.சுலாசன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), மூன்றாமிடம் - எஸ்.தங்ஸன் சார்ளஸ் (பாத்திமா ம.வி)

**18 வயதுப்பிரிவு ஆண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

முதலாமிடம் - பி.டெனிஸ்ரன் (சென்.சேவியர் ம.ம.வி), இரண்டாமிடம் - பி.கஜத்தன் (மட்டுவில் சந்திரமௌலீசா வித்தி), மூன்றாமிடம் - எஸ்.சதுர்ஜன் (மகாஜனாக் கல்லூரி) (க-26)

தொடரும்...

# கலை ஒளியின் கிண்ணம் கார்மேல்போய்ஸ் அணியிடம்










கலைவாணி விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்தாட்டப் போட்டியில் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இத் தொடரின் இறுதியில் கார்மேல்போய்ஸ் எதிர் கலை ஒளி அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் கார்மேல்போய்ஸ் அணி கிண்ணத்தைப் பெற்று அசத்தியுள்ளது.

அணிக்கு 9 பேர் 8 ஓவர்கள் கொண்ட துடுப்பாட்ட போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கலை ஒளி அணி முதலில் துடுப் பெடுத்தாடியது.

நிர்ணயிக்கப்பட்ட 8 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 56 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் கலை ஒளி சார்பாக மோகன்ராஜ் 12, பிரதிஸ் 7, சிறி 8 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் கார்மேல்போய்ஸ் சார்பாக சுதர்ஜன் 02, அலன், அஜன், சுரேந்திரன் தலா 01 இலக்கினை கைப்பற்றினர்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கார்மேல்போய்ஸ் செல்ரனின் சிறப்பாட்டத்துடன் 6.3 ஓவர்களில் 02 இலக்கினை இழந்து வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் செல்ரன் 26, தீபன் 15, விதுசன் 10 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் சிறி, மோகன்ராஜ் ஓர் இலக்கினை கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் கார்மேல் போய்ஸ் வீரர் செல்ரனும், சிறந்த பந்து வீச்சாளராக கார்மேல்போய்ஸ் வீரர் சுதர்ஜனும், தொடர் ஆட்ட நாயகனாக கலை ஒளி வீரர் கோகுலனும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல்வரை பதவி நீக்க...

அறிவுறுத்தலைப் பெற்று ஆளுநர் அதனைச் செய்ய முடியும்

இவ்வாறு சட்டத்துறை வல்லுநர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையிலேயே வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளின் பதவியை முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸ பறித்தெடுத்தார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டின் ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படும் வகையில் கருத்துக்களைத் தெரிவித்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 10 பேரும் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் சட்டரீதியாக சவால்களை எதிர்கொள்ளவுள்ளனர்.

இந்த அரசியல்வாதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதற்கான ஆதாரங்களைப் பெற்றுள்ளதாக மகிந்த ஆதரவு கூட்டு எதிரணியின் மூத்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அவர்களின் பத்திரிகை அறிக்கைகள் மற்றும் காணொலிப் பதிவுகளைத் திரட்டி சட்டரீதியாக ஆராய்வதற்காக சபாநாயகர் கரு ஜயசூர்யவிடம் முன்வைக்கவுள்ளதாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பிரிவினைவாத இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசுவதும் நாட்டின் ஒற்றுமைக்கு சவால் விடுவதும் அரசியலமைப்பை கடுமையாக மீறும் செயலாகும்.

விஜயகலா விவகாரத்தில் அவரது நாடாளுமன்ற உறுப்புரிமையை நீக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. அவரை நீக்க முடியுமாயின் அதே குற்றத்தைச் செய்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவியிலிருந்து நீக்க முடியும்.

நாட்டின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் வகையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அ. அமிர்தலிங்கம், வி.தர்மலிங்கம், வி.என். நவரட்ணம் மற்றும் எஸ்.சிவசிதம்பரம் ஆகியோர் 1987ஆம் ஆண்டு ஜுன் 20ஆம் திகதி தமது நாடாளுமன்ற உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டனர் என்று சட்டத்துறை வல்லுநர் பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.(ம)

## உள்ளங்களை...

வடக்கிலுள்ள வீடுகளில் ஆகக்குறைந்தது ஒரு குடும்ப உறவினராவது யுத்தத்தில் இறந்துள்ளனர். யாழ்.மக்களின் முக்கிய பிரச்சினைகளை மறந்து மீண்டும் மோதலுக்குள் அம் மக்களை தள்ளிவிடுவது மிகவும் எளிதான காரியமாகும்.

இதனால் அங்குள்ளவர்களுக்கும் தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தி மீண்டும் அந்த மக்களின் உள்ளங்களை வேதனைப் படுத்துவதற்கும் நம்பிக்கை அற்ற நிலையை ஏற்படுத்துதல் மோதல்களை ஏற்படுத்துவது மிகவும் எளிதாகும்.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள உத்தியோகபூர்வ ஜனாதிபதி மக்கள் சேவை வேலைத்திட்டம் தொடர்பாக அமைச்சின் அதிகாரிகளுக்கும் முக்கியஸ்தர்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. அங்கு அமைச்சர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பிரதேசம் மிக முக்கிய அணுகுமுறையை கொண்ட பகுதியாகும். 30 வருடகால பிரச்சினை அங்கு தேங்கிக் கிடக்கின்றது. எம்மால் இந்த மக்களின் பிரச்சினைகளை மறந்து மீண்டும் மோதல்களுக்குள் தள்ளுவது மிகவும் லேசான காரியமாகும். அதேபோன்று அங்கிருப்பவர்களுக்கும் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி மீண்டும் அவர்கள் உள்ளங்களை வேதனைக்குள்ளாக்கி மோதல்களை உருவாக்குவது மிகவும் எளிதான காரியமாகும். இன்று நாம் செய்யவேண்டியது அதனை அல்ல. இன்று நாம் செய்யவேண்டியது கலந்துரையாடல் மூலம் பொதுமக்களின் பிரச்சினைகளை புரிந்துகொண்டு தீர்வுகாண்பதே ஆகும என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் பல பிரச்சினைகள் உண்டு. அந்தப்பிரதேசம் யுத்தம் நிலவிய பிரதேசமாகும். அரசாங்கத்தினால் வழங்கப்படும் உரிய சட்டஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் வாழும் பெரும்பாலானவர்களிடமில்லை: இவ்வாறான மக்களே அங்கு இன்று வாழுகின்றனர்.

சிலவேளைகளில் இந்த நாட்டு பிரஜைகள் என்ற ரீதியில் கிடைக்கவேண்டியது பல அவர்களுக்கு கிடைக்காமல் இருக்கலாம். வாழ்நாளில் மூக்குகண்ணாடியை பயன்படுத்தாத தாய்மாரும் தந்தையரும் இருக்கக் கூடும். தமது கணவர் பிள்ளைகள் சகோதரர்கள் ஆகியோர் வரும்வரையில் காத்துக் கொண்டிருப்போரும் பலர் அங்கு இருக்கின்றனர். இதேபோன்று விதவைகளும் பெரும் எண்ணிக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கின்றனர். பெண்களை தலைமைத்துவமாகக்கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை 30 ஆயிரம் ஆகும்.

இது சமூக மற்றும் பொருளாதார பிரச்சினையாகும். இதன் காரணமாக அரசாங்கம் என்ற ரீதியில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மக்களை நாம் மிகவும் முக்கியமாக கவனத்தில்கொள்ள வேண்டும்.

அவர்களுக்கும் கனவுகள் பல இருக்கக் கூடும். இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். பிறப்புச்சான்றிதழ், அடையாள அட்டை இல்லாதோர் விசேடமாக தமது பிள்ளைகள் திருமணம் முடித்திருந்த போதிலும் திருமணம் முடிக்காத பிள்ளைகளின் தாய் தந்தையரும் குடும்ப சுமையுடன் இந்த பிரதேசத்தில் இருந்து வருகின்றனர். சிலருக்கு சட்டரீதியிலான தன்மை எதுவும் இல்லை. தமக்கென்று வீடு காணி இல்லாதவர்கள் ஆயிரக்கணக்கானோர் இருக்கின்றனர் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உத்தியோகபூர்வ நடமாடும் சேவை நடத்தப்பட்ட வேளையில் அங்கு கூட்டம் நடைபெற்ற பின்னர் மண்டபத்திலிருந்தவர்கள் மத்தியில் வீட்டு அங்கத்தவர்கள் யுத்தத்தினால் உயிரிழந்திருப்பார்களாயின் கையை உயர்த்தி அதனை வெளிப்படுத்துமாறு நான் கேட்டுக்கொண்டேன். அப்பொழுது அந்த மண்டபத்திலிருந்து அனைவரும் ஒருமித்து கையை உயர்த்தினர்.

இதேபோன்று உறவினர்கள் யுத்தத்தில் இறக்காதவர்கள் இருந்தால் கையை உயர்த்துமாறு கேட்டபோது எவருமே கையை உயர்த்தவில்லை என்றும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார். வடக்கில் உள்ள அனைத்து வீடுகளிலும் ஆகக்குறைந்தது ஒரு உறவினராவது யுத்தத்தினால் இறந்துள்ளனர். இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இதனை நாம் சரியாக புரிந்துகொள்ள வேண்டும். இவர்களது தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு அரசாங்கம் என்ற ரீதியில் தீர்வைப்பெற்றுக்கொடுப்பது கடமையும் பொறுப்புமாகும். அதுமாத்திரமன்றி இது ஒரு புண்ணிய செயலாகும் என்றே நான் கருதுகின்றேன் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த பேச்சுவார்த்தையில் உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் ஜே.சி அலவத்துவல, பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர் செனவிரத்ன, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.ரி.கொடிகார மற்றும் திணைக்களங்களின் முக்கியஸ்தர்கள் முப்படையை சேர்ந்த முக்கிய அதிகாரிகள் யாழ். மாவட்ட செயலாளர், யாழ்.பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.(ம)

# பணிப்புறக்கணிப்புக்கு தயாராகும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் பணிப் புறக்கணிப்பு போராட்டங்களை நடத்தப்போவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அரசாங்க மருத்துவர்கள் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

அந்தவகையில் குறித்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாமல் விட்டால் எதிர்வரும் 17ஆம் திகதி நாடு தழுவிய பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளப்போவதாக அரசாங்க மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் வரிவிதிப்பு, தேசிய சம்பள கொள்கை, சிங்கப்பூருடனான சுதந்திர உடன்படிக்கையை இரத்து செய்ய வேண்டும், பதவி உயர்வு தொடர்பில் தீர்க்கப்படாத விடயங்கள் உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அச் சங்கம் அறிவித்துள்ளது. (ம)

## டெனீஸ்வரனால்...

தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கை விசாரித்த நீதியரசர்கள் விக்கிரமசிங்க, ஜனக டி சில்வா ஆகியோரைக் கொண்ட அமர்வு -கடந்தவாரம் வழங்கிய இடைக்கால உத்தரவில், டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய முதலமைச்சர் விக்னேஸ்வரனின் உத்தரவு செல்லுபடியற்றது என்றும், அவர் தொடர்ந்தும் அமைச்சராகவே இருப்பதாக கருதப்படுகிறார் என்றும் கூறப்பட்டிருந்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று குறித்த வழக்கு விசாரணை இடம்பெற்றது. அடுத்த இரண்டு வாரங்கள் வரை ஆளுநருக்கான அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதே சமயம், டெனீஸ்வரனை அமைச்சராக மீள நியமிப்பதில் முதலமைச்சர் தரப்பிற்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் அதையும் 23 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

இந்தநிலையில் நேற்றையதினம், அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தை தொடர்பு கொண்ட பா. டெனீஸ்வரன், நீதிமன்ற தீர்ப்பின் படி தான் அமைச்சா் என்றும், தனக்கும் அமைச்சர்களிற்குரிய ஆசனம் ஒதுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த தகவல் ஆளுநர் செயலகத்திற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவைத்தலைவரிற்கு நீதிமன்ற உத்தரவோ, ஆளுநரின் உத்தரவோ இதுவரை அனுப்பப்பட்டிருக்காத நிலையில், அவர் தன்னிச்சையாக எந்த முடிவும் எடுக்க முடியாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும் சபை அமர்வின் போது குறித்த விடயம் இன்று சபையில் எடுத்துக் கொள்ளப்படும் என தெரியவருகிறது. (ம-9)

## குற்றங்களுக்கு...

கூற்று அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றிவிட்டது என்பதையே எடுத்துக் காட்டுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

முத்தியங்கன ரஜமஹா விகாரைக்கு சென்ற அவர் அங்கு ஊடகவியலாளர்களை சந்தித்தபோது இதனைக் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளை மீள உருவாக்குவதாக விஜயகலா மகேஸ்வரன் கூறி இருக்கின்ற விடயம் பிழையானது.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் அந்த கூற்றின் பின்னணியில் சொல்லப்படாதவிடயம், அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கிய போலி உறுதிமொழிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்பதாகும்.

அரசாங்கம் முழு மக்களையும் ஏமாற்றியுள்ளது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது என்று மகிந்தராஜபக்ஷ கூறியுள்ளார்.

அதேநேரம் அரசாங்கத்தின் இயலாமையாலேயே நாட்டில் கொலை உள்ளிட்ட குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## கிளிநொச்சியில்...

சியத் தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் செய்த பொழுது டொல்பின் ரக வாகனத்துடன் இரு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் கிளிநொச்சி பொலிஸார் மூலம் இன்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த இருப்பதாகவும் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

இருப்பினும் மீட்கப்பட்ட சங்கு பெரிய அளவில் இருப்பதுடன் இது இடம்புரி சங்கு என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-312)

## சிங்கப்பூரின் முதலீடு...

ப்பங்கள் இந்த ஒப்பந்தம் மூலம் ஏற்படுவதாக சிங்கப்பூர் பிரதமர் குறிப்பிட்டார்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஊடாக புதிய தொழில்நுட்பம், அறிவு மற்றும் தொழில் வாய்ப்புக்களை அதிகளவில் இலங்கையருக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என இதன் போது தெரிவிக்கப்பட்டது.

பொருளாதார, நிர்வாக மற்றும் சமூகத் துறைகளில் இரு நாடுகளும் நெருக்கமாக செயற்படுவதன் மூலம் இரு நாடுகளுக்கும் அனுகூலமான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொள்ள முடியும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் சிங்கப்பூர் தரப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தி லீ, தகவல் மற்றும் தொடர்பாடல் அமைச்சர் எஸ்.ஈஸ்வரன், மனிதவள அமைச்சர் ஜொசபின் டியொ, இலங்கைக்கான சிங்கப்பூர் தூதுவர் சந்திராதாஸ் மற்றும் பிரதமரின் பிரத்தியேகச் செயலாளர் ஜெப்ரி சியொ ஆகியோர் கலந்துகொண்டதுடன், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ, அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திப் பிரதியமைச்சர் அனோமா கமகே, சிங்கப்பூருக்கான இலங்கைத் தூதுவர் நிமல் வீரரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர். (ம)

## மோட்டார் வாகன...

வித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்கள் தொடர்பிலான 33 குற்றச்சாட்டுக்களுக்குரிய தண்டப் பணம் நூற்றுக்கு 30 வீதம் தொடக்கம் 50 வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம)

## சீனா வழங்கிய...

கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அடுத்த வாரம் இரண்டு நாட்களுக்கான ஒத்திவைப்பு வேளை பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுள்ளது.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியான செய்திக்கு மகிந்த ராஜபக்ஷ கண்டிப்பாக நாடாளுமன்றத்தில் விளக்கம் வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

கொவிசெத
திகதி 2018.07.09
சீட்டிழுப்பு இலக்கம் 1815
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 17 33 61 68
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2018/07/09
சீட்டிழுப்பு இலக்கம் 3698
ஆங்கில எழுத்து M
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 7 7 2 5 4

சுபிரி வாசனா
திகதி 2018/07/09
சீட்டிழுப்பு இலக்கம் 1341
எழுத்து 08
வெற்றி இலக்கம் 17 38 39 54
06 47
தேசிய லொத்தர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் உறுப்பின...

மணிக்கு இவர் சுட்டு படுகொலை செய்ய ப்பட்டுள்ளார்.

செட்டியார் தெருவில் உள்ள அவரது காரியாலயத்திற்கு முன்பாக நேற்று காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். துப்பாக்கிச்சூட்டில் படுகா யமடைந்த இவர் கொழும்பு தேசிய வைத் தியசாலைக்கு கொண்டு சென்ற பின்னரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்து வருகின்றனர். நவோதய மக்கள் முன்னணியின் தலைவர் கிருஷ்ணா; கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில், சுயேட்சைக்குழுவில் போட்டியி ட்டு வெற்றியீட்டியவராவார்.

கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு கிரு ஷ்ணா பல உதவிகளை செய்து வந்ததுடன். இவரது அரசியல் வளர்ச்சி ஏனைய சிறுபா ன்மை கட்சிகளுக்கு பாரிய சவாலாக விளங் கியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## விஜயகலா கூறி...

அமைதி நிலவியது.

புதிய அரசியலமைப்பு முயற்சிகள் தொட ர்பாக லங்கா சமசமாஜ கட்சி ஏற்பாடு செய்தி ருந்த விளக்க கூட்டம் நேற்று முன்தினம் எட்டியாந்தோட்டை- ருவன்வெலவில் நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையா ற்றிய போதே எம்.ஏ.சுமந்திரன் இப்படி தெரிவித்தார்.

சுமந்திரன் உரையாற்றிக் கொண்டிருந்த போது, ஊடகவியலாளர்களிடம் இருந்து விஜய கலா விவகாரம் குறித்து கேள்வியெழுப்பப்பட் டிருந்தது. இதற்கு சுமந்திரன் பதிலளிக்கும் போது- 'புதிய அரசியலமைப்பு உருவாக்க பணிகள் தற்போது நடந்து வருகிறது. இதன் மூலம் தமிழீழத்தை கொடுக்கப் போவதாக உங்களிடம் சிலர் பூச்சாண்டி காட்டுகிறார் கள். ஆனால் உண்மை அதுவல்ல. உங்கள் முன் அரசியலமைப்பு முழுமையாக வைக்க ப்படும். நீங்கள் படித்தறியலாம். நாங்கள் புதி தாக எதையும் கோரவில்லை.

முன்னர் சிங்கள அரசுகள் ஒப்புக்கொண் டவற்றைத்தான் கோரியிருக்கிறோம். வட க்கு, கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய நிலம். அவர்கள் தம்மைத்தாமே ஆளும் சுயநிர் ணய உரித்துள்ளவர்கள் என்ற அடிப்படை யில் முன்னர் பல இணக்கப்பாடுகள் எட்டப் பட்டிருந்தன.

விடுதலைப் புலிகள் இருந்தபோது நீங்களே - உங்கள் தலைவர்களே- தர ஒப்புக் கொண்ட பல இணக்கப்பாடுகளை இப்போது தர மறுக்கிறீர்கள். புலிகள் இருந்தால்தான் இந்த நியாயமான விடயங்களை நீங்கள் செய்வீர்கள் என்றால், அந்த நியாயமான விட யங்களை தமது மக்களிற்கு பெற்றுக்கொடு க்க புலிகள் மீண்டும் வர வேண்டுமென கோருவதை தவிர விஜயகலாவிற்கும் ஏனைய தமிழ் தலைவர்களுக்கும் வேறு என்ன வழியிருக்கிறது?

புலிகள் மீள உருவாக்கப்பட வேண்டு மென விஜயகலா மகேஸ்வரனை வலியுறு த்த செய்தவர்கள் உங்கள் தென்னிலங்கை தலைவர்கள்தான். புலிகளின் காலத்தில் தமி ழர்களிற்கு வழங்க ஒப்புக்கொண்ட தீர்வை, நீங்களும் உங்கள் தலைவர்களும் இப்போது - புலிகள் இல்லாதபோதும்- வழங்க முன் வருவீர்களானால் விஜயகலா மகேஸ்வரன் போன்றவர்கள் அப்படி பேச வேண்டிவராது.

உண்மையில் விஜயகலா மகேஸ்வ ரனை அப்படி பேச தூண்டியவர்கள் உங்கள் தலைவர்கள்தான். நீங்கள் கோபப்பட வேண்டியது அவர்கள் மீதுதான். விஜயகலா மீது கோபப்பட்டு பலனில்லை என்று சுமந் திரன் தெரிவித்தார். (ம)

## நவாலி படுகொ...

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதல் இடம்பெற்று 23-ம் ஆண்டு நிறைவடைந்த நிலையில் நேற்று திங்கட்கி ழமை மாலை சென். பீற் றர்ஸ் தேவாலயத்தில் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத் தந்தை றோய் பேடிணன் தலைமையில் வழி பாடுகள் நடைபெற்றது. அதனை தொடர்ந்து தேவாலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு உள்ள நினைவுத்தூபியில் உயிரிழந்தவர்க ளின் உறவினர்கள் மலர் தூபி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

1995-ம் ஆண்டு ஜூலை மாதம் 9 திகதி நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயத்திலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப்படையினரின் மூன்று விமான ங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசிய தில் 147 பேர் பலியாகினர்.

குறித்த தினத்தில் வலிகாமம் பிரதேசங் களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தி னர் முன்னேறிப்பாய்தல் எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்கள் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீகதிர் காம முருகன் ஆலயத்திலும் தஞ்சமடைந்தனர்.

குறித்த தினத்தின் காலை திடீரென வந்த மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை மக்கள் தஞ்சமடைந்திருந்த தேவாலயம் மற்றும் ஆலயம் மீது வீசின.

இக்குண்டு வீச்சு சம்பவத்தில் குழந்தை கள் பெண்கள் உட்பட 147 பேர் அந்த இடத்தி லேயே உடல் சிதறி பலியாகியிருந்தனர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வடக்கு, கிழக்கு...

875 மாதிரிக் கிராமங்கள் நிர்மாணிக்க ப்படுகின்றன. இதில் 90 கிராமங்கள் மக்க ளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மாதிரிக் கிராம வேலைத்திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியளவில் இரண்டாயிரத்து 500 வீடுகளை மக்களிடம் கையளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டிலிருந்து இதுவரை தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்தின் மூலம் இரண்டு லட்சத்து 75 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளதாக வீடமைப்பு அபிவிரு த்தி அதிகாரசபையின் தலைவர் லக்வி ஜய சாகர பலன்சூரிய தெரிவித்துள்ளார். (ம)

## விஜயகலாவுக்...

50 கோடிக்கு விற்றவர்', 'இவருக்கு எம்.பி. பதவி எதற்கு?' போன்ற வாசகங்கள் உள்ளடக்கப்பட்டதாக இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நாளைய தலைமுறையினரின் வெளி யீடு எனக் குறிப்பிடப்பட்டு அச்சிடப்பட்டுள்ள இச்சுவரொட்டிகளை குடாநாட்டின் முக்கிய இடங்களில் காணக்கூடியதாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

என்றும் நாம் உங்களுடன், தமிழ் பேசும் மக்கள் எனக் குறிப்பிடப்பட்டு, கடந்த வாரத் தில் விஜயகலாவிற்கு ஆதரவான சுவரொட்டி களை யாழில் அவதானிக்கக் கூடியதாக இரு ந்தது. இந்நிலையில், நேற்று இவ்வாறு எதிர் ப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ம-60)

## சுவாசக் குழாயி...

உண்பதற்கு கொடுத்துள்ளார். குழந்தை கச்சான் வித்தை உண்டதும், புரைக்கேறி குழந்தை மயக்கமடைந்தது.

உடனடியாக குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

அங்கு சிகிச்சை பெற்று வந்த குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று காலை உயிரிழ ந்துள்ளது. இந்த மரண விசாரணையை தென்மராட்சி பிரதேச மரண விசாரணை அதிகாரி இ.இளங்கீரன் மேற்கொண்டிரு ந்தார். (ம-9)


**பதவி வெற்றிடம்**

**பொது சனத் தொடர்பாளர்**

(பெண்கள் மட்டும்)

சிங்களம் சரளமாக பேசக்கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது 25–65

தகைமை உள்ளவர்கள் நேரில் வரவும்.

பொது முகாமையாளர், வலம்புரி.

இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(இ)

**பதவிக்கான தேடல்**

யாழ்.குடாநாட்டில் முதன்மை நிறுவனமான DNMC சர்வதேச நிறுவனத்திற்கு நிலையான 12 பதவி வெற்றிடங்களுக்கு நேர்முகத் தேர்வு ஆரம்பமாகின்றது. விருப்பமுள்ளவர்கள் தொடர்புகொண்டு உங்களுக்கான நேரத்தை உறுதிப்படுத்துங்கள்.

- தகைமை O/L மட்டும் போதுமானது.
- முன்னனுபவம் அவசியமில்லை.
- வயதெல்லை 18 - 30.

தொடர்பு: 076 678 1042

(4885)

**FALC FRENCH LANGUAGE CENTRE**



**பிரெஞ்சு**

Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட DELF A1,A2,B1,B2.
V. ஜெகன் (Trained in France- 2007)

40, பலாலி வீதி, அரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 14.07.18 சனி 1 மணி.

181, பிரதான வீதி. நெல்லியடி.
021 320 2973
ஆரம்பம் :16.07.18 மாலை 3.30 மணி

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

(C3134)

**வேலைவாய்ப்புக்கள்**

➤ கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

வரவேற்பாளர் - பெண்

தகைமை-
- கணினி அறிவு.
- ஆங்கிலம், தமிழ் சரளமாக பேசக் கூடியவர்கள்.
- சிங்களமொழி தெரிந்திருப்பின் சிறப்பானது.

சமையலாளர் - இருபாலாரும் துப்புரவாளர் - ஆண்

சம்பளம்:கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும். (நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)

முடிவுத்திகதி: 13.07.2018

தொடர்புகளுக்கு : 076 202 6882

(4849)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

**af பிரெஞ்சு மொழி**



➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org

021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

(4847)

இந்தியாவில் இடம்பெறும் திருமணம், பூப்புனித நீராட்டு விழா நிகழ்வுகள் அனைத்தும் ஒழுங்கு செய்து தரப்படும்.

எமது சேவைகள் **Anamitra Tours**

- ➤ தங்குமிட வசதி
- ➤ திருமண பதிவு ஏற்பாடுகள்
- ➤ மண்டபம், கோவில்
- ➤ சாப்பாடு ஏற்பாடுகள்
- ➤ வீடியோ, போட்டோ
- ➤ மணப்பெண் அலங்காரம் மற்றும் திருமணக்கேக்
- ➤ திருமணக்கார்

விமான நிலையத்தில் இருந்து தங்குமிட வீடு வரை, தங்குமிட வீட்டிலிருந்து விமான நிலையம் வரை, போக்குவரத்து ஒழுங்கு செய்து தரப்படும்.

மேலதிக சேவைகள்

விமான பற்றுச்சீட்டு, விசா ஏற்பாடுகள், சுற்றுலா வசதிகள்

(4844)

4, Katpulam Street, Urumpirai East, Urumpirai. Jaffna, Srilanka.
+94 77 239 5714
+94 70 227 2787
+94 75 424 8465
info@anamitragroups.com
f anamitragroups

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**



(C-3067)

DELIVERY IN 3-5 DAYS

UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

0768226240

- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
- நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**A/L கருத்தரங்கு**

**ஊடகவியல்** A/L 2018

**என்.கஜிதரன்**

17,18,19 ஆம் திகதிகளில்.

நேரம்: 2.00P.M

பொருளியற் கல்லூரி, யாழ்.நகர்

தொடர்புகளுக்கு:- 077 395 6158 075 916 0431

(சி-3665)

**கணக்கீட்டுத் தொடர் கருத்தரங்கு**

இடம்:-
R.D.S கட்டிடம் மல்லாகம்

விடயம்:-
- முற்றிலும் எதிர்பார்க்கை பல்தேர்வு வினாக்கள்.
- கணக்கீட்டு நியமங்களின் வினாவிடைகள்.
- கம்பனி, பங்குடமை தொடர்பான எதிர்பார்க்கை வினாக்கள்.

ஆரம்பம்:-14.07.2018
(சனிக்கிழமை) 03.00 மணிக்கு

(4846)

ஆசிரியர்:- திரு.இ.வின்சன் (B.B.A, Dip Edu)

077 694 7162


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழு[illegible]யிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org